REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 செப்டெம்பர் 11 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 91 இல. 215 | Monday 11, September, 2023 | 20பக்கங்கள் | 50/-

## போலி இணையதளமூடாக பாரிய மோசடிகள் அதிகரிப்பு

**எச்சரிக்கிறார் தபால் மா அதிபர்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தபால் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளம் போன்று போலி இணையதளத்தை உருவாக்கி மோசடிகளை மேற்கொள்ளும் சம்பவங்கள் தொடர்பில் தபால் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

அந்த வகையில் தமது உத்தியோக பூர்வ இணையதளத்தின் ஊடாக 06

## கலால் சட்டத்தில் விரைவில் திருத்தம்

கலால் சட்டத்தை திருத்துவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். கலால் சட்டத்தில் பல்வேறு குறைபாடுகள் நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டார். நாட்டிலுள்ள மிகப் பழமையான சட்டங்களில் நூறாண்டுகளுக்கும் மேலான ஒன்றாக கலால் சட்டம் காணப்படுகிறது.

இது, அக்காலத்தின் தேவைகளின் அடிப்படையில் 1,000 க்கும் மேற்பட்ட கலால் அறிவிப்புகளுடன் அவ்வப்போது புதுப்பிக்கப்படும் சட்டமாக இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சனல் - 4 வெளியிட்ட குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்த ஜனாதிபதியால் குழு

**ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமை**

**முன்னாள் சட்ட மாஅதிபரின் கூற்று தொடர்பில் விசாரிக்க பாராளுமன்றத் தெரிவுக்குழு**

சனல் 04 தொலைக்காட்சி அண்மையில் ஒளிபரப்பிய சர்ச்சைக்குரிய ஆவண நிகழ்ச்சியின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், விசாரணை நடத்துவதற்கு ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் தலைமையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழுவொன்றை நியமிக்கவுள்ளார்.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் உண்மையைக் கண்டறியவும் நீதியை நிலை நாட்டுவதற்கும் ஏற்ற சாதகமான நடவடிக்கையாக ஜனாதிபதி இந்தக் குழுவை நியமிக்க உள்ளார்.

நாசகார ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் பிரதான சூத்திரதாரி ஒருவர் இருப்பதாக முன்னாள் சட்ட மாஅதிபர், இதே போன்ற குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார். எனவே, இந்நிலைமை எரியும் நெருப்பில் வைக்கோல் சேர்ப்பது போன்ற சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இந்தப் பிரச்சினைகளை பரந்தளவில் கவனத்திற்குக் கொண்டு 06

## ஜனாதிபதிக்கு பொப்பி மலர் அணிவிப்பு



பொப்பி மலர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு (09) பொப்பி மலர் அணிவிக்கப்பட்டது. இலங்கை ஓய்வுபெற்ற போர்வீரர்கள் சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் உபுல் பெரேரா பொப்பி மலரை ஜனாதிபதிக்கு அணிவித்தபோது பிடிக்கப்பட்ட படம்.

# நாட்டு மக்கள் அனைவருக்கும் விரைவில் மருத்துவ காப்புறுதி



### சிகிச்சைக்காக தனியார் வைத்தியசாலைக்கு செல்வதா? அரச வைத்தியசாலையை நாடுவதா? மக்களே முடிவு செய்வர்

**ஜோசப் பிரேசர் வைத்தியசாலை நூற்றாண்டு விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு**

வெளிநாட்டு நோயாளர்களை நாட்டுக்குள் ஈர்க்கும் வகையில் மருத்துவ சுற்றுலாத்துறை (Medical Tourism) மற்றும் சுகாதார சேவைகள் என்பவற்றை உயர் தரத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கு உகந்த, முழுமையான சுகாதார கொள்கை அவசியமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

**நாட்டில் Medical Tourism மேம்பாட்டுக்கு சுகாதார சேவையை உயர் தரத்தில் பேண வேண்டியது அவசியமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டு**

தெரிவித்தார். இதற்காக அதிகளவில் வைத்தியர்களை உருவாக்குவதற்கு வைத்திய பீடங்கள், பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க வேண்டியது அவசியம். அரசாங்கத்தினால் நாட்டு பிரஜைகளுக்கு மருத்துவக் காப்புறுதி பெற்றுக்கொடுக்கப் படவுள்ளதால், சிகிச்சைக்காக தனியார் வைத்தியசாலைக்குச் செல்வதா? அரச வைத்தியசாலையை நாடுவதா? என்பதை மக்கள் தீர்மானிப்பர் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜோசப் பிரேசர் வைத்தியசாலையில் (08) நடைபெற்ற நூற்றாண்டு விழாவிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். இலங்கையின் தேயிலை கைத்தொழிலை ஆரம்பிக்க முக்கிய பங்காற்றிய ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஜோசப் பிரேசர் மற்றும் அவரது மனைவி ஆகியோரால் இலங்கையில் நினைவுச் சின்னமாக அமைக்கப்பட்ட ஜோசப் பிரேசர் வைத்தியசாலை இந்நாட்டு அபிவிருத்திக்காக அவர்கள் செய்த அர்ப்பணிப்பை காண்பிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 06

**சனல் – 04 தகவல்கள் உண்மையானால்:**

## உள்ளக விசாரணையுடன் சர்வதேச விசாரணைக்கும் அரசாங்கம் தயார்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



ஈஸ்டர் பயங்கரவாத குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் உள்ளக விசாரணை மட்டுமன்றி சர்வதேச விசாரணைக்கும் அரசாங்கம் தயார் என நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் சனல் 4 காணொளியில் வெளியிடப்பட்டவாறு சம்பவங்கள் இடம்பெற்றிருக்குமானால், அது தொடர்பில் முழுமையான விசாரணைகளை 06

## கொழும்பு பல்கலை மாணவர்களுக்கு 144 வீடுகளுடனான அடுக்குமாடி விடுதி

**விரைவில் கையளிக்கப்படுமென்கிறார் அமைச்சர் பிரசன்ன**



கொழும்பு, பல்கலைக்கழக மாணவர்களின் விடுதி வசதிகளுக்காக 144 வீட்டுத் தொகுதிகளைக் கொண்ட அடுக்குமாடித் தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, நாரஹேன்பிட்டி, காலிங்க மாவத்தையில் அமைந்துள்ள இவ்வீட்டுத் தொகுதிகள் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதை, கொழும்பு பல்கலைக்கழகத்திடம் ஒப்படைப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் இவ்வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன 06

## இறக்குமதியாகும் உருளை கிழங்குக்கான வரி நீடிப்பு



இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்குக்கு விதிக்கப்பட்டுள்ள விசேட வரியை, மேலும் 04 மாத காலத்துக்கு நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, செப்டெம்பர் மாதம் 08 ஆம் திகதி முதல் எதிர்வரும் நான்கு மாத காலப்பகுதிக்கு இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்குக்கான, விற்பனை பொருட்களுக்கான விசேட வரி அமுலில் இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்குக்கு, இவ்வருடம் மார்ச் மாதம் 06

**பாதுகாப்பற்ற ரயில் கடவை:**

## எச்சரிக்கை சமிக்ஞை விளக்குகள் தொகுதி திட்டத்துக்கு உதவ தயார்

**அமைச்சர் பந்துலவின் கூற்றுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பதில்**

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நாட்டின் பிரஜைகளின் உயிர்களைப் பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கு எச்சரிக்கை சமிக்ஞை விளக்குத் தொகுதிகளை பொருத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் போக்குவரத்து, ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன அது தொடர்பில் தெரிவிக்கையில், பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கு எச்சரிக்கை சமிக்ஞை விளக்குத் தொகுதிகள் பொருத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது 06

**52 மதுபான தயாரிப்பு நிலையங்களில் சோதனை**

## போலி பாதுகாப்பு ஸ்டிக்கருடன் 44,000 மதுபான போத்தல்கள் மீட்பு

மதுபானம் தயாரிக்கும் 52 இடங்களில் நடத்தப்பட்ட சோதனைகளில், போலியான பாதுகாப்பு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்ட 44,000 க்கும் மேற்பட்ட மதுபானப் போத்தல்களை கைப்பற்றியதாக இலங்கை மதுவரித் திணைக்களம் பாராளுமன்றத்தில் வழிநடத்தல் குழுவுக்குத் தெரிவித்தது. இவ்வாறு போலியான ஸ்டிக்கர்களுடன் மதுபானப் போத்தல்களிருந்த ஒரு நிறுவனத்திடம் ஏறத்தாழ 40 மில்லியன் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டிருப்பதாகவும் மதுவரித் திணைக்களம் 06

## SMS செய்திகள் ஊடாக மோசடிகள் அதிகரிப்பு

**கணினி அவசர செயற்பாட்டு பிரிவு எச்சரிக்கை**

SMS

கையடக்கத் தொலைபேசிகளூடாக அனுப்பப்படும் போலியான குறுஞ் செய்திகள் (SMS) ஊடாக தவறான தகவல்கள் பரப்பப்படுவதாக இலங்கை கணினி அவசர செயற்பாட்டு பிரிவு மக்களுக்கு அறிவித்துள்ளது. இது தொடர்பில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளமை குறித்துள்ளதால், அவதானமாக இருக்குமாறும் எச்சரிக்கப்பட்டுள்ளது. தபால் மூலம் பொதியொன்று கிடைத்துள்ளதாகவும் முகவரி தெளிவின்மை காரணமாக அதனைத் திருப்பி 06

## 4 மாகாணங்களில் கடும் மழைக்கான சாத்தியம்

**காற்றின் வேகமும் அதிகரிக்கலாம்**

சப்ரகமுவ, மேல்,தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அத்துடன் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி, மாத்தறை மற்றும் புத்தளம் மாவட்டங்களின் சில இடங்களிலும் 50 மில்லி மீற்றரிலும் கூடிய பலத்த மழை பெய்யலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

மன்னார், வவுனியா மற்றும் அநுராதபுரம் 06

## சனல் - 04 விவகாரம்: அரசின் சார்பில் பதிலளிக்க உயர் மட்டம் ஆராய்வு

**பாதுகாப்பு சபை தீர்மானத்தின் பின் இறுதித் தீர்மானம்**



சனல் 04 ஊடக நிறுவனத்துக்கு அரசாங்கம் சார்பில் உத்தியோக பூர்வமாக பதிலளிக்குமாறு பல தரப்பினரும் வலியுறுத்தியுள்ளதால், எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள தேசிய பாதுகாப்பு சபையின் தீர்மானத்தின் பின்னர், இதுகுறித்து அமைச்சரவை இறுதித் தீர்மானத்தை எடுக்கவுள்ளதாக அறிய வருகிறது. இவ்விடயம் சம்பந்தமாக ஆளும் தரப்பின் பிரதம கொரடாவும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தொடர்பில் சனல் 04 ஊடக நிறுவனம் வெளியிட்டுள்ள காணொளி குறித்து 06

## ஊழலுக்கு எதிரான சட்டத்தை அமுலாக்கி விசேட வர்த்தமானி

**15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது**

(லோரன்ஸ் செல்வநாயகம்)



ஊழல் மோசடி எதிர்ப்பு சட்டம் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ள நிலையில், இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ விசேட அறிக்கையொன்றின் மூலம் இது தொடர்பில் தெரிவித்துள்ளார். அத்துடன் செப்டெம்பர் 15 ஆம் திகதி முதல் இந்த ஊழல் மோசடி சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகள் நடைமுறைக்கு வருமென்றும் அவர் 06

## தேசிய கடன் மறுசீரமைப்பினால் EPFக்கு 04 வீத இழப்பே ஏற்படும்

**சீரமைக்காவிடின் 21% நட்டத்தை எதிர்கொள்ள நேரிடும்**

(லோரன்ஸ் செல்வநாயகம்)



அரசாங்கம் தேசிய கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளும் போது ஊழியர் சேமலாப நிதியம் மறுசீரமைப்புக்கு உள்ளாவதால், ஊழியர் சேமலாப நிதிக்கு 04 வீதமான நட்டத்தையே எதிர்கொள்ள நேருமென மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும், அவ்வாறான மறுசீரமைப்பு இடம்பெறாவிட்டால் ஊழியர்சேமலாப நிதியத்திற்கு 21 வீத நட்டத்தை எதிர்கொள்ள வேண்டிவரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழு முன்னிலையில் மத்திய வங்கியின் அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர். இக் குழுவில் பங்கேற்றிருந்த மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவே 06

## உள்ளூராட்சி சபை நிறுவனங்களின் சகல ஊழியர்களுக்கும் நிரந்தர நியமனம்

**இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர**

(லோரன்ஸ் செல்வநாயகம்)



உள்ளூராட்சி சபை நிறுவனங்களில் தற்காலிக, அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் கடமைபுரியும் ஊழியர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர தெரிவித்துள்ளார். இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், 06



03 **நீர் தேக்கங்களில் நீர் மட்டம் உயர்வு நீர் மின் உற்பத்தி 20 வீதம் அதிகரிப்பு**
மின்சார சபையின் பொதுமுகாமையாளர்



03 அஸிதிஸி ஊடக புலமைப் பரிசில் 2023
**விண்ணப்பங்கள் அக்.11 க்கு முன் அனுப்புமாறு கோரிக்கை**

# நகர்வலம்



## தம்பதெனிய அல்ஹிஜ்ராவில் புதிய கட்டடத்திற்கு அடிக்கல்



**அஷ்ரப் ஏ சமத்**

குருநாகல் தம்பதெனிய அல் ஹிஜ்ரா வித்தியாலயத்தில் குவைத் நாட்டின் நன்கொடை நிதியின் மூலம் புதிய வகுப்பறைக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் சனிக்கிழமை (09) கல்லூரி அதிபர் திருமதி எம்.எஸ்.எப் சிபானா தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக குருநாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரனி தயாசிறி ஜயசேகர மற்றும் குவைத் நாட்டின் இலங்கைத் தூதரக பிரதிநிதி அஷ்ஷெய்க் எம். பிர்தௌஸ், அல்ஹிமா இஸ்லாமிய நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.ஏ. நூறுல்லா (நளீமி) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில்

## மிளகாய் பயிர்ச்செய்கையினை விஸ்தரிக்க விவசாய திணைக்களம் நடவடிக்கை

### உலக வங்கி நிதியுதவி

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

உலக வங்கியின் நிதி உதவியுடன் நவீன விவசாய முறை திட்டத்தின் மூலம் அநுராதபுரம் மாவட்டத்தில் மிளகாய் பயிர்ச்செய்கையினை விஸ்தரிப்பதற்கு விவசாய திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதென அநுராதபுரம் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தேனுவர தெரிவித்தார்.

மேற்படி திட்டம் மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் மையப்படுத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் வாரியாக பயனாளிகளை தெரிவுசெய்து மிளகாய் பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கு விவசாய திணைக்களம் திட்டமிட்டுள்ளது.



இதன் முதற்கட்ட செய்கை திறப்பனை பிரதேச செயலாளர் பிரிவின் புளியங்குளம் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 25 பயனாளிகள் நவீன முறையில் மிளகாய் பயிர்ச்செய்கையினை ஆரம்பித்துள்ளதுடன் அதன் மூலம் சிறந்த அறுவடையினையும் பெறுவதற்கு ஆரம்பித்துள்ளனர்.

அதற்காக வேண்டி 16 இலட்சம் ரூபா பெறுமதியான சிறந்த மிளகாய் விதைகள் மற்றும் உரம் கிரிமிநாசினிகள் ஜீ.ஐ.குழாய்கள் என்பவற்றை விவசாயத் திணைக்களம் வழங்கியுள்ளது. நவீன விவசாய முறையின் கீழ் ஒரு விவசாயி அரை ஹெக்டயார் நிலத்தில் மிளகாய் செய்கையினை மேற்கொள்ள முடியுமென்பதுடன் அதிக இலாபத்தினையும் ஈட்டிக்கொள்ள முடியுமென விவசாய திணைக்கள அநுராதபுரம் மாவட்ட பணிப்பாளர் தேனுவர மேலும் தெரிவித்தார்.

## விஞ்ஞானத் துறையில் பாத்திமா சஜினா 2ஏ, 1 பீ சித்தி



**திறப்பனை தினகரன் நிருபர்**

வெளியான க. பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் கஹட்டகஸ்திகிலிய மு.ம. வித்தியாலய மாணவியான ஜவ்பர் பாத்திமா சஜினா என்ற மாணவி உயிரியல் விஞ்ஞான துறையில் 02 ஏ 01 பி சித்தி பெற்று 1.8086 இஸட் புள்ளியுடன் மாவட்ட மட்டத்தில் 34 வது இடத்தை பெற்று மருத்துவ துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். மேற்படி மாணவி பாடசாலைக்கு பெருமையையும், புகழையும் தேடித் தந்துள்ளார் என அதிபர் சஹாப்தீன் தெரிவித்தார்.

## பாடசாலை மாணவர்களின் அறிவு திறமைகளை மேம்படுத்தும் திட்டம்





பாடசாலை மாணவர்களின் அறிவு திறமைகளை மேம்படுத்தும் வகையிலான வேலைத்திட்டத்தை நாடெங்கிலும் முன்னெடுப்பது குறித்து தம் சவிய சர்வதேச மன்றத்தினர் ஜனாதிபதியின் பொதுமக்கள் ஒருங்கிணைப்பு பணிப்பாளர் நாயகம் துசித கல்லொழுவவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச்சமயம் நடைமுறையிலுள்ள கல்வி முறைமையை முன்னோக்கி கொண்டு செல்வதோடு பிள்ளைகளின் திறமைகளை அடையாளம் கண்டு நாட்டுக்கும் உலகுக்கும் பொருத்தமான தொழிலாளர்களை உருவாக்கும் வகையில் க.பொ.த சாதாரண தரம், உயர்தரம் மற்றும் பல்கலைக்கழகம் வரையான கல்வியை முன்னெடுப்பதோடு தொழிற்கல்வியும் பெற்றுக்கொடுக்கப்படும்.

இதன்போது, மாணவர்களுக்கு நாட்டுக்கும் உலகிற்கும் பொருத்தமான தொழிற்பயிற்சியை பெற்றுக்கொடுப்பதன் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

06 மாத கால உஷ்ணமான காலநிலைக்கு பின்னர்

## ஹம்பாந்தோட்டையில் கடும் மழை; இயல்பு நிலை பாதிப்பு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டையெங்கும் கடந்த ஆறு மாத காலத்திற்கு மேலாக நிலவிவந்த உஷ்ணமான மற்றும் வரட்சியான காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு தற்பொழுது அடை மழை பெய்து வருவதினால் மக்களது அன்றாட வாழ்க்கை ஸ்தம்பிதமடைந்துள்ளது.

கடந்த காலங்களில் வரட்சியான காலநிலையின் காரணமாக பல்வேறு பிரதேசங்களிலும் மக்கள் குடிநீர் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்ததோடு விவசாயிகளும் விவசாயத்திற்கு போதியளவு நீர் இன்றி பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

குடிநீர், விவசாயத்திற்கு தேவையான நீரைப் பெற்றுக் கொடுக்கும் பிரதான குளங்களும் வற்றிப்போயிருந்தன. மிருகங்களும் நீர் மற்றும் புற்கள் இன்றி உணவைபெறுவதில் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வந்தன.

### வற்றிப்போயிருந்த குளங்கள் நிரம்பி வழிகின்றன



தற்பொழுது ஹம்பாந்தோட்டையெங்கும் கடந்த சிலதினங்களாக நீண்டகால இடைவெளிக்குப்பிறகு அடை மழை பெய்து வருகிறது. இதனால் வற்றிப் போயிருந்த குளங்களிலும் நீர்நிறைய ஆரம்பித்துள்ளன. அத்தோடு பெரும் போகத்திற்கான நெல் அறுவடை ஆரம்பித்துள்ளதினால் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. சந்தையில் அரிசியின் விலை அதிகரித்துள்ளதோடு மரக்கறி வகைகளின் விலைகளும் குறைந்து காணப்படுகிறது.

மீன்பிடி மற்றும் உப்பு உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. மழையின் காரணமாக மக்கள் தங்களது அன்றாடசெயற்பாடுகளில் ஈடுபடும் போது பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

## அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை உ/த பரீட்சையில் சிறந்த பெறுபேறு

**அஜ்வாத் பாஸி**

களுத்துறை மாவட்டத்தில் முன்னணி பாடசாலைகளிலொன்றான பேருவளை, சீனன் கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையிலிருந்து இம்முறை க.பொ.த உ/த பரீட்சைக்கு வர்த்தக பிரிவில் தோற்றிய மாணவர்களுள் 07 மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப்பெற்று பல்கலைக்கழக நுழைவிற்கு தகுதிபெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் இப்றாஹீம் காஸிம் தெரிவித்தார்.

பாடசாலையிலிருந்து வர்த்தக பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிய 24 மாணவர்களுள் எம்.ஐ.எம். இஷாக் 3ஏ, எம்.என்.எம். நப்ஸான் 3ஏ, எம்.ஆர்.எம். ரிகாஸ் 2ஏ, 1பீ, எம்.எப். பஸ்லி ஹஸ்ஸான் 2ஏ, 1பீ, எம். ஜே.எம். நவீட் 1ஏ, 2பீ, எம்.ஆர். அப்துல் ஹக்கீம் 1ஏ, 2பீ, ஏ.எஸ்.எம். ஸப்ரின் 1ஏ, 2பீ ஆகிய 07 மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவிற்கு அனுமதி பெற்றுள்ளதாகவும் ஏனைய மாணவர்கள் அனைவரும் மூன்று பாடங்களிலும் சித்திபெற்று ஏனைய வெளிவாரி துறைகளில் கல்வியைத் தொடர சித்தி பெற்றுள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

மாணவர்கள் உட்பட அவர்களை பயிற்றுவித்த ஆசிரிய ஆசிரியைகள், பாடசாலை சமூகத்திற்கும் பாடசாலை அதிபர் நன்றிகளை தெரிவித்துக் கொண்டார். எதிர்வரும் காலங்களில் விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், தொழில்நுட்பம், கலை ஆகிய துறைகளும் கட்டியெழுப்பப்படும் எனவும் அதிபர் நம்பிக்கை தெரிவித்தார்.



இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 157 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பாணந்துறை வலான விக்சோப மாதா கத்தோலிக்க ஆலயத்தில் இடம்பெற்ற விஷேட ஆராதனை நிகழ்வில் பாணந்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள், பிரமுகர்களும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வின் விஷேட அங்கமாக சர்வ மத சிறுவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள் இதன்போது அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

(படம் பாணந்துறை மத்திய குறூப் நிருபர் )

## வெலிகம அறபா தேசிய பாடசாலை வரலாற்றில் சிறந்த பெறுபேறு

**வெலிகம தினகரன் நிருபர்**

வெளியாகிய க.பொ.த உயர்தர பரீட்சையின் பெறுபேற்றின்படி ,வெலிகம அறபா தேசிய பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பாடசாலைக்கும், பாடசாலை சமூகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர். குறிப்பாக விஞ்ஞானம் , தொழில்நுட்பம், கலை மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளில் வரலாற்றுச் சாதனைகளை இப்பாடசாலை படைத்துள்ளதாக பாடசாலை அதிபர் முதஹ்ஹர் தெரிவித்தார்.

உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் தோற்றிய மாணவர்களுல் , சுலைஹா அலீம் , ஸம்ரா மர்யம், ஸாபித் ஸர்ஹான் மற்றும் எப்.ஆர் யூனுஸ் பஸ்லுர்ரஹ்மான் ஆகியோர் 2" ஏ" 1 "பீ" பெற்று சாதனை படைத்துள்ளதோடு பல்கலைக் கழக மருத்துவ பீடத்துக்கும் தகுதி பெற்றுள்ளனர். இவர்களுல் ஒரு மாணவி (Merit Pass) முறையில் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பௌதீக விஞ்ஞானத் துறையில் தோற்றிய 25 மாணவர்களுள் நூறுல்ஹம்தா 2 "ஏ", 1 "பீ" , ஆமிலா அமீர், ஹப்ஸா ஹம்ஸா ஆகியோர் 2 " ஏ" 1 "ஸீ ", நுஹா ஷரப்தீன் 1"ஏ" 2 "ஸீ " சித்திகளைப் பெற்றுள்ளனர். மேலும் தொழிநுட்ப பிரிவில் தோற்றிய மாணவர்களுல் 15 பேர் பல்கலைகழகத்துக்கு தெரிவு செய்யப்படவுள்ளனர்.

எம்.முபீஸ் எனும் மாணவன் பொறியியல் தொழில்நுட்ப துறையிலும், எம்.என்.எப் . ரிழ்வானா எனும் மாணவி உயிர் முறைமை தொழில்நுட்பத் துறையிலும் 3 "ஏ" சித்தி பெற்றுள்ளனர். இவ்விரு மாணவர்களும் (Merit Pass) முறையில் பல்கலைகழகத்துக்கு தெரிவு செய்யப்படவுள்ளனர். இது தவிர எஸ். அர்ஷத் மௌலானா , எம்.எச்.எப் ஹாஜரா ஆகியோர் 2 "ஏ" 1 "பீ" சித்திகளையும் எம்.ஆர்.எம். ரிகாஸ் 1 "ஏ" 2 "பீ" சித்திகளையும், எம்.எச்.எப். நஸ்மின் 3 "பீ" சித்திகளையும் பெற்றுள்ளனர். இதே துறையில் மேலும் 10 மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

மேலும் கலைத்துறையில் தோற்றிய மாணவர்களுல் எம்.ஆர்.எப். இல்மா 2"ஏ''1" பீ" மற்றும் எம்.ஐ.எப் கலீமதுல் பாஸிய்யா 1 "ஏ" 2 "பீ" ஆகியோர் சிறந்த பெறுபேற்றை பெற்று சாதனைப் படைத்துள்ளதோடு ,மேலும் பலர் சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ளனர். வர்த்தக பிரிவில் தோற்றிய 26 பேரில் எம்.எப்.எப் முபாஸா 2"ஏ" 1 "பீ" மற்றும் முபாஸ் அஹ்மது 1 "ஏ" 2 "ஸீ " சித்தி பெற்றுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட மாணவர்களைத் தவிர 40க்கும் மேற்பட்ட மாணவர்கள் வெவ்வேறு துறைகளில் பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப்பட வாய்ப்புள்ளதாக கல்லூரி அதிபர் எம்.டி.எம். முதஹ்ஹர் மேலும் தெரிவித்தார்.

## போலி விசாவில் இத்தாலி செல்ல முற்பட்ட இளைஞன் விமான நிலையத்தில் கைது

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

போலியாக தயாரிக்கப்பட்ட விசாவைப் பயன்படுத்தி இத்தாலிக்குத் தப்பிச் செல்ல முயற்சி செய்த இளைஞர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை (8) மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். மேற்படி தினத்தன்று மாலை 06.40 மணிக்கு கத்தாரின் தோஹா நோக்கிப் புறப்படவிருந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL 217 இல் பயணிப்பதற்காக குறித்த இளைஞன் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.



அங்கு குறித்த இளைஞன் தனது அனுமதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவிமானநிலையத்தில் சமர்ப்பித்த ஆவணங்கள் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் குடிவரவு, குடியகல்வு பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அங்கு நடத்தப்பட்ட தொழில்நுட்ப சோதனையில், குறித்த இளைஞன் தம்வசம் வைத்திருந்த போலாந்து குடியுரிமை விசா போலியாக தயாரிக்கப்பட்டது என்பது உறுதியானது.

பின்னர் குறித்த இளைஞரிடம் மேற்கொண்ட விசாரணையில், மேற்படி விசா 40 இலட்சம் ரூபாய்க்கு ஒரு தரகரிடமிருந்து தான் பெற்றுக்கொண்டதாக அந்த இளைஞன் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த இளைஞன் பயணத்திற்காக எடுத்துவந்த , பயணப் பை மற்றும் கைப்பையை அதிகாரிகள் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது, குறித்த இளைஞனிடம் இருந்த கைப் பையில் மேலும் போலியாக தயாரிக்கப்பட்ட சில ஆவணங்களும் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து,குறித்த இளைஞனைக் கைது செய்த குடிவரவு மற்றும் குடியகல்வு பிரிவு அதிகாரிகள், அந்த இளைஞனை மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.



களுத்துறை அஹதியாப் பாடசாலையின் மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும் பெற்றார் கூட்டமும் அஹதியா அதிபர் அல் ஹாஜ் சிராப் முபஷ்ஷிர் தலைமையில் களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. விழாவின் பிரதம அதிதியாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் அல் ஹாஜ் உவைஸ் முகம்மத் கலந்து சிறப்பித்தார். பிரதம அதிதி மாணவர் ஒருவருக்கு சின்னம் அணிவிப்பதை படத்தில் காணலாம்.

(படம் :மொறட்டுவை மத்தி, பாணந்துறை மத்திய விசேட நிருபர்கள்)

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 செப்டெம்பர் 11 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN


தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# பாடசாலை மூலதன சந்தை சங்கங்கள் எதிர்காலத்துக்கான முதலீடாக அமையும்

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரஜீவ பண்டாரநாயக்க

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக் கருவின் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் 100 பாடசாலைகளில் நிறுவப்பட்டுள்ள மூலதன சந்தை சங்கங்கள், எதிர்காலத்துக்கான முதலீடாகுமென கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரஜீவ பண்டாரநாயக்க தெரிவித்தார்.

நிதி தொடர்பான கல்வியறிவை மேம்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான நபர்கள், மாணவர் சந்ததியே எனவும் பாடசாலைகள் ஊடாக இத்திட்டத்தை ஆரம்பிக்கும் ஜனாதிபதியின் இத்தீர்மானம் காலத்திற்குப் பொருத்தமான முடிவு எனவும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட '101 கதா' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரஜீவ பண்டாரநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த ரஜீவ பண்டாரநாயக்க,

'மூலதனச் சந்தை சங்கங்கள்' மூலம் பங்குச் சந்தை தொடர்பில் முறையான தெளிவை மாணவர்களுக்கு வழங்க எதிர்பார்க்கிறோம். இத்திட்டத்தின் முதற்கட்டமாக உயர்தரப் பெறுபேறுகளின்படி வர்த்தகத் துறையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 100 பாடசாலைகள் தெரிவு செய்யப்ப டும். அவற்றில் நூறு மூலதனச் சந்தைச் சங்கங்கள் நிறுவப்படவுள்ளன. இதன் மூலம் மாணவர்களுக்கு மூலதனச் சந்தை பற்றிய விரிவான புரிதல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் மாணவர்கள் பரந்த அறிவைப் பெறுவதோடு, நடைமுறை அறிவையும் பெறுவதற்கான வாய்ப்புக் கிடைக்கிறது.

வங்கித் துறை பற்றிய அறிவு பாடசாலைகளில் கொடுக்கப்பட்டாலும், மூலதனச் சந்தை பற்றிய அறிவை அளிக்கும் நிலை குறைவாகவே உள்ளது. நிதி அறிவும் குறைவாக உள்ளது. எனவே, அதையும் தாண்டி வணிக ரீதியில் மட்டுப்படுத்தப்பட்ட அறிவை விரிவுபடுத்துவது, அதாவது கலை, அறிவியல், கணிதம் போன்ற எந்தத் துறை மாணவர்களுக்கும் மூலதனச் சந்தை பற்றிய ஓரளவு அறிவை இச்சங்கங்கள் மூலம் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் குழந்தைகளிடம் நிதியியல் படிப்பில் புதிய பரிமாணத்தை உருவாக்க எண்ணுகிறோம்.

இங்கு செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளுக்கு மேலதிகமாக நடைமுறை அறிவை வழங்க



முயற்சிக்கிறோம். தற்போதைய தலைமுறை மாணவர்களின் மூலதனச் சந்தை பற்றிய அறிவையும் புரிதலையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி, இது அவர்களை சமூகத்துடன் இணைவதற்காக தயார்படுத்தப்படுகிறது. குறிப்பாக, அவர்கள் சுயமாக தொழில்முனைவோராக மாறவும், தங்களையும், நாட்டையும் திறம்பட மேம்படுத்துவதில் ஈடுபட ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

இந்தத் திட்டம் பல கூறுகளைக் கொண்டுள்ளது. மாணவர்கள் அறிவு மற்றும் புரிதலுக்கான செயலமர்வுளை நடத்தி போட்டிகள் நடத்துவதன் மூலம் நடைமுறை அறிவை வளர்க்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

குறிப்பாக, பாடசாலைகளுக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்கி அவற்றை முதலீடு செய்வதற்கு அவர்களுக்க சந்தர்ப்பம் வழங்கவும் அதன் பெறுபேறுகளுக்கு அமைய பாடசாலைகளுக்கு பரிசில் வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலையின் மூலதன சந்தை சங்கத்தின் 10 அங்கத்தவர்களுக்கும் சங்கத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கும் சிங்கப்பூர் சென்று பங்குச்சந்தை பற்றிய அனுபவம் பெறுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்குத் தேவையான முறைமைகளை தயாரித்து வருகிறோம். கல்வி அமைச்சு, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் ஜனாதிபதி அலுவலகம் ஆகியவற்றின் மேற்பார்வையின் கீழ் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிறிய அளவிலான வர்த்தக முயற்சிகளுக்கு இப்போது பங்குச் சந்தையில் சேரவும், தங்கள் வணிகத்தை மேம்படுத்த மூலதனத்தைப் பெறவும் வாய்ப்பு உள்ளது. இந்தியா போன்ற வளர்ச்சியடைந்த நாட்டு பொருளாதாரங்களில் மூலதனச் சந்தை பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. பங்குச் சந்தையின் சந்தை மூலதனம் மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாகக் கணக்கிடப்படுகிறது.

# நீர் தேக்கங்களில் நீர் மட்டம் உயர்வு நீர் மின் உற்பத்தி 20 வீதம் அதிகரிப்பு

## மின்சார சபையின் பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



நீர் மின் உற்பத்திக்கான நீர்த் தேக்கங்களில் நீரின் மட்டம் அதிகரித்து வரும் நிலையில், நீர் மின் உற்பத்தியை நூற்றுக்கு 20 வீதத்தால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்சார சபையின் பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன இது தொடர்பில் தெரிவிக்கையில்,

நீர் மின் உற்பத்தி நீர்த் தேக்க பகுதிகளில் கடந்த சில தினங்களாக ஓரளவு மழை வீழ்ச்சி கிடைத்து வருகிறது.

06

அஸிதிஸி ஊடக புலமைப் பரிசில் 2023

# விண்ணப்பங்கள் அக்.11 க்கு முன் அனுப்புமாறு கோரிக்கை



ஊடகவியலாளர்களின் தொழில் தன்மையை உயர்த்தும் நோக்கில் வருடாந்தம் செயற்படுத்தப்பட்டு வரும் “அஸிதிஸி வெகுசன ஊடக புலமைப் பரிசில் நிகழச்சித் திட்டம்” இம்முறையும் செயற்படுத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் “அஸிதிஸி வெகுசன ஊடக புலமைப்பரிசில் – 2023” நிகழ்ச்சிக்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட வேண்டிய இறுதித் திகதி 2023 ஒக்டோபர் 11 ஆகும்.

06

# 13ஆவது மாடியிலிருந்து வீழ்ந்து பிரிட்டன் யுவதி பலி

## சட்டக் கல்லூரி மாணவன் கைது

கல்கிஸை அல்விஸ் பிளேஸிலுள்ள தொடர்மாடி வீட்டுத் தொகுதி ஒன்றில் தங்கியிருந்த பிரிட்டன் யுவதி ஒருவர், 13ஆவது மாடியிலிருந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக கல்கிஸை பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த யுவதி நேற்று (10) மீண்டும் பிரிட்டன் செல்லவிருந்த நிலையிலேயே, மாடியிலிருந்து விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் (09) அதிகாலை 2.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில், உயிரிழந்த யுவதியுடன் முகநூல் நண்பராக இருந்த சட்டக்கல்லூரி

06


# வெகுசன ஊடக அமைச்சு

# ஊடகவியலாளர் பயிற்சி கற்கைநெறிகளுக்காக நிதி உதவி வழங்கல்

# அசிதிசி ஊடக புலமைப்பரிசில் செயற்றிட்டம் — 2023

**01. நோக்கம்**

➢ இலங்கை ஊடகவியலாளர்களின் தொழில் தன்மையை ஊக்குவித்தல்.

**02. இலக்குக் குழு**

➢ இலங்கையில் அங்கீகாரம் பெற்ற இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களில் முழுநேர அல்லது பகுதிநேர அடிப்படையில் சேவையாற்றும் ஊடகவியலாளர்கள்.
➢ சுதந்திர ஊடகவியலாளர்கள்.
➢ பிரதேச ஊடகவியலாளர்கள்
➢ இணையத்தள ஊடகவியலாளர்கள்
➢ ஊடக தொழில்நுட்ப கலைஞர்

**03. தெரிவு செய்யப்படும் தேர்வுமுறை**

➢ 3 வருட கால சேவையைப் பூர்த்தி செய்த மேற்படி 02ல் குறிப்பிடப்பட்ட ஊடகவியலாளர்களாயிருத்தல் வேண்டும்.
➢ நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் திகதி வரையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் உயர்கல்வி பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் ஊடகத் துறைக்குரித்தான பட்டப் பின்படிப்பு (முதுமாணி), பட்டதாரி, டிப்ளோமா, நீண்ட கால மற்றும் குறுகிய கால சான்றிதழ் கற்கைநெறிக்காக தெரிவு செய்யப்பட்டிருத்தல் அல்லது தற்போது கற்கைநெறியைக் கற்றுக்கொண்டிருப்பவராயிருத்தல் வேண்டும். (நேர்முகப் பரீட்சையின்போது கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை அல்லது கற்கை நெறியை கற்றுக்கொண்டிருப்பது தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்)
➢ விண்ணப்பிக்கும் கற்கைநெறி நேரடியாக ஊடகத் துறையோடு சம்பந்தப்பட்ட கற்கை நெறியாகவிருத்தல் வேண்டும்.
➢ 18 - 55 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
➢ அரசாங்க தகவல் திணைக்களம் மூலம் ஊடகவியலாளர்களுக்காக 2023ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டையைப் பெற்றிருத்தல் வேண்டும்.
➢ ஊடகவியலாளர் ஒருவருக்கு இந்தப் புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் இரண்டு முறை அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் கிடைக்கும் என்பதுடன் முதலாவது சந்தர்ப்பத்திற்கான தகுதியைப் பெற்று 5 வருடங்களின் பின்னரே இரண்டாவது சந்தர்ப்பத்திற்காக விண்ணப்பிக்க முடியும்.

**04. பண உதவிகள் வழங்கல்**

➢ கற்கை நெறியின் பொருட்டு வழங்கப்படும் பட்டதாரி மற்றும் பட்டப் பின்படிப்புக்கான அதிகூடிய புலமைப் பரிசில் தொகை இரண்டு இலட்சம் ரூபா (200,000/-) மற்றும் நீண்டகால மற்றும் குறுகியகால சான்றிதழ் கற்கை நெறியின் பொருட்டு வழங்கப்படும் அதிகூடிய புலமைப் பரிசில் தொகை ஒரு இலட்சம் (100,000/-) ரூபாவாகும்.
➢ புலமைப் பரிசிலுக்கு உரிமை பெறும் ஊடகவியலாளர்களுக்கு கற்கை நெறிகளுக்கான கட்டணத்தின் 50% ஐ கற்கை நெறியின் ஆரம்பத்தில் முதலாவது தவணைக் கட்டணமாகவும் மீதி 50% வீதத்தின் 25% கற்கை நெறியின் இரண்டாவது தவணைக் கட்டணமாகவும் மீதி 25% கற்கை நெறியை பூர்த்தி செய்த பின் சான்றிதழை சமர்ப்பித்த பின்பும் செலுத்தப்படும்.

**05. தெரிவு செய்யப்படும் முறை**

➢ வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அவர்களால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு மூலம் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு, நன்மைபெறுநர் தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்வது தொடர்பான இறுதித் தீர்மானத்தை அமைச்சின் செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**06. விண்ணப்பிக்கும் முறை**

➢ கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2023.10.11ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பணிப்பாளர் (ஊடகம்), வெகுசன ஊடக அமைச்சு, இல. 163, “அஸிதிசி மெந்துர” கிருலப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொட, கொழும்பு-05 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“அசிதிசி ஊடக புலமைப் பரிசில் செயற்றிட்டம் - 2023”** எனத் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும்.

**கவனிக்கவும்**

புலமைப்பரிசில் வழங்கப்பட்ட பின் அமைச்சுடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட வேண்டியதுடன் தொடர்புற்ற கற்கை நெறியை ஆகக் கூடியது 6 மாதங்களினுள் ஆரம்பிக்க வேண்டும். இல்லாவிடில் புலமைப்பரிசிலை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

தொடர்புகள் : 0112-513645, 0112-514632
மேலதிக விபரங்களுக்கு : www.media.gov.lk

வீ.பி.கே. அனுச பல்பிட்ட
செயலாளர்,
வெகுசன ஊடக அமைச்சு

**மாதிரி விண்ணப்பப் படிவம்**
**அசிதிசி ஊடக புலமைப்பரிசில் செயற்றிட்டம் - 2023**
**வெகுசன ஊடக அமைச்சு**

1. முழுப்பெயர் தமிழில் (திரு/திருமதி/செல்வி) : ------------------------------
2. முழுப் பெயர் ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் : ------------------------------
3. முதலெழுத்துக்களுடன் பெயர் : ------------------------------
4. விலாசம்: (தமிழில்) : ------------------------------
   விலாசம்: (ஆங்கிலத்தில்) : ------------------------------
5. தொலைபேசி இலக்கம் : கையடக்க : ------------------ வட்சப் (புலனம்) : ------------------
6. பிறந்த திகதி : ------------------------------
7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதியில் வயது: வருடம்:------------ மாதம்:------------ நாட்கள்: ------------
8. தேசிய அடையாள அட்டை இல : ------------------------------
9. பெற்றுள்ள உயர் கல்வித் தகைமைகள் : ------------------------------
10. விண்ணப்பிக்கும் பயிற்சி கற்கை நெறியின் விபரங்கள் : ------------------------------
    i. கற்கை நெறியின் பெயர் : ------------------------------
    ii. பயிற்சி நிறுவனம் : ------------------------------
    iii. கால எல்லை : ------------------------------
    iv. கற்கை நெறிக்கான கட்டணம் : ------------------------------
11. குறித்த நிறுவனத்தினால் கற்கை நெறிக்கான தகைமை பெற்றிருப்பதாக அறிவித்து உங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பிக்க முடியுமா?
    முடியும் ☐ முடியாது ☐
12. அரசாங்கத்தினால் வழங்கப்படும் வேறு பயிற்சி செயற்றிட்டங்களின் கீழ் பணம் மூலமான மானியங்களைப் பெற்றதுண்டா?
    கற்கை நெறியின் பெயர் ---------------- நிறுவனம் ---------------- கால எல்லை ----------------
13. சேவை விபரங்கள்
    - தொழில் நிலை : நிரந்தரம் ☐ தற்காலிக ☐ பிரதேச ☐ சுதந்திர ☐ வெப் ☐ தொழில்நுட்பம் ☐
    - பதவி : ------------------------------
    - கடமையாற்றும் நிறுவனத்தின் பெயர் : ------------------------------
    - பத்திரிகை/அலைவரிசை : ------------------------------
    - முகவரி : ------------------------------
    - தொலைபேசி இல : அலுவலகம் : ------------------ தொலைநகல் : ------------------
    - மின்னஞ்சல் முகவரி : ------------------------------
    - தகவல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையின் இலக்கம்:.................. வருடம்: ------------------
    - தொழில் அனுபவம் (வருடங்கள்) : ------------------------------
    - உள்ளடங்கும் மாவட்டம் : ------------------------------
14. இதன் முன் இந்தப் புலமைப்பரிசில் உதவியின் கீழ் பண உதவிகள் பெற்றதுண்டா?
    ஆம் ☐ இல்லை ☐

பெற்றிருக்கிறீர்களானால், கற்கைநெறி மற்றும் வருடம் : ------------------------------
மேல் குறிக்கப்பட்ட தகவல்கள் உண்மையானதும், சரியானதும் என அத்தாட்சிப்படுத்துகிறேன்.

திகதி .............................. விண்ணப்பதாரரின் கையொப்பம் ------------------------------

**நிறுவனத் தலைவரின் சிபாரிசு**

திரு/ திருமதி/ செல்வி: .............................................. எமது நிறுவனத்தில் முழுநேர/ பகுதிநேர/ சுதந்திர/ பிரதேச/ வெப்/ தொழில்நுட்ப ஊடகவியலாளராக .................... முதல் .................... வரை சேவையாற்றுவதாகவும், மேற்கூறப்பட்ட புலமைப் பரிசில் உதவி பெறுவதற்குத் தகைமையுடையவரெனவும் சிபாரிசு செய்கிறேன். இங்கு குறிக்கப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதுமென அத்தாட்சிப்படுத்துகிறேன்.

1. பெயர் : ------------------------------
2. பதவி : ------------------------------
3. முகவரி : ------------------------------
4. தொலைபேசி இல : ------------------------------

திகதி ------------------------------ ------------------------------
உத்தியோகபூர்வ முத்திரை, கையொப்பம்


## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22


## குறள் தரும் சிந்தனை



இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு

தமக்குத் தீமை செய்வதற்கும் திரும்ப நன்மை செய்யாமல் விட்டுவிட்டால் சான்றாண்மை எனும் நல்ல பண்பு இருந்தும், அதனால் என்ன பயன்?

# மக்களை ஏமாற்றி யாசகத்தில் ஈடுபடும் ஏமாற்றுப் பேர்வழிகள்!

நாட்டில் யாசகத்தில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையில் அண்மைக்காலமாக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பொதுப்போக்குவரத்து சாதனங்களான ரயில், பஸ் உட்பட மதவழிபாட்டு தலங்களின் வாயில்கள் என மக்கள் அதிகளவில் காணப்படும் இடங்களில் யாசகத்தில் ஈடுபடுபவர்களை அதிகளவில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்நாடு கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. அதனைத் தொடர்ந்து யாசகத்தில் ஈடுபடுவர்களின் எண்ணிக்கையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

சிறுவர்கள், வளர்ந்தவர்கள் ஆண்கள், பெண்கள், விஷேட தேவையுடையவர்கள், நோயாளர்கள், கர்ப்பிணிப் பெண்கள் என்று எல்லா மட்டத்தினரும் இச்செயலில் ஈடுபடுவதைக் காண முடிகிறது. சிலர் குடும்பமாக இச்செயலில் ஈடுபடக் கூடியவர்களாக உள்ளனர். அவர்களில் பாடசாலை வயதை உடைய பிள்ளைகளும் உள்ளனர். ஆனால் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் உள்ளிட்ட சிறுவர்களை யாசகத்தில் ஈடுபடுத்துவது எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாததாகும்.

இச்செயலில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானவர்கள் பலவாறு தம் தேவையை வெளிப்படுத்தக் கூடியவர்களாக உள்ளனர். குறிப்பாக தாம் நோயாளர் என்றும் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்தக்கூடிய வசதியற்றவர் என்றும் நோய்க்கு சிகிச்சை பெற பொருளாதார வசதி அற்றவர் என்றும் மருத்துவர் சிபாரிசு செய்துள்ள மருந்துகளை வாங்குவதற்கு வசதி அற்றவர் என்றும் இச்செயலில் ஈடுபடுபவர்கள் பலவாறு கூறக்கூடியவர்களாக இருக்கின்றனர். இன்னும் சிலர் பாடல்களைப் பாடியபடி யாசகத்தில் ஈடுபடுவதையும் காண முடிகிறன்றது.

இவ்விதமாகப் பலவாறு தம் குறைபாடுகளை வெளிப்படுத்தியபடி யாசகத்தில் ஈடுபடும் இவர்கள், தம் அன்றாட சீவனோபாயத்திற்கான வருமானத்தைத் தேடிக்கொள்வதை நோக்காகக் கொண்டு தான் யாசகத்தில் ஈடுபடுவதாக பெரும்பாலானவர்கள் கருதுகின்றனர். இவ்வாறான எதிர்பார்ப்போடு இச்செயலில் ஈடுபடுபவர்களும் இருக்கவே செய்கின்றனர்.

ஆனால் அன்றாட வாழ்வுக்கு தேவையான வசதி வாய்ப்புக்களைக் கொண்டிருப்பவர்களும் இச்செயலில் ஈடுபடுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்களது வங்கிக் கணக்கில் அளவுக்கு அதிகமான பணம் காணப்படுவதாகவும் சொத்துகளைக் கொண்டவர்களாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறானவர்களின் செயற்பாட்டினால் உண்மையாகவே சீவனோபாயத்திற்கான வருமானத்தை தேடிக்கொள்ளும் நோக்கில் யாசகத்தில் ஈடுபடுபவர்கள் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனால் ஒரு சிலர் வருமானம் ஈட்டிக் கொள்வதற்கான மார்க்கமாக சிலரைப் பயன்படுத்தி யாசகத்தில் ஈடுபடுத்துகின்றனர். இவ்வாறானவர்கள் இச்செயலை நன்கு திட்டமிட்ட அடிப்படையில் சூட்சுமமான முறையில் முன்னெடுக்கின்றனர். இவர்கள் சிறுவர்களை வாடகைக்கு அமர்த்துவதாகவும், இன்னும் சிலர் சிறுவர்களுக்கு போதைமாத்திரைகளை பயன்படுத்தி அவர்களை யாசகத்திற்கு பயன்படுத்துவதாகவும், சிலர் பெண்களை கர்ப்பிணிகள் போன்று போலியாக காண்பிக்கும் வகையில் யாசகத்தில் ஈடுபடுத்துவதும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் யாசகத்தில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையில் அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள அதிகரிப்பானது பல மட்டங்களதும் அவதானத்தைப் பெற்றுள்ளது. ஏனெனில் அன்றாட வாழ்வாதாரத்திற்கு தேவையான வசதியைக் கொண்டிருப்பவர்களும் பாடசாலை செல்ல வேண்டிய வயதைக் கொண்டிருப்பவர்களும் இச்செயலில் ஈடுபடுவதால் இது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இந்நிலையில் பண ஈட்டும் நோக்கில் மேற்கொள்ளப்படும் யாசகச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதன் அவசியம் உணரப்பட்டுள்ளது. அந்த வகையில் நாட்டிலுள்ள யாசகர்கள் குறித்து இம்மாதம் கணக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு சமூக சேவைகள் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

அதேநேரம் யாசகத்தில் ஈடுபடுபவர்கள் மத்தியில் சிறுவர்களும் பெண்களும் அதிகரித்து காணப்படுவது குறித்து மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு விஷேட கவனம் செலுத்தியுள்ளது. இது தொடர்பில் பொலிஸ், உள்ளூராட்சி மன்றங்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடவும் அவ்வமைச்சு திட்டமிட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் கடந்த வாரம் நடைபெற்ற சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் கூட்டத்திலும் இது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. 'மக்களை ஏமாற்றும் வகையில் பெண்களையும் சிறுவர்களையும் யாசகத்தில் ஈடுபடுத்துவதைத் தடுக்க விஷேட சட்டம் அறிமுகப்படுத்தப்படும்' என்று இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இ க்கூட்டத்தின் போது மோசடியான யாசக செயற்பாடுகளைத் தடுப்பதற்கு சட்ட ரீதியான ஏற்பாடுகள் காணப்படுகின்ற போதிலும் அவற்றை உரிய முறையில் முன்னெடுப்பதில் காணப்படும் சிக்கல்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆகவே யாசகத்தில் ஈடுபடுவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு குறித்து விஷேட கவனம் செலுத்தி உரிய நடவடிககைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதன் ஊடாக மக்களை ஏமாற்றும் வகையில் இச்செயலில் ஈடுபடுபவர்களை கட்டுப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# உலகமே வியக்கும் வகையில் தலைநகர் டில்லியில் நேற்று வெற்றிகரமாக நிறைவுற்ற ஜி 20 உச்சிமாநாடு

உலகமே வியக்கும் வகையில் ஜி20 உச்சிமாநாட்டை இந்தியா வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது. இந்த இரண்டுநாள் மாநாடு நேற்று முன்தினம் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் ஆரம்பமாகி நேற்று நிறைவடைந்தது.

உலகின் பல முக்கிய தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியா வந்திருந்தனர். இந்த உச்சிமாநாட்டில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. குறிப்பாக ஆபிரிக்க ஒன்றியம் ஜி 20 அமைப்பில் இணைக்கப்பட்டமை மிக முக்கிய முடிவாகப் பார்க்கப்பட்டது. இது ஆபிரிக்க நாடுகளின் அடுத்தகட்ட வளர்ச்சியை உறுதி செய்கிறது.

## இந்தியாவின் ஆளுமைக்கு சர்வதேசத் தலைவர்கள் பாராட்டு





இந்தியா இந்த உச்சிமாநாட்டை மிகவும் சிறப்பாக நடத்தி முடித்துள்ளதாக உலகத் தலைவர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். இந்த ஜி20 உச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் மற்றும் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ என உலகின் முன்னணித் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். ரஷ்ய ஜனாதிபதி புட்டின், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஆகியோர் மட்டும் இதில் கலந்து கொள்ளவில்லை.

உலகில் மிகவும் சக்திவாய்ந்த அமைப்புகளில் ஒன்றாக இருக்கும் இந்த ஜி20 அமைப்பிற்குத் தலைமை ஏற்பது என்பது எந்தவொரு நாட்டிற்கும் தனி கௌரவம் ஆகும். கடந்தாண்டு இந்தோனேசியா தலைமைப் பொறுப்புக்கு வந்த நிலையில், இந்தாண்டு இந்தியா தலைமைக்கு வந்தது. இந்தியாவின் தலைமைப் பொறுப்பு விரைவில் முடிகிறது.

1990களில் ஆசியாவில் மிகப்பெரிய நிதி நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து சர்வதேச பொருளாதார ஒத்துழைப்புக்கு ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் என உலகத்தலைவர்கள் முடிவு செய்தனர். அதன்படி 1990இல் ஜி20 என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

இதில் பல்வேறு நாடுகளின் நிதிஅமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி கவர்னர்கள் முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதிப்பார்கள். இருப்பினும், இந்த உறுப்பு நாடுகளை ஒரே அணிக்குக் கொண்டு வர ஒரு நாடு தலைமைப் பொறுப்பு ஏற்க வேண்டும். சுழற்சி முறையில் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு நாடு தலைமைப் பொறுப்பில் இருக்கும் என்று முடிவு செய்யப்பட்டது. இதற்காக ஜி20 நாடுகள் மொத்தம் 5 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு ஆண்டும் ஒரு குழுவில் இருக்கும் ஒரு நாடு தலைமைப் பொறுப்புக்கு வரும். ஜி20 உறுப்பு நாடுகள் இணைந்து இதை முடிவு செய்யும். அதன்படி கடந்தாண்டு இந்தோனேசியா தலைமை பொறுப்பில் இருந்த நிலையில், இந்தாண்டு இந்தியா தலைமை பொறுப்பை ஏற்றுள்ளது. அதேபோல அடுத்தாண்டு பிரேசில் தலைமைப் பொறுப்பை ஏற்க உள்ளது. கடந்த 2022 டிசம்பர் 1 ஆம் திகதி இந்தியா அதிகாரபூர்வமாகத் தலைமைப் பொறுப்புக்கு வந்தது. எதிர்வரும் நவம்பர்

## ஆபிரிக்க ஒன்றியத்தை ஜி 20 அமைப்பில் இணைத்துக் கொண்டமை இந்தியாவின் பெரும் சாதனை!

30ஆம் திகதி வரை இந்தியா தலைமைப் பொறுப்பில் இருக்கும். இருந்த போதிலும், நேற்றைய தினமே தலைமைப் பொறுப்பு பிரேசில் நாட்டிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவும் ஜி20 உச்சி மாநாட்டில் முக்கிய நிகழ்வாகும். ஆர்ஜெண்டினா, அவுஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா,



பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், கொரிய குடியரசு, மெக்சிகோ, ரஷ்யா, சவுதி அரேபியா, தென்னாபிரிக்கா, துருக்கி, இங்கிலாந்து, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா ஆகியவை இந்த ஜி20 இல் இருக்கின்றன. இதில் இப்போது ஆபிரிக்க யூனியனும் இணைந்துள்ளது. உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 85 சதவீதமும், உலக வர்த்தகத்தில் 75 சதவீதமும், உலக மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்கும் இங்கே ஜி20 உறுப்பு நாடுகளில் உள்ளன. டெல்லியில் நடைபெற்ற ஜி 20 மாநாட்டில் பல்வேறு அதிரடி முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இதில் எடுக்கப்பட்ட முடிவுகள் உலக அரசியலை மாற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிகாரபூர்வ G20 இணையதளத்தின்படி, 18 ஆவது G20 உச்சி மாநாட்டின் கருப்பொருள் 'வசுதைவ குடும்பகம்'. இது 'ஒரே பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம்' என்று மொழிபெயர்க்கப்படும் சமஸ்கிருத சொற்றொடர் ஆகும். பழங்கால சமஸ்கிருத இலக்கியங்களில், குறிப்பாக மகாஉபநிடதத்தில் இந்த சொற்றொடர் இருந்தது.

(7 ஆம் பக்கம் பார்க்க)

# குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு இலவசமாக வெண்புரை சத்திர சிகிச்சை







இலங்கையில் வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி விழிவெண்படல சத்திர சிகிச்சை, கண் பார்வை பரிசோதனை, மூக்குக்கண்ணாடி வழங்குதல் என்பவற்றை இலவசமாக மேற்கொள்வதற்கு சவூதி அரேபியாவின் 'மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையம்' முன்வந்துள்ளது.

இரு புனிதப் பள்ளிவாசல்களின் காவலரும் மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் ஸஊத் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதமருமான முஹம்மத் பின் சல்மான் ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களின் கீழ் இந்நிவாரண மையம் 'எல்லைகள் இல்லாத மனித நேயத்தை நோக்கி' என்ற தொனிப்பொருளின் ஊடான இத்திட்டத்தின் மூலம் விழிவெண்படலத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு தெளிவான பார்வை பெற்றுக்கொடுக்கப்பட உள்ளது.

இதன் நிமித்தம் பாகிஸ்தானை சேர்ந்த கண் சத்திர சிகிச்சை மருத்துவ நிபுணர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் இந்த இலவச கண் சத்திர சிகிச்சை முகாமுக்கு கண் சத்திர சிகிச்சை மருத்துவர்களுடன் கண்பார்வை பரிசோதகர்கள் உள்ளிட்ட துறைசார் சுகாதார உத்தியோகத்தர்கள் முழுமையான ஒத்துழைப்புக்களை நல்கியுள்ளனர்.

இம்முறை மேல் மாகாணம் மற்றும் தென் மாகாண மக்களுக்கென விழிவெண்படல சத்திர சிகிச்சை முகாம் வலஸ்முல்லவிலும் கிழக்கு மற்றும் ஏனைய பிரதேச மக்களுக்கு காத்தான்குடியிலும் நடாத்தப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில் தற்போது வலஸ்முல்லவில் இக்கண்சத்திர சிகிச்சை முகாம் இடம் பெறுகின்றது. இம்முகாமின் மூலம் மேல் மற்றும் தென் மாகாணங்களைச் சேர்ந்த வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்கள் பெரிதும் பயனடைந்து வருவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 04 ஆம் திகதி முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரையும் நடாத்தப்படும் இக்கண் சத்திர சிகிச்சை முகாம்களில் விழிவெண்படல சத்திர சிகிச்சை மாத்திரமல்லாமல் கண் பார்வை தொடர்பான சுகாதார அறிவூட்டல்களும் விஷேட மருத்துவ நிபுணர்களால் வழங்கப்படுன்றன. உலகளாவிய

## மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையத்தின் ஏற்பாட்டில் முன்னெடுப்பு

மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதில் சவூதி அரேபியா முதன்மையான நாடாக விளங்குகிறது. சவூதி அரேபியா தற்போது இந்த இலவச கண்சத்திர சிகிச்சை முகாமை மனிதாபிமான அடிப்படையில் முன்னெடுத்துள்ளது. அனைத்து மனிதாபிமான உதவிகளும் ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டு 'மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையம்" என்ற பெயரில் 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

சவூதி அரேபியாவின் ரியாத் நகரைத் தலைமையகமாகக் கொண்டுள்ள இம்மையம் இன, மத, பிரதேச வேறுபாடுகள் இன்றி மனிதாபிமான உதவி, ஒத்துழைப்புக்களை மேற்கொள்கின்றன. அதன் விளைவாக உலகில் அனைத்து மக்களதும் பாராட்டுக்களையும் கூட இந்த மையம் பெற்றுள்ளன.

இந்த மனித நேய அமைப்பின் ஸ்தாபகராக இரு புனிதப் பள்ளிவாசல்களின் காவலரும் மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத்வும், அதன் நிறைவேற்றுப் பணிப்பாளராக வைத்திய கலாநிதி அப்துல்லாஹ் பின் அப்துல் அஸீஸ் அல் ரபீஆவும் விளங்குகின்றனர். மருத்துவ கலாநிதி அப்துல்லாஹ் உலகில் ஒட்டிப் பிரிந்த 60க்கும் மேற்பட்டவர்களை தமது மருத்துவ திறமையினால் எவ்வித பாதிப்புகளுமின்றி பிரித்து சாதனை படைத்தவராவார்.

2015 முதல் இற்றை வரையும் இலங்கை உட்பட உலகில் பல நாடுகளிலும் முன்னெடுத்த மனிதாபிமான பணிகளுக்கென 1,979,808,924 அமெரிக்க டொலர்களை இந் நிறுவனம் செலவிட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.


– மௌலவி
எம்.எச் ஷேஹுத்தீன்
மதனி (பி.ஏ) பணிப்பாளர்,
அல் ஹிக்மா நலன்புரி
நிறுவனம், கொழும்பு




# சம்மாந்துறை ஆதாரவைத்தியசாலை அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்கும் சர்வதேச லயன்ஸ் கழகம்

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் தற்போது இயங்கி வரும் கண்சிகிச்சை பிரிவை சர்வதேச லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் மேலும் விஸ்தரிப்பது சம்பந்தமான கலந்துரையாடல், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்குத் தேவையான அன்பளிப்புகளை வழங்குதல் மற்றும் மரநடுகை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக லயன்ஸ் கழகத்தின் சர்வதேச பணிப்பாளர் மகேஷ் பாஸ்கால், மாவட்ட ஆளுநர் இஸ்மத் ஹமிட், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அஸாத் எம் ஹனிபா, சம்மாந்துறை லயன்ஸ் கழகத் தலைவர் றாபி, பிராந்திய லயன்ஸ் தலைவர் எம்.டி.எம். அனாப், திட்டமிடல் மருத்துவர் நியாஸ் அஹமட், ஆளுநர் செயலாளர் சிறிபால, பொருளாளர் தம்மிக மற்றும் லயன்ஸ் கழக முக்கியஸ்தர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.





# நீர்வழங்கல் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் விசேட செயற்றிட்டத்திற்கான ஸ்தாபனத்தினூடான விசேட கலந்துரையாடல்



ஐக்கிய நாடுகளின் விசேட செயற் திட்டத்திற்கான ஸ்தாபனத்தின் தெற்காசியாவின் பணிப்பாளர் சார்லஸ் காலனன் மற்றும் விசேட செயற்திட்ட முகாமையாளர், செயற் திட்ட மேலாளர் ஆகியோருக்கும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட் கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானுக் கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது, நீர்வழங்கல் துறையில் விசேட செயற்திட்டங் களை அமுல்படுத்தவும், தங்குதடை யின்றி நீர்வழங்கலை வழங்கவும், நீர் சுத்திகரிப்பில் மீளாக்க வலுவுற் பத்தியை பயன்படுத்தவும் அது தொடர்பில் கலந்துரையாடப்பட்ட துடன், நீர்வழங்கல் துறையில் புதிய தொழில்நுட்பங்களை உள்வாங்கு தல் தொடர்பாகவும், பண்ணாட்டு முதலீட்டு முறைமை மற்றும் சர்வ தேச நிதி நிறுவனங்களின் உதவியு டன் நீர் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், பெருந்தோட்ட பகுதிக ளில் பெருந்தோட்ட மனிதவள அபி விருத்தி நிதியத்தின் ஊடாக மேற் கொள்ளப்பட இருக்கும் விசேட வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

இதில் வீடமைப்பு, உட்கட்ட மைப்பு வசதிகள் அபிவிருத்தி, பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகள் அபிவிருத்தி தொடர் பாக விசேட செயற்றிட்டங்களை மேற்கொள்ளவும், சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவிகளை நாடு வதற்கும் முன்மொழிவுகளை உரு வாக்குவதற்கும் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டது.

# நானுஓயாவில் காணாமல் போனவர் சடலமாக மீட்பு

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட் பட்ட நானுஓயா, கிளாரண்டன் பகுதியில் 08.09.2023 அன்று இரவு முதல் காணாமல்போயிருந்த நபரொருவர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நானுஓயா கிரிமிட்டிய பகுதியில் உள்ள சிறிய நீரோடையில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நானுஓயா, கிளாரண்டன் கீழ் பிரிவைச் சேர்ந்த நான்கு பிள்ளைக ளின் தந்தையே (49) இவ்வாறு சடல மாக மீட்கப்பட்டுள்ளார்.

நானுஓயா, கிரிமிட்டிய நகரப்ப குதிக்கு பொருட்கள் வாங்குவதற்கு செல்வதாக கூறிவிட்டு அன்று இரவு வீட்டில் இருந்து சென்றுள்ளார். அவர் திரும்பி வராததால் குடும்பத் தாரும் பொது மக்களும் இணைந்து தேடுதல் நடத்தினர்.

இது தொடர்பில் நானுஓயா பொலிஸார் பல கோணங்களில் விசாரணை களை நடத்தி வருகின்றனர்.

# ஐ.தொ.முன்னணியின் அலுவலகம் தலவாக்கலையில் திறப்பு



**தலவாக்கலை குறூப் நிருபர்**

ஐக்கிய தொழிலாளர் முன்னணி யின் காரியாலயம் தலவாக்கலை ஹற்றன் பிரதான வீதியில் தலவாக் கலை பகுதியில் நேற்று (10) ஞாயிற் றுக்கிழமை திறந்து வைக்கப்பட் டது.

இந்த அலுவலக திறப்பு விழாவில் ஐக்கிய தொழிலாளர் முன்னணி யின் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்துக் கொண்டு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்துக் கொண்டனர்.

இதன்போது மலையக மக்கள் முன்னணியின் முன்னாள் தலைவர் அமரர் பெரியசாமி சந்திரசேகர னின் உருவ படத்திற்கு மலர் தூவி பூஜை வழிபாடுகளும் இடம்பெற் றன.





மலையக கலாசார சங்கத்தின் ஏற்பாட்டில் அருள் வாக்கி அப்துல் காதர், அண்ணல் மகாத்மா காந்தி, முன்னாள் திவயினப் பத்திரிகை ஆசிரியர் மேவில் பெரேரா மற்றும் பேராசிரியர் துரை மனோகரன் அவர் களின் துணைவியார் ஆகியோர்களுக்கான நினைவு தின நிகழ்வு கண்டி கெப்பட்டிப் பொல கேட்போர் கூடத் தில் ராஜா ஜேகின்ஸ் தலைமையில் நடைபெற்றது.
படங்கள்: மாவத்தகம தினகரன் நிருபர்

# நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்தில் 40 மாணவர்கள் பல்கலைக்கழகம் தெரிவு

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

2022ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட நோர்வூட் தமிழ் வித்தியாலயத்தில் இருந்து பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் ஐந்து (5) மாணவர் கள் மூன்று ஏ (3A) தர சித்திகளை பெற்று பாட சாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்த் துள்ளனர். அதனடிப்படையில் பொறியியல் தொழினுட்ப பிரிவு மாணவன் சினோஷன் மூன்று ஏ தர சித்திகளை பெற்று மாவட்ட மட் டத்தில் முதலாமிடம் பெற்றுள்ளதுடன் பிரதீஸ் எனும் மாணவன் 2A,B பெறுபேறுகளை பெற்று மாவட்ட மட்டத்தில் நான்காமிடத்தி னையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

மேலும் பிரதான கலைப்பிரிவில் பரீட் சைக்கு தோற்றிய மாணவர்களில் கிருபாலினி, P.லோசன்யா, தனுக்ஷியா, சபிபிரகரிஸ்தா ஆகிய நான்கு மாணவிகளும் மூன்று ஏ ( தர சித் திகளைப் பெற்று கொண்டுள்ளமையும் குறிப் பிடத்தக்கது.

# மாத்தளை ஆமினாவில் 5 மாணவிகள் உயிரியல் விஞ்ஞான பிரிவில் சிறந்த பெறுபேறு

**மாத்தளை சுழற்சி நிருபர்**

2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்த ரப் பரீட்சையில் மாத்தளை ஆமினா தேசிய பாடசாலையில் 5 மாணவிகள் உயிரியல் விஞ்ஞான பிரிவில் சிறந்த பெறுபேறுகளை பெற்று மருத்துவ துறைக்கு தகுதி பெற்றுள் ளதாக பாடசாலை அதிபர் ஜெ.எஸ்.எம். பவாயிதா தெரிவித்தார்.

வெளிவந்த இப் பரீட்சைப் பெறுபேறு களின்படி எஸ். ரஹ்மத் பாத்திமா என்ற மாணவி உயிரியல் விஞ்ஞானத் துறையில் மாத்தளை மாவட்டத்தில் முதலாம் இடத் தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த் துள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

# யாழில் தாய் மகள் மீது வாள் வெட்டு

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் தாய் மற்றும் மகள் மீது வன்முறை கும்பல் ஒன்று வாள் வெட்டு தாக் குதலை மேற்கொண்டுள்ளது. நீர்வேலி பகு தியில் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற சம்ப வத்தில் காயமடைந்த தாயும் மகளும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். வீட்டில் தாயும் மகளும் இருந்த வேளை வீட்டிற்குள் அத் துமீறி நுழைந்த கும்பல் இருவர் மீது வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டு விட்டு , தப்பி சென்றுள்ளது. சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில் தனிப்பட்ட பகை காரணமாகவே தாக்குதல் நடத்தப்பட் டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.


FINTREX finance

## பின்ட்ரெக்ஸ் பினான்ஸ் லிமிட்டெட் மாபெரும் ஏல விற்பனை

67 டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்களும், முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களும்
2023 செப்டம்பர் 17 ஞாயிற்றுக்கிழமை
இல. 346, மானெல் வத்த, பொல்லேகல, கோணவல, களனி என்ற முகவரியில்
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரம்:

மோட்டார் கார்கள்:

| | | |
|---|---|---|
| NW CBD-1XXX | AUDI A3 | 2018 |
| WP CBC-2XXX | சுசுகி-DAA- MH55S வெகன் R | 2018 |
| SP CAU-6XXX | சுசுகி DAA-MR41S- ஹஸ்ட்லர் | 2016 |
| SP CBJ-9XXX | சுசுகி -DAA-FF21S இக்னிஸ் | 2016 |
| WP CAZ-3XXX | சுசுகி -DAA-MH44S வெகன் R | 2016 |
| SP CAW-9XXX | சுசுகி -DAA-MK42S-ஸ்பெசியா | 2015 |
| WP KX-6XXX | டொயோட்டா பிரிமியோ 13 | 2013 |
| SG CAS-1XXX | கிறிஸ்லர் 300 | 2012 |
| UP KY-0XXX | டொயோட்டா -DAA-ZVW30 பியர்ஸ் | 2012 |
| SP KQ-2XXX | டாட்டா இன்டிகோ | 2011 |
| WP KN-1XXX | டொயோட்டா பிராடோ KN-KDJ120W | 2007 |
| WP KC-1XXX | சுசுகி மாருதி-800 | 2006 |
| WP KG-9XXX | சுசுகி ஸ்விப்ட் ZC11S-2004 | 2004 |
| NW JI-8XXX | நிசான் மார்ச் TA-K11 | 2001 |
| 301-0XXX | மஸ்டா-BG3 பமிலா | 1995 |

வேன்கள்:

| | | |
|---|---|---|
| WP NC-7XXX | நிசான் ஊர்வன் | 2016 |
| NW PC - 6XXX | TC-SK8 டீலிக் | 2007 |
| NW PB-9XXX | சுசுகி -EBD-DA64V எவரி | 2006 |

நில வாகனம்

| | | |
|---|---|---|
| WP ZA-1XXX | JCB-3CX | 2007 |

கெப்கள்:

| | | |
|---|---|---|
| CP LJ-7XXX | புரொன்டியர் நவரா | 2009 |
| NW PE-9XXX | டொயோட்டா ஹிலக்ஸ் விகோKUN26R | 2006 |

பஸ்கள்:

| | | |
|---|---|---|
| WP ND-6XXX | நிசான்-PDG-EVW41 | 2010 |
| NW ND-5XXX | ஹினோ-BDO-KZB40M | 2009 |
| 63-2XXX | ஹினோ பஸ் | 1992 |

மோட்டார் லொறிகள்:

| | | |
|---|---|---|
| WP LN-5XXX | ஜேஎம்சி-JX1041DSLA2RS | 2017 |
| NW DAC-0XXX | டாட்டா ஏஸ் EX 2 | 2015 |
| WP PY-8XXX | மஹிந்ட்ரா மெக்ஸிமோ பிளஸ் | 2014 |
| SG LO-3XXX | ஹீனோ-QKG-FN1EWAG | 2013 |
| NW PV-7XXX | டாட்டா ஏஸ் | 2013 |
| WP PU-4XXX | டாட்டா சுப்பர் ஏஸ் | 2012 |
| CP LO-7XXX | மஸ்டா-TKG-LKR85AD | 2012 |
| WP LI-5XXX | டாட்டா -LPT709 | 2011 |
| NW PQ-6XXX | டாட்டா ஏஸ் | 2011 |
| NC PS-9XXX | டாட்டா ஏஸ் | 2011 |
| WP LI-7XXX | ஏய்சர் ஜம்போ 20.16 | 2007 |
| WP JK-4XXX | டாட்டா -SE1613 | 2004 |
| WP PE-5XXX | ஜேஎம்சீ-JX1041DSLA2RS டபிள் | 2002 |
| NW LA-1XXX | சுசுகி -GD-DA52T | 2001 |
| WP HG-9XXX | இசுசு எல்ப் பிரீஸர் | 1997 |

முச்சக்கர வண்டிகளும் மோட்டார் சைக்கிள்களும்
19 பஜாஜ், TVS மற்றும் பிகாஸோ முச்சக்கர வண்டிகள்
09 மோட்டார் சைக்கிள்கள் **பஜாஜ்-CT100**, பஜாஜ்-பிலட்டினா, **ஹீரோ-மெஸ்ட்ரோ எட்ஜ்**, ஹொண்டா-ஊடீ யுனிகோர்ன், **ஹொண்டா-டியோ**, ஹொண்டா-கிரேஸியா, **KTM-RC 125**, வுஏஞ-என்ரொக், **யமஹா-ரே-ZR**.

பார்வையிடல் - ஏல விற்பனை நடைபெறும் ஸ்தலத்தில்
2023 செப்டம்பர் 13 புதன் முதல
(காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை)
(ஏலவிற்பனை நடைபெறும் தினத்தில் வாகனங்களைப் பார்வையிட முடியாது)

எமது **www.sandslanka.com** என்ற இணையத்தளத்தின் மூலம வாகனங்கள் பற்றிய மேலதிக விபரங்களைப் பார்வையிடலாம்.

விற்பனை நிபந்தனைகள்
- **நுழைவு:** ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 2,000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 25,000/- ஐ வைப்புச் செய்தல் வேண்டும். பதிவு நடவடிக்கைகளுக்காக காலை 8.30 மணிக்கு நுழை வாயில் திறக்கப்படும்.
- கொடுப்பனவுகள்: விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் மீளளிக்கப்படாத 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் **2023 செப்டம்பர் 20 ஆந் திகதி புதன்கிழமை** பி.ப 3.00 மணிக்கு முன்னர், கொழும்பு 07, தர்மபால மாவத்தை, இல. 101 என்ற முகவரியில் அமைந்துள்ள பின்ட்ரெக்ஸ் பினான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தில் காசாகச் செலுத்தப்படுவதோடு, அன்றைய தினமே வாகனத்தையும் அகற்ற வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலதாராின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்

தலைமை அலுவலகம்:
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி: 081-2227593
தொலை/∴பக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்ட்ன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671465, 011-2671468
தொலை/∴பக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

011 2671468
www.sandslanka.com



softlogic Finance

## சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி மாபெரும் ஏலவிற்பனை

53 டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்களும் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களும்
2023 செப்டம்பர் 15 வெள்ளிக்கிழமை
இல. 463, கண்டி வீதி, களனி என்ற முகவரியில்
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரம்:

மோட்டார் கார்கள்

| | | |
|---|---|---|
| CAU-9xxx | சுசுகி DAA-MH55S வேகன் R | 2017 |
| KF-7xxx | மாருதி அல்டோ | 2007 |
| KE-7xxx | டொயோட்டா வியூஸ் 1.5E M | 2004 |
| HW-4xxx | டாட்டா இன்டிகா LXI | 2003 |
| JZ-0xxx | கியா ரியோ | 2002 |
| JA-6xxx | கியா ரியோ 1.5M | 2001 |
| HQ-8xxx | நிசான் ப்ரிமோர்டா | 2001 |
| FZ-9xxx | மேர்ஸிடஸ் பென்ஸ் | 1996 |

லொறிகள்:

| | | |
|---|---|---|
| LO-4xxx | சோஜன் LF J1040G4 | 2017 |
| PT-0xxx | மஹின்ட்ரா மெக்ஸிமோ | 2017 |
| JR-9xxx | இசுசு டம்ப் டிரக் | 2015 |
| DAB-4xxx | டாட்டா 207 RX பிகப் | 2015 |
| DAB-6xxx | டாட்டா சுப்பர் ஏஸ் | 2015 |
| PX-5xxx | டாட்டா ஏஸ் EX 2 | 2013 |
| PV-4xxx | மஹின்ட்ரா மெக்ஸிமோ பிளஸ் | 2013 |
| PS-4xxx | டாட்டா ஏஸ் | 2011 |
| PR-9xxx | மஹின்ட்ரா மெக்ஸிமோ | 2011 |
| PQ-5xxx | மஹின்ட்ரா மெக்ஸிமோ | 2011 |
| PQ-7xxx | மஹின்ட்ரா பொலேரோ மெக்ஸி டிரக் | 2011 |
| PQ-1xxx | டாட்டா ஏஸ் | 2010 |
| LD-4xxx | டைஹட்சு பிரீஸர் டிரக் | 2004 |
| LF-7xxx | சுபாரு LE-TT1 | 2003 |
| 47-8xxx | இசுசு - NKR58L | 1991 |

வேன்:

| | | |
|---|---|---|
| PJ-8xxx | சுசுகி HBD-DA17V எவெரி | 2018 |
| 252-7xxx | மிட்ஷுபிஷி | 1998 |
| 65-4xxx | மிட்ஷுபிஷி RVR | 1996 |

ஜீப்/டபிள் கப் வண்டிகள்:

| | | |
|---|---|---|
| KI-0xxx | மயிக்ரோ சன்யொங் கைரோன் 200XDI | 2009 |
| PD-0xxx | டொயோட்டா ஹிலக்ஸ் | 2008 |
| HI-1xxx | மிட்ஷுபிஷி அவுட் லேன்டர் | 2003 |
| GA-3xxx | லேண்ட் றோவர் பிரீ லேண்டர் | 2000 |
| PY-6xxx | டாட்டா 207DI | 2011 |
| HV-2xxx | மஸ்டா குரோ கெப் | 1999 |

பஸ் வண்டிகள்:

| | | |
|---|---|---|
| NA-8xxx | சொன்டா YCK 6107 HP | 2010 |

முச்சக்கர வண்டிகள்:

| | | |
|---|---|---|
| ABQ-2xxx | பஜாஜ் RE-205 | 2017 |
| AAT-4xxx | TVS கிங் | 2014 |
| YZ-8xxx | TVS கிங் | 2012 |
| AAB-9xxx | பஜாஜ் RE-205 | 2012 |

மோட்டார் சைக்கிள்கள்:

| | | |
|---|---|---|
| BIW-5xxx | யமஹா ரே -ZR | 2020 |
| BIT-8xxx | ஹீரோ டெஸ்ரினி | 2020 |
| BHV-6xxx | யமஹா ரே -ZR | 2019 |
| BIK-0xxx | சுசுகி கிக்ஸர் SF FI | 2019 |
| BIH-9xxx | TVS APA 160 4V | 2019 |
| BGD-9xxx | மஹின்ட்ரா ரோடியோ | 2019 |
| BHP-6xxx | ஹொண்டா 160 X APDS | 2018 |
| BHZ-9xxx | TVS அபாச்சி | 2018 |
| BHS-5xxx | சுசுகி லெட்ஸ் | 2018 |
| BHL-2xxx | TVS அபாச்சி | 2018 |
| BHZ-2xxx | யமஹா ரே ZR டிஸ்க் | 2018 |
| BHW-9xxx | ஹீரோ மெஸ்ட்ரோ எட்ஜ் | 2018 |
| BHC-5xxx | மஹின்ட்ரா கஸ்ட்ரோ | 2017 |
| BIA-9xxx | ஹொண்டா நவி | 2017 |
| BHF-0xxx | TVS மெட்ரோ | 2017 |
| BHB-3xxx | மஹின்ட்ரா கஸ்ட்ரோ | 2015 |

பார்வையிடல் -
ஏல விற்பனை நடைபெறும் ஸ்தலத்தில்
2023 செப்டம்பர் 13 புதன் மற்றும் 14 வியாழன் ஆகிய தினங்களில்
(காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை)

விற்பனை நிபந்தனைகள்
- **நுழைவு:** ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 2000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 25,000/- ஐ வைப்புச் செய்தலும் வேண்டும்.
- **கொடுப்பனவுகள்:** விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் மீளளிக்கப்படாத 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் **2023 செப்டம்பர் 20ஆந் திகதி புதன்கிழமை** பி.ப 3.00 மணிக்கு முன்னர், இல. 305B, நாவல வீதி, நாவல என்ற முகவரியில் அமைந்துள்ள சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் காசாகச் செலுத்தப்பட வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலதாரர் / சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி யின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்

011 2671468
www.sandslanka.com

## ஊழலுக்கு....

தெரிவித்துள்ளார். ஊழல் மோசடி எதிர்ப்புச் சட்டமூலம் கடந்த ஜூலை 19 ஆம் திகதி திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதற்கு மேலதிகமாக குற்றம் ஒன்றின் போது குற்றவாளியாகவும் மற்றும் சாட்சியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், பாதுகாப்பு வழங்கும் சட்டமும் செப்டெம்பர் 15 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென அமைச்சர் அந்த அதிவிசேட வர்த்தமானியில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 4மாகாணங்களில்...

மாவட்டங்களில் சிறிதளவு மழை பெய்யக்கூடும். ஊவா மாகாணத்தின் சில இடங்களிலும் அத்துடன் அம்பாரை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் சில இடங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது.

மத்திய மலைப்பிராந்தியங்களின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அத்துடன் திருகோணமலை மற்றும் ஹமபாந்தோட்டை மாவட்டங்களிலும் மணித்தியாலத்திற்கு 40 45 கிலோமீற்றர் வேகத்தில் அடிக்கடி ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில், பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

புத்தளம் தொடக்கம் கொழும்பு ,காலி ஊடாக மாத்தறை வரையான கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணிக்கு 30 40 கிலோமீற்றர் வேகத்தில் தென் மேற்குத் திசையிலிருந்து காற்று வீசும்.

புத்தளம் தொடக்கம் மன்னார், காங்கேசன்துறையூடாக திருகோணமலை வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 55 60 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக்கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக்கடல் பிராந்தியங்கள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும்.

புத்தளம் தொடக்கம் கொழும்பு, காலி,ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 45 50 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் இடைக்கிடையே காற்று அதிகரித்து வீசக்கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில், இக் கடல் பிராந்தியங்கள் கொந்தளிப்பாகக் காணப்படுமென்றும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

## சனல் 04 விவகாரம்: ....

அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டது. இந்நிறுவனமானது, தொடர்ச்சியாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சார்பாகவும் அவர்களின் கொள்கைகளை முன்னெடுக்கின்ற புலம்பெயர் அமைப்புக்களுக்கு ஆதரவாகவும் செயற்பட்டு வருகின்றது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பிபதற்கு முன்னதாக, இவ்வாறான காணொளிகளை வெளியிட்டு, நாட்டின் அபிமானத்தையும் படையினரின் கௌரவத்தையும் தொடர்சியாக அவமதித்து வருகின்றது.

ஆகவே, சனல்4 நிறுவனம் இவ்வாறு தொடர்ச்சியாக செயற்படுவதற்கு இடமளிக்க முடியாது. ஆகவே, இலங்கை அரசாங்கம் என்ற வகையில் பிரிட்டனைத் தளமாகக் கொண்டு செயற்படும் அந்த நிறுவனத்துக்குரிய பதிலை வழங்குவதே பொருத்தமானது என்று பலரும் வலியுறுத்தினர்.

இதனடிப்படையில், அடுத்து வரும் நாட்களில் தேசிய பாதுகாப்புச் சபையின் கூட்டம் நடைபெறவுள்ளது. அந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும் விடயங்களின் பின்னரேயே அமைச்சரவை இறுதி தீர்மானத்தை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## உள்ளூராட்சி சபை....

நாடளாவிய ரீதியிலுள்ள உள்ளூராட்சி சபை நிறுவனங்களில், தற்போது சுமார் 8,000 இவ்வாறான ஊழியர்கள் காணப்படுகின்றனர். அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் அமைச்சரவைக்கு பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். அந்தவகையில், அந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்தவுடன் உள்ளூராட்சி சபை நிறுவனங்களில் பணிபுரியும் தற்காலிக, அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளர். அதேவேளை அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்டு வரும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளை நிறைவு செய்யுமாறு உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். எந்த அழுத்தங்களுக்கும் அடிபணியாமல் அந்த விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென்றும் இராஜாங்க அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## சனல் 4 வெளியிட்ட...

வந்து அவற்றை விரைவாகத் தீர்ப்பதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்கவும் அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

தற்போதைய நிலைமையின் தீவிரத்தன்மைக்கு ஏற்ப தற்போது முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் விரிவாக மீளாய்வு செய்ய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு அறிக்கை மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைக்கு மேலதிகமாக, எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ள அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளன. சரியான மற்றும் தீர்க்கமான நடவடிக்கைக்கு வழி வகுத்து, நிலைமை குறித்த தெளிவான புரிதலை சட்டம் இயற்றுபவர்களுக்கு வழங்குவதே இந்த விரிவான செயல்முறையின் நோக்கமாகும்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி முழு நாட்டையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், முழு இலங்கையும் சோகத்தில் ஆழ்த்தியது. உயிர்த்த ஞாயிறு ஆராதனைகளில் கலந்துகொண்ட பக்தர்கள் நிறைந்த கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் சொகுசு நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து, கொழும்பு நகரம் மற்றும் அதன் அண்டிய 08 இடங்களில் பேரழிவை ஏற்படுத்தும் 08 வெடிப்புகள் இடம்பெற்றன.

இஸ்லாமிய தீவிரவாத குழுக்களினால் நடத்தப்பட்ட இந்த தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 269 அப்பாவி உயிர்கள் பலியாகியதோடு சுமார் 500 பேர் படுகாயமடைந்தனர்.

உண்மையைக் கண்டறிவதற்காக இந்த முக்கியமான விசாரணைகள் நடத்தப்படும் அதேவேளை, பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

## போலி இணையதளமூடாக...

எந்தவொரு இணைய பரிவர்த்தனைகளையும் மேற்கொள்வதில்லை என தபால் மா அதிபர் ஆர். பி. குமார தெரிவித்துள்ளதுடன் அவ்வாறு போலியாக செயல்படும் மோசடியாளர்கள் தொடர்பில் அவதானத்துடன் செயல்படுமாறு அவர் பொது மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தபால் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளம் போன்ற போலி இணையதளம் ஒன்றை உருவாக்கி பொதுமக்களின் வங்கி அட்டைகள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொண்டு, மோசடிகள் செய்யப்பட்டு வருவதாகவும் அவ்வாறான மோசடி சம்பவம் ஒன்று தொடர்பில் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அந்த வகையில் தபால் திணைக்களத்தின் இணைய முகவரியும் மோசடியான வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளதுடன் இந்த மோசடிகளில் அகப்பட வேண்டாம் என அவர் பொது மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## உள்ளக விசாரணையுடன்...

நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் விளக்கமளித்துள்ள அமைச்சர்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ள சந்தர்ப்பத்தில், எமது நாட்டுக்கு எதிராக பல்வேறு அறிக்கைகளும் காணொளிகளும் வெளியிடப்படுகின்றன.

புலம்பெயர்ந்தோர் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். பிரச்சினைகள் தொடர்பில் நாம் புலம்பெயர் தலைவர்களுடன் கலந்துரையாடியுள்ளோம்.

அத்துடன், ஈஸ்டர் தாக்குதலுக்கு 29 மாதங்களுக்கு முன்னர் அதுதொடர்பாக பாராளுமன்றத்தில் நான் விசேட உரையாற்றியிருந்தேன்.

அப்போதிருந்த அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளர் உள்ளிட்டோர் என் மீது குற்றச் சாட்டுக்களை முன்வைத்தனர்.

தேசிய ஒருமைப்பாட்டை சீர்குலைக்கவே, நான் அவ்வாறு தெரிவிப்பதாக அவர்கள் கூறினர்.

இன்று எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சிலர் இவ்விடயம் தொடர்பில் மிகுந்த ஆர்வத்துடன் பேசுகின்றனர்.எனினும், அன்று நான் இத்தகவலை வெளியிட்ட போது இவர்களே கூச்சலிட்டனர்.

இதனை நான், தெரிவித்து 29 மாதங்களுக்குப் பிறகு அனைவரினதும் கண்களும் திறக்கப்பட்டுள்ளன.

அன்று எனது அறிக்கையை ஆராய்ந்திருந்தால் அப்பாவியான மக்கள் இன்றும் உயிருடன் இருந்திருப்பார்கள்.

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, ஓய்வுபெற்று செல்லும் போதே கூறியிருந்தார்.

ஆனால் அவரிடம் அது தொடர்பில் வாக்குமூலம் பெறச் செல்லும் போது நீதிமன்றத்தின் ஊடாக அதற்கு தடை யுத்தரவைப் பெற்றுக்கொண்டார்கள். ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக தற்போது 42 வழக்குகள் உள்ளன. அதேபோன்று தாக்குதல் தொடர்பாக உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச விசாரணையை நடத்தவும் அரசாங்கம் தயாராகவே உள்ளது.

அதை வேளை இன்று சர்வதேச விசாரணைகளை கோருபவர்களும் ஈஸ்டர் பயங்கரவாத குண்டுத்தாக்குதலின் போது, அரசாங்கத்தில் இருந்தனர் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

செனல் 4 என்பது புலம்பெயர் மக்களுடன் இணைந்து செயற்படும் ஒரு ஊடக அமைப்பாகும். அந்த ஊடகம் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் இறந்த மக்களுக்கு நீதி வேண்டும் என்று கேட்கும் நேர்மையான நிலைப்பாட்டில் செயற்படும் ஒரு அமைப்பல்ல. இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும் செனல் 04 ஒளிபரப்பியவாறு சம்பவங்கள் நடந்திருந்தால் அது தொடர்பில் ஆராய்ந்து முழுமையான விசாரணை நடத்தப்படும். அதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாட்டு மக்கள்...

"ஜோசப் பிரேசர் வைத்தியசாலை என்பதை விட நூற்றாண்டை கடந்துள்ள நிறுவனம் என்று கூற முடியும். பிரேசர்கள் ஸ்கொட்லாந்தில் உள்ள ஒரு புகழ்பெற்ற தலைமுறையை சேர்ந்தவர்கள். அங்கிருந்துதான் ஜோசப் பிரேசரும் இலங்கை வந்தார்.

பிரித்தானியர்கள் இலங்கைக்கு தேயிலை தொழிலை அறிமுகப்படுத்திய காலத்தில், அவர் ஒரு தோட்ட உரிமையாளராக இருந்தார். இலங்கைத் தேயிலைத் தோட்டங்களுக்கு மத்தியில் பிடகந்த தோட்டத்தை மையமாகக் கொண்டு தோட்டத் தொழிலை நடத்திச் சென்றார். இறுதியாக அவர் இலங்கையிலேயே உயிர் நீத்தார். ஏனைய தோட்ட உரிமையாளர்களுக்கு மாறாக அவரும் அவரது மனைவியாரும் இலங்கையில் ஓர் அடையாளத்தை பதித்து விட்டு சென்றனர்.

இந்நாட்டுக்கு அவர் சேவையாற்றியுள்ள அதேநேரம் நாட்டை கட்டியெழுப்பவும் பங்களிப்புச் செய்துள்ளார். பெருந்தோட்டத் தொழிலில் இலாபம் ஈட்டிய ஏனைய நூற்றுக்கணக்கான தோட்ட உரிமையாளர்களுக்கு மத்தியில், அவரும் அவரது குடும்பத்தினரும் இந்த நாட்டிற்காக ஜோசப் பிரேசர் வைத்தியச்சாலையை விட்டுச் சென்றுள்ளனர்.

உண்மையில், இந்த மருத்துவமனை நிறுவப்பட்டபோது, இந்த பகுதி வளர்ச்சியடைந்திருக்கவில்லை. வீடுகளும் அதிகளவில் இருக்கவில்லை.இதனால் அரச ஊழியர்கள் அனைவரையும் இவ்விடத்தில் தங்க வைப்பதற்கான முயற்சிகளும் காணப்பட்டன.

அதேபோல், பொலிஸ் நிலையமொன்றை ஆரம்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. இறுதியாக ஜோசப் பிரேசர் வைத்தியச்சாலை ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் வேறு முயற்சிகள் காணப்படவில்லை.

எனது பாட்டனார் பாட்டிக்கு சிரிபா வீதியில் காணியொன்றை வாங்கிக் கொடுத்திருந்தார். அங்கு எனது அம்மா அடிக்கடிச் சென்று வருவதை கண்டிருக்கிறேன். 1950 களில் அது வெற்று இடமாக காணப்பட்டது. இந்த வீதியில் இரண்டு அல்லது மூன்று வீடுகளை மாத்திரமே காணக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறானதொரு வைத்தியசாலை இல்லாததையிட்டு ஆண்கள் பொறாமை கொள்வர். ஆண்களுக்கு இவ்வாறானதொரு வைத்தியசாலை இதுவரையில் கிடைக்கவில்லை.

எவ்வாறாயினும் இவ்வாறானதொரு வைத்தியசாலை எமக்கு

கிடைத்திருப்பதையிட்டு நாம் அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டும். இந்த நிறுவனம் நன்றாக பராமரிக்கப்பட வேண்டும். இதை ஏற்றுக்கொள்வதற்கு வைத்தியசாலையின் தலைவர் சுமலை விட பொருத்தமான எவரும் இருக்க முடியாது.

ஜோசப் பிரேசர் வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரையில் சிறந்த முறையில் பராமரித்து வருகிறார். நம்மிடம் உள்ள வளங்களை கொண்டு என்ன செய்ய முடியும் என்பதற்கு அவர் சிறந்த உதாரணமாவார்.

இலங்கையில் உள்ள இவ்வாறான வைத்தியசாலைகள் எதிர்காலத்தில் இலங்கையர்களுக்கு மட்டுமன்றி வெளிநாட்டினருக்கும் தேவையான சேவைகளை வழங்க முடியும். இதன் வடிவமைப்பைப் பார்க்கும் போது, இது ஹோட்டலா,

வைத்தியசாலையா என்று கேள்வி எழும். நீங்கள் இங்கு வந்து பார்க்கும் போது நோயாளர்களை பார்க்க வந்திருக்கிறோமா, வார இறுதி விடுமுறையை கழிக்க வந்திருக்கிறோமா என்ற கேள்வி ஏற்படும். வைத்தியசாலையில் சேவைகள் இவ்வகையிலேயே உயர் தரத்தில் காணப்பட வேண்டும்.

இந்நாட்டுக்கு வெளிநாட்டு நோயாளர்களை மருத்துவ தேவைக்காக வரவழைப்பதற்கு மருத்துவ சுற்றுலாத்துறை மற்றும் சுகாதார சேவைகள் என்பன உயர் தரத்தில் காணப்பட வேண்டும். அவ்வாறான சேவைக்கு இந்த வைத்தியசாலையே உதாரணமாகும்.

எமது சுகாதார கொள்கை தொடர்பில் நாம் மீளச் சிந்தித்துப் பார்க்க

வேண்டும். இந்நாட்டி வைத்தியசாலை கட்டமைப்பு அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகள் என பிளவுபட்டு காணப்படுகின்றன. பெருமளவான வைத்தியர்கள் நாட்டை விட்டுச் செல்கிறார்கள்.

அதனால் நாட்டுக்குள் அதிகளவில் வைத்தியர்களை உருவாக்க வேண்டியுள்ளது. அதற்கமைய முதலாவது அரச சார்பற்ற வைத்திய பீடத்தை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம்.

தெற்காசியாவின் தொழில்நுட்ப நிறுவனமான (SAITM) இனை மொறட்டுவ வைத்தியசாலைக்கு கையளித்துள்ளோம். அதேபோல் இன்னும் பல மருத்துவ பல்கலைக் கழகங்களை நாட்டில் ஆரம்பிக்க முடியும் என நம்புகிறோம்.

வைத்தியர்களை அதிகளவில் உருவாக்குவதற்கு அதனை தவிர மாற்று வழிகள் எவையும் இல்லை. இலங்கை வைத்தியர்கள் இல்லாமல் ஐக்கிய இராச்சியம் தனது வைத்தியசாலைகளை

நடத்திச் செல்வதில் நெருக்கடியை எதிர்கொள்கிறது. அதனால் பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இந்தியாவுடன் சேர்ந்து, நாங்கள் ஐக்கிய இராச்சியத்தின் வைத்தியசாலை கட்டமைப்பை நாமும் நடத்திச் செல்கிறோம் என்று கூறினால் தவறாகாது. உதவி பெறும் நாடாக மட்டுமன்றி, உதவி வழங்கும் நாடாகவும் இலங்கை மாற வேண்டும். மேலும், அரச மற்றும் தனியார் துறைகள் இணைந்து செயற்படுவதற்கான செயற்றிட்டங்களை நாம் தயாரித்துள்ளோம்.

அரசாங்கத்தினால் நாட்டு பிரஜைகளுக்கு மருத்துவக் காப்புறுதி பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது. அப்போது சிகிச்சைக்காக தனியார் வைத்தியசாலைக்குச் செல்வதா? அரச வைத்தியசாலையை நாடுவதா? என்பதை மக்கள் தீர்மானிப்பர். இந்த நாட்களில் நானும் ஒரு வைத்தியரை போலவே செயற்படுகிறேன். மரணத்தின் இறுதி தருவாயிலிருக்கும் நோயாளியை சுமந்துச் செல்லும் அதேநேரம் அவருக்கு சிகிச்சையளித்து காப்பாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறேன்.

திறந்த பொருளாதார கட்டமைப்பின் கீழ் நாடு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. அதனால் தனியார் நிறுவனங்களும் அபிவிருத்தி அடையலாம். அவ்வாறு இல்லாவிட்டால் நாட்டுக்கு முன்னேற்றம் கிட்டாதென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## கொழும்பு பல்கலை...

ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தா ப னத்தின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த வீட்டுத் தொகுதியானது, சுமார் 800 மாணவர்களின் வசதி கருதி அமைக்கப்பட்டுள்ளது.

450 சதுர அடியைக் கொண்ட இந்த வீடு இரண்டு படுக்கையறைகள் கொண்டது.இதன் பெறுமதி சுமார் 60 இலட்சம் ரூபா என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு இலவச மானியமாக இது வழங்கப்படுகிறது.

விடுதி வசதிகள் இன்மையால் பல பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த காலங்களில் மிகவும் சிரமத்திற்குள்ளாகியிருந்தனர். சில சமயங்களில் பல்கலைக்கழகங்களில் போராட்டங்கள் கூட நடந்தன.

தொலைதூர இடங்களில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு வரும் மாணவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கும் இவ்வாறான விடுதிகளை நிர்மாணிப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயுமாறும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## இறக்குமதியாகும்...

(08) முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஒரு கிலோவுக்கு 50 ரூபா விசேட வரி விதிப்பதற்கு நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

## எச்சரிக்கை...

அவசியம். எனினும் நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் இதற்காக ஒதுக்குவதற்கு அரசாங்கத்திடம் நிதி இல்லாத நிலையே காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரின் இந்த கூற்றையடுத்து சபையில் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,

மேற்படி திட்டம் தொடர்பில் அமைச்சரவை அனுமதி கிடைக்கும் வரை இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டை பெற்றுத் தருமாறும் விரைவாக அதற்கான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

## போலி பாதுகாப்பு....

அறிவித்தது. வழிநடத்தல் பற்றிய குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் கூடியது. இதில் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சமன் ஜயசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் அழைக்கப்பட்டிருந்த போதே இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டன .

மதுபானப் போத்தல்களில் போலியான ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு விற்பனை செய்யப்படுவதால், ஒவ்வொரு போத்தலிலிருந்தும் அரசாங்கத்துக்கு 2,900 ரூபா வரி இழப்பு ஏற்படுவதாக வழிநடத்தல் பற்றிய குழுவில் அண்மையில் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கடந்த ஓகஸ்ட் மாதம் (22) குழு வழங்கிய பணிப்புரைக்கமைய மதுவரித் திணைக்களத்தினால் இந்த சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த விடயம் குறித்த தகவல்களை ஆராய்ந்த குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, இது போன்ற போலியான ஸ்டிக்கர் மோசடிகளில் ஈடுபட்டால் மதுவரி சட்டத்தின் 27வது பிரிவின் கீழ், நிறுவனத்தின் அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்யுமாறும், முறைப்பாடு செய்யுமாறும் பரிந்துரைத்தார்.

மேலும் நிலுவையில் உள்ள 06 பில்லியன் ரூபா வரியை இணங்கிக் கொண்ட கொடுப்பனவு முறைக்கு அமைய ஒக்டோபர் 30ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தாத மதுபான உற்பத்தி நிறுவனங்களின் உரிமத்தை மதுவரிச் சட்டத்தின் 27ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்யுமாறும் குழு அறிவுறுத்தியது.

## SMS செய்திகள்....

அனுப்ப வேண்டியுள்ளதாகவும் எனவே, அதனைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் கையடக்கத் தொலைபேசிகளூடாக அனுப்பப்படும் போலியான குறுஞ்செய்திகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பணம் பெறுவதற்காக மக்களின் இரகசிய தகவல்களை பெற்று, பண மோசடி செய்ய வாய்ப்புள்ளது. இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் இலங்கை கணினி அவசர செயற்பாட்டு பிரிவு மக்களுக்கு அறிவித்துள்ளது.

## தேசிய கடன்...

இவ்வாறு தெரிவித்துள்ளார். தேசிய கடன் மறுசீரமைப்பு மற்றும் அதன்மூலம் ஊழியர் சேமலாப நிதிக்கு ஏற்படப்போகும் பாதிப்புகள் தொடர்பிலும் பாராளுமன்றத்திலும் வெளியிலும் விமர்சனங்களும் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையிலேயே மத்திய வங்கியின் ஆளுநர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## நீர் தேக்கங்களில்... (03 ஆம் பக்கத் தொடர்)

இந்நிலையில், அந்த நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் சற்று அதிகரித்துள்ளதாகவும் அதனால் நீர் மின் உற்பத்தியின் வீதத்தை அதிகரிக்க முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தினமும் இடம் பெறும் மழை வீழ்ச்சியின் அளவை மதிப்பிட்டு அதற்கிணங்க அந்த வீதத்தில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் எதிர்பார்த்த அளவில் மழை வீழ்ச்சி அப்பகுதியில் இதுவரை இடம்பெறவில்லை. அந்த வகையில் கடந்த வாரத்தில் நூற்றுக்கு 14 வீதமாக இருந்த நீர் மின் உற்பத்தி தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார் .

தொடர்ச்சியாக மழை வீழ்ச்சி கிடைக்காத நிலையில், மீண்டும் நீர் மின் உற்பத்தியின் அளவை குறைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## விண்ணப்பங்கள் அக்.11 க்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

ஏற்றுக் கொள்ளப்பட்ட இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களில் மூன்று வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள முழு நேர அல்லது பகுதி நேர சேவையில் ஈடுபட்டுள்ள 1855 வயதிற்குற்பட்ட ஊடகவியலாளர்கள், சுதந்திர ஊடகவியலாளர்கள், பிரதேச ஊடகவியலாளர்கள், வெப் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக தொழினுட்ப கலைஞர்கள் இப்புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும். மேலும், விண்ணப்பிக்கின்ற பாடநெறி நேரடியாக ஊடகத் துறையுடன் தொடர்புபட்டதாக அமைதல் வேண்டும். விண்ணப்பதாரி, அரசாங்க தகவல் திணைக்களத்தால் 2023ஆம் ஆண்டிற்காக ஊடகவியலாளர்களுக்காக வழங்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் அடையாள அட்டையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இப்புலமைப் பரிசில் திட்ட முறைமை மூலம் இரண்டு முறை சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. முதற் சந்தர்ப்பத்தில் தகைமை பெற்று 5 வருடங்கள் கடந்த பின்னர் முதற் பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்த வெகுசன ஊடகவியலாளர்கள் இரண்டாவது சந்தர்ப்பத்திற்காக விண்ணப்பிக்கலாம்.

இந்த புலமைப் பரிசில் திட்ட முறைமை மூலம் இளமானி மற்றும் முதுமானிப் பாடநெறிகளுக்காக இரண்டு இலட்சம் (ரூ. 200,00.00) அல்லது குறுங் கால அல்லது நீண்ட கால சான்றிதழ் பாடநெறி, டிப்ளோமா, உயர் டிப்ளோமா பாடநெறிகளுக்காக ஒரு இலட்சம் (ரூ. 100,00.00) ரூபா அதிகபட்சமாக வழங்கப்படுகின்றது. புலமைப் பரிசிலுக்காக தகைமை பெறுகின்ற ஊடகவியலாளர்களுக்கு பாடநெறிக்கான கட்டணத்தில் 50% ஐ பாடநெறியின் ஆரம்பத்தில் முதற் தவணையாகவும், எஞ்சிய 50% இல் 25% ஐ பாடநெறியின் இரண்டாவது தணையிலும் எஞ்சிய 25% ஐ பாடநெறியினை பூர்த்தி செய்து சான்றிதழை முன்வைத்ததன் பிற்பாடு வழங்கப்படும்.

வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவு, விண்ணப்பங்களை பரீட்சித்து புலமைப்பரிசிலுக்கு தகுதியானோரை தெரிவு செய்யும்.

இதற்காக விண்ணப்பிக்கின்ற அனைத்து விண்ணப்பங்களும் 2023.10.11ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் (ஊடகம்), வெகுசன ஊடக அமைச்சு, இலக்கம் 163, “அசிதிசி” மெந்துர, கிருளப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

“அஸிதிஸி வெகுசன ஊடக புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டம் – 2023” தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக 0112 513645/0112514632/0112513469 என்ற தொலைபேசி இலக்கங்கıs தொடர்புகொள்ளவதினூடாக அல்லது மாதிரி விண்ணப்பப் படிவம் வெகுசன ஊடக அமைச்சின்https://www.media.gov.lkஇணையத் தளத்தில் நுழைவதினூடாக பெற்றுக் கொள்ள முடியும்.

## 13ஆவது மாடியிலிருந்து... (03 ஆம் பக்கத் தொடர்)

மாணவரான இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கல்கிஸை பதில் நீதிவான் ரத்னா கமகே விசாரணைகளை மேற்கொண்டார்.

கல்கிஸை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாகிஸ்தானின் 58 ஆவது பாதுகாப்பு மற்றும் தியாகிகள் தினம் கொழும்பில் அனுஷ்டிப்பு







## பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன பிரதம அதிதியாக பங்கேற்பு

பாகிஸ்தானின் 58 ஆவது பாதுகாப்பு மற்றும் தியாகிகள்தின நிகழ்வு கொழும்பு ஷாங்ரிலா ஹோட்டலில் கடந்த 7ஆம் திகதி இரவு இடம்பெற்றது. இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) உமர் பாரூக் புர்கி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். ஆண்டு தோறும் கொண்டாடப்படும் பாகிஸ்தான் பாதுகாப்பு மற்றும் தியாகிகள் தினமானது, இந்த வருடத்துடன் 58 ஆண்டுகள் பூர்த்தியாகி புதிய மைல்கல்லை எட்டியுள்ளது. மேற்படி தினத்தைக் குறிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர் வலுவான ஒற்றுமையின் அடையாளமாக இருக்கும் பாகிஸ்தானுக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நட்பு மற்றும் ஒற்றுமை, பாகிஸ்தான் இராணுவத்தில் உள்ள சிறந்த இராணுவத்தினர் மற்றும் அவர்கள் ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்புக்களையும் இதன்போது பாதுகாப்புச் செயலாளர் நினைவுகூர்ந்தார்.

இராணுவ ஒத்துழைப்பு மற்றும் இலங்கை முப்படை வீரர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி உதவிகள் உட்பட அவர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்பிற்காக தனது நன்றிகளையும் தெரிவித்தார்.

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் முஹம்மது பாரூக் வரவேற்புரை நிகழ்த்தியதுடன், மேற்படி நிகழ்வை நினைவுகூர்ந்து கேக் ஒன்றும் வெட்டப்பட்டது.

பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர்கள் மற்றும் இராணுவ இணைப்பு அதிகாரி, உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள், இலங்கை முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**ஸாதிக் ஷிஹான்**

# வெற்றியுடன் நிறைவடைந்த 'கொழும்பு இயன் மருத்துவ வாரம் - 2023' நிகழ்வு

## – ஏராளமான நோயாளர்கள் பயன் பெற்றனர்

மூட்டுவலி(Arthritis) மற்றும் பிற மூட்டுவலி தொடர்பான நோய்கள்' என்ற தொனிப்பொருளில் இவ்வருட உலக இயன் மருத்துவ தினத்துடன் இணைந்து கொழும்பு பல்கலைக்கழக இயன் மருத்துவ மாணவர் நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்த 'கொழும்பு இயன் மருத்துவ வாரம் 2023' நிகழ்ச்சித் தொடர் கடந்த 2ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை ஒருவாரம் நடைபெற்றது.

'மூட்டுவலி மற்றும் பிற மூட்டு நோய்களுக்கான சிகிச்சைக்கான இயன் மருத்துவ கிளினிக்' மற்றும் 'முதுமையுடன் தொடர்புடைய நோய்களுக்கான சிகிச்சைக்கான கிளினிக்' ஆகிய மேற்படி இரண்டு கிளினிக்குகளும் கடந்த 8 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் UCFM கோபுரத்தின் 11ஆவது மாடியில் காலை 8.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை இயன் மருத்துவ வல்லுநர்களின் வழிகாட்டுதலின் கீழ் இலவசமாக மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட பலர் இதனால் பயன் பெற்றனர்.









அங்கு, மூட்டுவலி மற்றும் அதனுடன் வரும் நோய்களை பரிசோதித்து அவர்களுக்கு உடல் சிகிச்சை அளிக்கப்பட்டது. நோய் நிலைகளைத் தடுக்கும் முறைகள், முதுமையால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு சிகிச்சை அளித்தல் பற்றி ஆலோசனை கூறப்பட்டது. நோயைத் தடுக்க என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேலும் இயன் மருத்துவரின் பங்களிப்பை ஊக்குவிப்பதாகவும் இருந்தது. இதற்கு பெருமளவிலான மக்கள் பங்களிப்பை வழங்கியதுடன், கொழும்பு இயன் மருத்துவ வாரம்_ 2023 பெரும் வெற்றியுடன் நிறைவடைந்தது.

## உலகமே வியக்கும்... (4 ஆம் பக்கத் தொடர்)

மனிதர்கள், தாவரங்கள் மற்றும் நுண்ணுயிரிகள் உட்பட அனைத்து உயிர்களின் மதிப்பையும், பூமி மற்றும் பரந்த பிரபஞ்சத்தில் நாம் எல்லோரும் ஒன்றோடொன்று இணைந்திருப்பதையும் உறுதிப்படுத்துகிறது. ஜி20 டெல்லி உச்சிமாநாட்டுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமை தாங்கினார். உலகின் பணக்கார மற்றும் சக்திவாய்ந்த நாடுகளை உள்ளடக்கிய 20 பேர் கொண்ட குழு, ஆபிரிக்க யூனியனை தங்கள் உறுப்பினர்களில் ஒன்றாகச் சேர்த்துள்ளமை அரசியலில் மிக முக்கியமான விஷயமாகப் பார்க்கப்படுகிறது. இதன் மூலம் 55 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஆபிரிக்க ஒன்றியம் ஜி 20 இல் இணைந்துள்ளது. பொருளாதார ரீதியாக, அரசியல் ரீதியாக, பாதுகாப்பு ரீதியாக ஆபிரிக்காவை இது புதிய உயரத்திற்குக் கொண்டு செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவின் முன்னெடுப்பின் கீழ் ஆபிரிக்கா இந்தக் குழுவில் இணைந்துள்ளது. இதன் மூலம் ஆபிரிக்க நாடுகள் இந்தியாவைப் பாராட்டத் தொடங்கி உள்ளன. இந்தியாவின் மாபெரும் அரசியல் நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறது.

இந்தியாவை ஆபிரிக்க நாடுகள், ஆபிரிக்க தலைவர்கள் கொண்டாடத் தொடங்கி உள்ளனர். இந்தியாவின் உதவியை இனி ஆபிரிக்க நாடுகள் என்றும் மறக்காது என்று சொல்லும் அளவிற்கு இது மிக முக்கியமான விஷயமாகப் பார்க்கப்படுகிறது. ஆபிரிக்க ஒன்றியம் ஏழு ஆண்டுகளாக முழு உறுப்பினராக வருவதற்கு முயற்சிக்கிறது. ஆனால் தென்னாபிரிக்கா மட்டுமே G20 உறுப்பினராக இருந்தது. இந்த நிலையில்தான் தற்போது ஆபிரிக்காவின் கோரிக்கை நிறைவேறி உள்ளது. காலநிலை மாற்றம், உணவுப் பாதுகாப்பு, இடம்பெயர்வு மற்றும் பிற பிரச்சினைகள் காரணமாக ஆபிரிக்கா இந்தக் குழுவில் அதிக கவனம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்கா, இந்தியா, சவுதி அரேபியா மற்றும் பிற நாடுகளின் தலைவர்களால் ஜி20 உச்சிமாநாட்டில் ரயில் மற்றும் துறைமுகங்கள் சம்பந்தப்பட்ட உள்கட்டமைப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளை உள்ளடக்கிய விதமாக இந்தத் திட்டம் கொண்டு வரப்பட உள்ளது. சீனாவின் பெல்ட் அண்ட் ரோட் திட்டத்திற்குப் போட்டியாக இந்தத் திட்டம் கொண்டு வரப்பட உள்ளது. சீனாவின் பெல்ட் மற்றும் ரோட் பார்வையில் மத்திய கிழக்கு ஒரு முக்கிய பகுதியாகும். வளைகுடா மற்றும் அரபு நாடுகளை ரயில்வே வலைப்பின்னல் மூலம் இணைக்கும் விதமாகவும், ஜி 20 இல் அருகருகே இருக்கும் நாடுகளை ரயில் மூலம் இணைக்கும் விதமாகவும், மற்ற நாடுகளை கடல் போக்குவரத்து மூலம் இணைக்கும் விதமாகவும் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நாடுகளை கடல் போக்குவரத்து மூலமும், வீதிப் போக்குவரத்து மூலமும் போக்குவரத்து பணிகளை மேற்கொள்ளும் விதமாக இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் டெல்லி கூட்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 20 நாடுகளின் தலைவர்களும் ஒருமித்த கருத்தோடு இந்த முடிவை எடுத்துள்ளமை கவனம் பெற்றுள்ளது. இந்தியாவிற்கான வெற்றியாக இது பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, வளமான எதிர்காலத்துக்கு அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார். மேலும் மொ ரோக்கோவில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் பல ரும் உயிரிழந்தை கேள்விப்பட்டு மிகவும் வருத்தம் அடைவதாகவும் அவர் கூறினார்.

இரண்டாம் நாளான நேற்றுக் காலை டெல்லி ராஜகாட் பகுதியில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்துக்கு உலகத் தலைவர்கள் வருகை தந்திருந்தனர். மழைக்கு நடுவே வருகைதந்த தலைவர்களை பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றார். ஐ.நா. பொது செயலாளர் அன்டோனியோ குட்ரெஸ், சர்வதேச நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா, வங்கதேச பிரதமர் ஷேக் ஹசினா, சிங்கப்பூர் பிரதமர் லீ ஸிங் லூங் ஆகியோர் முதலில் ராஜ்காட் வந்தடைந்தனர். காந்தி நினைவிடத்துக்கு வந்த ஒவ்வொரு தலைவரையும் அங்கவஸ்திரம் அணிவித்து பிரதமர் மோடி வரவேற்றார். காந்தி குடில் பின்னணியில் அவர்களுக்கு பிரதமர் மோடி அங்கவஸ்திரம் அணிவித்தார். பின்னர் தலைவர்கள் காந்தி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர். காந்தி நினைவிடத்தில் செருப்பு அணிவது மரியாதை நிமித்தமாக தடை செய்யப்பட்டுள்ள நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சப்பாத்தைத் தவிர்த்து தட்டையான கால் கவசத்தை அணிந்து கொண்டார். பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக், பிரான்ஸ் அதிபர் மேக்ரான் ஆகியோர் தங்கள் காலணியை அப்புறப்படுத்திவிட்டு சென்றனர். அங்கேபக்திப் பாடல் ஒலிக்கப்பட்டது. பின்னர் தலைவர்கள் மௌன அஞ்சலி செலுத்தினர்.








## சியபத்த பினான்ஸ் பெறுமதிமிக்க ஏல விற்பனை

டீசல் மற்றும் பெட்ரோல் மோட்டார் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள் உட்பட 88 வாகனங்கள்

2023 செப்டெம்பர் 16 ஆம் திகதி சனிக்கிழமை அன்று மு.ப. 10.00க்கு

சியபத்த பினான்ஸ் வாகன கூடம், இல. 1, ஸ்ரீ மஹா விஹாரை, ஸ்ரீ மஹா விஹாரை வீதி, பாமன்கடை என்ற இடத்தில்

பரீட்சிப்பது செப்டெம்பர் 13, 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் ஏல விற்பனை இடத்தில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை

அழையுங்கள் 0117 209 358 / 076 241 184 (சுரன்ஜித்)

| VEHICE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| **MOTOR CAR** | | |
| CP-CAF-4XXX | SUZUKI,ALTO LXI 800 | 2015 |
| SP KR-6XXX | HONDA,DAA-FD3 | 2008 |
| WP KP-8XXX | FIAT,LINEA | 2011 |
| 302-0XXX | TOYOTA,RAV4 | 1998 |
| WP CAD-7XXX | PEUGEOT,207 GT CC AUTO | 2010 |
| WP CAR-8XXX | DATSUN,REDI GO | 2016 |
| CP-CAW-7XXX | SUZUKI DAA - MH55S WAGON R | 2017 |
| 301-7XXX | NISSAN,PULSAR | 1997 |
| WP KT-9XXX | TOYOTA,PREMIO | 2010 |
| WP CAQ-6XXX | SUZUKI,DAA-MH44S WAGON R | 2014 |
| WP KL-7XXX | MARUTI,ZEN ESTILO VXI | 2010 |
| WP JD-3XXX | NISSAN,AD WAGON | 2001 |
| SP CBF-3XXX | SUZUKI,DAA-MK42S SPACIA | 2016 |
| 15-2XXX | TOYOTA,CARINA-AA60 | 1984 |
| WP CAM-1XXX | SUZUKI,ALTO LXI 800 | 2015 |
| WP CAB-9XXX | TOYOTA,DAA-ZWR80G NOAH | 2014 |
| 18-0XXX | HONDA,GRAND CIVIC | 1992 |
| SG JS-8XXX | NISSAN TB VY11 | 2001 |
| 17-8XXX | HYUNDAI,STELLAR | 1988 |
| SP CAO-8XXX | HONDA,DAA-GM4 GRACE | 2014 |
| WP HS-1XXX | DAEWOO,LEGANZA | 2000 |
| WP KE-6XXX | MAZDA,LA-GG3S | 2003 |
| SP KP-7XXX | TATA,SUMO JEEP | 2011 |
| SP KU-7XXX | PERODUA,VIVA ELITE AMIEZT | 2012 |
| 19-1XXX | MAZDA,E BG3P | 1992 |
| WP KH-8XXX | LIFAN,LF7160E | 2008 |
| 301-3XXX | TOYOTA,SV40 | 1996 |
| CP KC-4XXX | MARUTI,WAGON R | 2006 |
| WPKP-8XXX | TATA,NANO | 2011 |
| 64-6XXX | NISSAN,BLUE BIRD | 1991 |
| WP GU-0XXX | PEUGEOT,406 GLX | 2000 |
| 14-6XXX | TOYOTA,KE72V | 1983 |
| SP KC-1XXX | AUDI,A4 1.6L | 2004 |
| WP KK-1XXX | MICRO,REXTON 270 XDI | 2008 |
| WP CAL-6XXX | SUZUKI,ALTO LXI 800 | 2015 |
| WP GE-7XXX | NISSAN,CEFIRO | 1999 |
| WP CAQ-0XXX | TATA NANO | 2016 |
| WP KB-8XXX | CHERY QQ | 2006 |
| WP KE 7XXX | SUZUKI TA-HT81S | 2004 |
| **MOTOR VAN & JEEP** | | |
| WP PI-7XXX | DAIHATSU,HBD-CA700V HIJET | 2016 |
| WP PC-5XXX | DAIHATSU,LE-S320V HIJET | 2006 |
| 51- 4XXX | TOYOTA,LITE ACE GL | 1987 |
| 52-1XXX | TOYOTA,TOWN ACE | 1987 |
| 58-4XXX | MAZDA,SSF8V | 1991 |
| 250-2XXX | NISSAN,SERENA | 1992 |
| WP HU-2XXX | HYUNDAI,SANTAFE JEEP | 2003 |
| **MOTOR TRUCK** | | |
| SP DAA-0XXX | MAHINDRA,MAXXIMO PLUS VX | 2015 |
| WP PU-2XXX | TATA,ACE EX | 2012 |
| WP DAD-0XXX | TATA,SUPER ACE | 2015 |
| NC PX- 1XXX | TATA,ACE EX 2 | 2013 |
| NC-PT-9XXX | MAHINDRA,MAXXIMO | 2012 |
| SP PQ-7XXX | MAHINDRA,BOLERO MAXI TRUCK | 2011 |
| WP DAE-5XXX | DFSK,EQ1020DR | 2016 |
| NW PU-8XXX | MAHINDRA,MAXXIMO | 2012 |
| NW PQ-3XXX | TATA,ACE | 2011 |
| WP PU-2XXX | TATA,ACE EX | 2012 |
| WP PU-6XXX | MAHINDRA,BOLERO MAXI TBS3 PS | 2012 |
| EP-DAF-3XXX | SUZUKI DUAL PURPOSE (OTHER) | 2011 |
| **MOTOR LORRY** | | |
| WP LI-2XXX | LANKA ASHOK LEYLAND,COMET TIPPER 1613 | 2011 |
| WP LB-6XXX | DAIHATSU,TE S200P | 2003 |
| WP LA-8XXX | TATA,207DI | 2005 |
| WP LO-5XXX | ISUZU,NJR85AUE6W | 2016 |
| **MOTOR BIKE** | | |
| NW BHI-2XXX | BAJAJ,CT100 | 2018 |
| **THREE WHEELER** | | |
| CP QB-9XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2005 |
| WP AAV-1XXX | BAJAJ,RE | 2014 |
| SP QV-9XXX | BAJAJ,BAJAJ 4 S | 2009 |
| SP QA-4XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2005 |
| CP QS-4XXX | BAJAJ,BAJAJ 4 S | 2009 |
| CP AAK-4XXX | BAJAJ,RE 205 | 2013 |
| WP YK-4XXX | BAJAJ,RE 205 | 2012 |
| UP AAX-4XXX | BAJAJ,RE | 2015 |
| SG YP-2XXX | TVS,KING | 2011 |
| SG YA-6XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| WP YC-8XXX | BAJAJ,AR4S-UG | 2010 |
| WP AAZ-4XXX | BAJAJ,RE | 2015 |
| WP YD-0XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| WP ABH-0XXX | BAJAJ,RE | 2015 |
| WP YP-0XXX | BAJAJ,RE 205 | 2011 |
| SP JA-2XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2004 |
| WP QK-9XXX | BAJAJ,AUTO AR4S | 2007 |
| WP QP-5XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| WP QD-9XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| WP-AAJ-4XXX | BAJAJ,RE205 | 2013 |
| WP AAC-6XXX | BAJAJ,RE 205 | 2012 |
| WP YL-0XXX | BAJAJ,RE 205 | 2011 |
| WP YM-9XXX | BAJAJ,RE 205 | 2011 |
| WP ABB-7XXX | BAJAJ,RE | 2015 |
| WP QT-7XXX | BAJAJ,BAJAJ 4S | 2009 |

**விற்பனை நிபந்தனைகள்:**

- உள் நுழைவு: ஏல விற்பனை தினத்தில் ஒருவருக்கு மீளளிக்கப்படாத ரூபா 1,500 அனுமதிச் சீட்டு மற்றும் ரூபா 10,000 வீதம் மீளளிக்கப்படாத வைப்புத் தொகை மூலம்.
- கொடுப்பனவு: சுத்தியல் இறக்கப்பட்ட உடன் குறித்த விலைமனு பெறுமதியில் மீளளிக்கப்படாத 25% அடிப்படை வைப்பு ஒன்றை ஆரம்பத்தில் செலுத்த வேண்டும் என்பதோடு, எஞ்சிய 75% தொகையை 2023 செப்டெம்பர் 20 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00க்கு முன்னர் சியபத்த பினான்ஸ் பீஎல்சி, சியபத்த கோபுரம், 111, டட்லி சேனநாயக்க மாவத்தை, கொழும்பு 08இல் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திற்கு அல்லது எந்த ஒரு கிளைக்கும் பணமாக செலுத்தி வாகனத்தை அகற்றிக்கொள்ள வேண்டும்.
- எந்த ஒரு வாகனம்/ வாகனங்களை முன் அறிவித்தல் இன்றி ஏல விற்பனையில் இருந்து அகற்றிக்கொள்ளும் உரிமை முகாமைத்துவம் வசமானது.
- ஏலதாரரின் முடிவு இறுதி முடிவாகும்.

ANA AUCTIONEER Black Tie Service with True Aloha!

ஏ என் அல்கெவத்த ஒக்ஷனிய(ர்)

A N ALGEWATHTHA AUCTIONEER

No.333, Janajayacity, Rajagiriya.

m. +94 71 790 5 790

e. algewaththaauctioneer@gmail.com

www.lankaauction.lk

# விநாயகர் சதுர்த்தி என்றால் என்ன

**இந்துக்களால் இறை வழிபாட்டில் முதல் வழிபாட்டுக்கு உரியவரும் காணாபத்தியத்தின் முழுமுதற் கட–வுளாகவும் விளங்குபவர் விநாயகப் பெருமான் ஆவார்.**

இவரை கணபதி, லம்போதரன், பிள்ளையார், ஆனைமுகன், குகாக்கிரசர், கந்தபூர்வசர், மூத்தோன், ஒற்றை மருப்பினன், மூஷிகவாகனன், வேழமுகன், கஜமுகன், ஓங்காரன், பிரணவன் என பல பெயர்களால் இந்துக்கள் போற்றி வணங்குகின்றனர்.

விநாயகப் பெருமானுக்கு உரிய சிறந்த விரத நாட்களில் விநாயக சதுர்த்தியும் ஒன்றாகும்.விநாயகர் சதுர்த்தி என்றால் என்ன

விநாயகர் சதுர்த்தி என்பது விநாயகரின் முக்கியமான விழாவாகும். இவ்விழாவானது ஆண்டுதோறும் ஆவணி மாதத்தின் வளர்பிறைச் சதுர்த்தி நாள் அன்று கொண்டாடப்படுகிறது. பொதுவாக விநாயகரின் பிறந்த நாளாக கொண்டாடப்படுகிறது

ஆவணி மாதத்தில் வருகின்ற சுக்கில பட்சச் சதுர்த்தி தினமே 'விநாயகர் சதுர்த்தி' ஆகும். இது விநாயகருக்குரிய விரதங்களுள் சிறப்பான விரதமாகும்.



மாதந்தோறும் சுக்கில பட்ச சதுர்த்தி, கிருஷ்ண பட்ச சதுர்த்தி என்று இரண்டு சதுர்த்தி விரத தினங்கள் சம்பவிக்கின்றன. சுக்கில பட்சச் சதுர்த்தியை 'சதுர்த்தி விரதம்' என்று அழைக்கின்றனர். அவற்றுள்ளும் ஆடி மாதத்தில் வருகின்ற சுக்கில பட்சச் சதுர்த்தியை 'நாக சதுர்த்தி' என்றும் அழைக்கின்றனர். விநாயகர் சதுர்த்தி சிறப்பு

கைலாயத்தில் நடந்த பூஜையில் பிரம்மன் அளித்த மோதகங்களை விநாயகப்பெருமான் கையில் எடுத்துக் கொண்டு, உயரக் கிளம்பி உலகெல்லாம் சுற்றி, சந்திரலோகம் சென்றார்.

அங்கு பெருத்த தொந்தியும், ஒடிந்த தந்தமும், நீண்ட தும்பிக் கையும், கையில் மோதகத்தையும் தாங்கி வருகின்ற விநாயகப்பெருமானை கண்டு சந்திரன் வாய் விட்டுச் சிரித்துப் பரிகசித்தார்.

அதைப் பார்த்த விநாயகப்பெருமான் கோபம் கொண்டு, சந்திர பகவானின் அழகு கெட்டு தேய் வடையவும், அவரை காண்பவர்களும் அபவாதம் பெறுவார்கள் என்று சபித்தார்.

சந்திரன் பெற்ற சாபத்தை கண்டு வருந்திய தேவர்களும் முனிவர்களும் இந்திரனது தலைமையில் பிரம்மாவிடம் சென்று முறையிட்டனர்.

பிரம்மனோ தானோ, ருத்திரனோ, விஷ்ணுவோ இதற்கு ஒன்றும் செய்ய முடியாதென்றும், கணபதியையே சரணடைவது தான் ஒரே வழியென்றும் கூறினார்.

எந்த முறையில் வழிபட்டால் சந்திரனின் சாபம் நீங்கும் என்று தேவர்கள் கேட்க 'ஒவ்வொரு கிருஷ்ணபக்ஷ சதுர்த்தி தினத்திலே விரதம் ஏற்று, பலவகையான பழங்கள், அப்பம், மோதகம் இவைகளுடன் சித்ரான்னங்கள் முதலியவற்றை கணபதிக்கு அளித்தால் எண்ணிய வரங்களை அளிப்பார் அத்துடன் சாபவிமோசனம் கூறவும் வாய்ப்பு உள்ளது.'

என்று பிரம்மன் கூற சந்திர பகவானும் அன்றைய தினத்தில் சரிவர விரதம் அனுஷ்டித்து சாபவிமோசனம் பெற்றார்.




# மானுடவியல்



## சுந்தரர்

132

சுந்தரர் அவர்கள் இருவரும் தமக்கு நற்புதல்வியர் என்று கூறி தமது மடி மீது வைத்துத் தூய அன்புள்ளத்தோடு அவர்களை உச்சி முகர்ந்து அவர்களுக்கு வேண்டுவனவற்றை அளித்தார். தம் பாடல்களிலும் சுந்தரர் தம்மை, "சிங்கடி அப்பன்" என்றும் "வனப்பகை அவள் அப்பன்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திருவாரூரில் பரவையாருக்கும் சுந்தரருக்கும் ஏற்பட்ட ஊடலின் போது இறைவனே பரவையார் வீட்டிற்குத் தூது சென்று சமாதானம் செய்து வைத்ததாகக் கூறப்படுகிறது. ஒரு பெண்ணிற்காக, சுந்தரர் இறைவனை தூது அனுப்பினார் என்று, திருப்பெருமங்கலம் ஏயர்கோன் என்னும் கலிக்காம நாயனார் வெகுண்டெழுந்தார். கலிக்காமரின் சினத்தைத் தணிக்க, இறைவன் கலிக்காமருக்குச் சூலை நோயைத் தந்தார் என்றும் அதனைத் தீர்க்கச் சென்ற சுந்தரரைக் காண விரும்பாத கலிக்காமர் தம் வயிற்றைக் கிழித்து உயிர் நீத்தார் என்றும் கூறப்படுகிறது.



அதைக் கண்ட சுந்தரர் துடித்துப் போய் தானும் உயிர் துறக்க முற்பட்ட போது சிவபெருமான் தடுத்து, கலிக்காமரை மீண்டும் உயிர் பெறச் செய்தார் என்றும் பிறகு சுந்தரரும் கலிக்காமரும் நண்பர்களாயினர் என்றும் சொல்லப்படுகிறது.

**கயிலை அடைதல்**

சுந்தரர் தம்முடைய நண்பராகிய சேர மன்னரின் வேண்டுகோளுக்கிணங்க வஞ்சி மாநகர் அடைந்து அங்கு சில நாட்கள் தங்கி இறைவனை வணங்கி இருந்தார். ஒரு நாள் சேர மன்னர் நீராட சென்றிருந்தபோது சுந்தரர் திருக்கயிலைக்கு மீளும் நாள் வந்ததாகக் கண்டு திருவஞ்சைக்களத்துக் கோயிலைப் பணிந்து இறைவன் திருவடிகளைப் போற்றி இவ்வுலகின் பாச வாழ்க்கையை அறுத்திட வேண்டினார். கயிலைநாதர் வெள்ளானை மீது சுந்தரரை ஏற்றிக் கொண்டு வருமாறு அயன் முதலிய தேவர்க்குக் கட்டளையிட அவ்வாறே அவர்கள் திருவஞ்சைக்களத்துக் கோயிலின் முன் நின்ற நம்பி ஆரூரர்க்கு இறைவனின் கட்டளையை அறிவித்தனர். சுந்தரரும் அதனை ஏற்றுக்கொள்ள விண்ணவர் அவரை வெள்ளை யானை மேலேற்றி ஐவகை நாத மொலிப்ப அழைத்துச் சென்றனர்.

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 53

துன்பம் வந்தும் துவண்டு விடக் கூடாது. துன்பத்தை வெல்லும் வழியை யோசிக்காமல், துவண்டு போய் தம் திறமைகளை வீணாக்கக் கூடாது. எதிர்கொள்ள வேண்டிய கடமைகளை ஆற்றாமல், என்ன செய்வது', 'எங்கே போவது 'எப்படி தப்பிப்பது' என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தால் நமக்கு வந்த சிறு துன்பம் கூட நூறு மடங்கு வளர்ந்து விடும்.

வாழ்க்கையில் வரும் இன்ப துன்பங்களை நடுநிலை உணர்வுடனும் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும். இன்ப துன்பங்களை நம் வாழ்க்கைப் பாதையில் கடந்து செல்லும் பாதசாரிகளைப் போல் பாவிக்க வேண்டும். அவைகள் எவ்விதத்திலும் நமக்கு சம்பந்தமில்லாதவை என்று உணர வேண்டும்.

அமைதியான மனமும். பேதலிக்காத அறிவும் மனிதனின் இரு பெரும் சக்திகளாகும். இவை இரண்டின் உதவியைக் கொண்டு பெரும் இக்கட்டான சூழ்நிலையைக் கூட நாம் எதிர்கொள்ள முடியும். துன்பங்கள் வரலாம், போகலாம். சூழ்நிலைகள் மாறலாம். வாழ்க்கையை சுகமானதாக ஆக்கவும். திருப்திகரமாக அமைப்பதற்கும் மனிதன் எந்த ஒரு சூழ்நிலையிலும் தன் ஆற்றலை வீணடிக்கக் கூடாது.

பரந்து விரிந்து கிடக்கும் ஆசைகளில். நல்லெண்ணங்கள் மட்டுமே விருப்பம் என்கிற வரையறைக்குள் வருகின்றன. நல்லெண்ணங்களால் உருவாகும் நல்ல விருப்பங்கள் அபரிதமான சக்தி உடையவையாகும். நற்காரியம் செய்ய விரும்பும் அல்லது மேன்மையான லட்சியத்தை அடைய விரும்பும் ஒருவன், தனக்கெதிராக லட்சக்கணக்கான விரோதிகள் வந்தாலும், பலவித அசௌகர்யங்கள் உண்டானாலும், தான் கொண்ட குறிக்கோளில் வெற்றி அடைந்தே தீருவான்.



நல்ல எண்ணம் கொண்டவன். தான் கொண்ட குறிக்கோள் வெற்றியடைய வேண்டும் என்ற முயற்சியில் இடைவிடாது. தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பான். தன் குறிக்கோளும், முயற்சியும் ஒன்று சேரும் போது அவனிடம் ஓர் ஆன்மீக ஊற்று உருவாகி, அதன் மூலம் தன் லட்சியத்தில் வெற்றி பெறுவதற்கான முயற்சியில் ஒவ்வொரு நொடியும் முன்னேறிக் கொண்டே இருப்பான்.

நல்ல விருப்பங்களை கொண்ட மனிதனிடம் நம்பிக்கை. உற்சாகம், துணிவு, செயலாற்றும் தன்மை ஆகியவைகளுக்கு குறைவிருக்காது. வெற்றி பெறுவதற்கான குணங்கள் அவனிடம் நிறைந்திருக்கும். தோல்வி என்பதே அவனை நெருங்காது.

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

**19817) பாண்டுவின் இரண்டாவது மனைவியான மாத்ரியின் புதல்வர் யார்?** *நகுலன்*

**19818) நகுலன் யார் மூலமாக பிறந்தவர்?** *அஸ்வினி*

**19819) மாதுரா அரசின் இளவரசி யார்?** *மாதுரி*

**19820) பாண்டுவின் இரண்டாவது மனைவி யார்?** *மாதுரி*

**19821) பாண்டு மற்றும் குந்தி ஆகியோரின் மகன் யார்?** *தருமன்*

**19822) குருச்சேத்திரப் போரில் பாண்டவர்களின் தலைவராய் இருந்தவர் யார்?** *தருமன்*

**19823) துளசி எந்தத் தெய்வத்தின் வடிவமாக கருதப்படுகிறது?**
*லட்சுமி தேவியின்*

**19824) துளசி வாழ்வில் எதைத் தரும் என்று கூறப்படுகிறது?**
*ஐஸ்வர்யத்தை*

**19825) துளசி இலைகளை பறிக்க வேண்டும் என்றால் உடனே அவற்றை பறிக்கலாமா?** *கூடாது. சரியான நேரம் மற்றும் சரியான நாளில்தான் இதனை பறிக்க வேண்டும்.*

**19826) எந்தெந்த கிழமைகளில் துளசி இலைகளைப் பறிக்கக் கூடாது?**
*ஞாயிறு, செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில்*

**19827) எந்தெந்த நாட்களில் துளசியைப் பறிப்பது மிகவும் அசுபமானது என கருதப்படுகிறது?**
*ஏகாதசி, துவாதசி, அமாவாசை, பௌர்ணமி*

**19828) எந்தெந்த சந்தர்ப்பங்களில் துளசியை பறிக்கவே கூடாது**
*கு ழந்தை பிறக்கும் போது அல்லது வீட்டில் யாராவது இறக்கும் போது*

# தெமட்டகொடை மாவில ஒழுங்கை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்

இந்து சமுத்திரத்தின் முத்தென விளங்குவதும் சகல வளங்களையும் தன்னகத்தே கொண்டதுமான ஸ்ரீலங்காபுரியின் தலைநகரமாக விளங்கும் கொழும்பு மாநகரின் தெமட்டகொடை பேஸ் லைன் வீதியில் மஹாவெல ஒழுங்கையில் 150 ம் இலக்கத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் சுமார் 20 வருடங்களுக்கு மேலான வரலாற்றைக் கொண்டது.

இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் ஆரம்பத்தில் ஒரு பெரிய மரநிழலின் அடியில் கல்லை நாட்டி வணங்கி வந்தனர். காலப்போக்கில் அவ்விடம் பலகைக் கொட்டகையாக மாறியது.

காலங்கள் செல்லச் செல்ல 1990 இல் இக் கொட்டகை மடாலயமாக மாற்றி அமைக்கப்பட்டது. அங்கு விநாயகர், சிவலிங்கம், அம்பாள், வைரவர் ஆகிய தெய்வங்களின் திருவுருவச் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூஜைகளும் விரதங்களும் விழாக்களும் சீராக நடந்து வந்தன.

இவ்வாலயத்தில் 2000 ம் ஆண்டு "வாணி வித்தியா" என்னும் பெயரில் அறநெறி பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அறநெறி பாடசாலையில் தற்போது 75 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். ஒரே ஒரு பொறுப்பாசிரியருடனும் ஒரே ஒரு ஆசிரியருடனும் இப்பாடசாலை சிறப்பாக இயங்குகிறது.

2005 ஆம் ஆண்டு இப்பகுதியின் சுற்றுப் புறச் சூழல் அபிவிருத்தி செய்யப்பட்டது. குறிப்பாக வீதி அபிவிருத்தி, மேம்பாலம் அமைப்பு, மாடி வீடமைப்பு திட்டங்கள் ஆகியன ஆரம்பிக்கப்பட்டன. இதனால், சேரிப்புற நிலங்கள் சதுப்பு நிலங்களாக மாறின. குடியேற்றங்கள் அதிகரிக்கப்பட்டன. இதனால் ஆலய அமைவிடம் பள்ளத்தாக்கானது.

கூரைகள், கட்டிட மதில்கள் வழியாக மழைநீர் ஒழுகும் அவல நிலை காணப்பட்டது. இந்த அவல நிலையைக் கண்டு இப்பகுதியில் வாழ்ந்த மக்களும் ஆலய பரிபாலன சபையினரும் ஒன்றுகூடி இவ்விடயத்தி இவ் ஆகம நியதிகளுக்கு ஏற்ப இராஜகோபுரத்துடன் விஸ்தீரமான ஆலயம் அமைக்க முடிவு செய்தனர். சுமார் 75 இலட்சம் ரூபா செலவில் இந்த ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

200623 ம் திகதி பாலஸ்தாபன கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஆலயம் அமைக்கப்பட்டிருந்த இடம் முழுமையாக உடைக்கப்பட்டு இடத்தை விஸ்திரமாக்கப்பட்ட 2006211 ம் திகதி தைப் பூசத் திருநாளில் அத்திபாரக் கல் நடப்பட்டது. ஆஞ்சநேயர் ஆலய ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமி பிரதான கல்லை வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மூலஸ்தானம், அர்த்தமண்டபம், கட்டுமானப்பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. அதனோடு சுற்று புற சுவரும் கட்டப்பட்டதுடன் பொருளாதார பற்றாக்குறையால் வேலைகள் காலதாமதமாகின. 2007 ஆம் ஆண்டு அக்டோபர் 5 ஆம் திகதி வாயிற்கோபுரம் அமைக்க அடிக்கல் நடப்பட்டது.

இவ் விழாவில் கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரதியமைச்சர் பெ. இராதாகிருஷ்ணன் பிரதான கல்லை நாட்டி வைத்தார்.

இவ்விழாவில் கலந்து சிறப்பித்த அன்பர் ஒருவர் முழு கோவிலுக்கும் மேல் கொங்கிரீட் சிலப் செய்வதற்கு நிதி உதவி வழங்கினார்.

கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மேலக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன், முன்னாள் பிரதியமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி, மேல் மாகாண சபை உறுப்பினரும் கொழும்பு கிழக்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைப்பாளர் தயாகாந்த பெரேரா ஆகியோரின் சிபாரிசுகளின்படி இப்பாரிய திருப்பணியை சகோதர மொழி சகோதரர்கள், ஆலய அறங்காவலர்கள், நலன்விரும்புகள் ஆகியோரின் உண்டியல், டிக்கட் விற்பனை, நிதி வசூல் மூலமும் பொருள் உதவி மூலமும் திருப்பணி வேலைகள் நடைபெற்றுவந்தன.

இவ்வாலய பரிபாலன சபையினருக்கு நல் வழிகாட்டியாக இருந்த கிராண்ட்பாஸ், ஸ்ரீ ஞானவைரவர் ஆலய சிவாசாரியார் சிவஸ்ரீ பாலரவி சங்கரின் (ஜனாதிபதியின் இந்து மத அமைப்பாளர்) நல்லாசியுடன் நடைபெற்று வந்தன. இராஜகோபுரம் இல்லாமல் சிறு சிறு வேலைகள் பொருளாதார பிரச்சினையால் செய்ய முடியாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை 5 வருட இடை வெளியில் சுற்றுப்புற சூழல் மிகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் அமைக்கப்பட்டது. இங்கு புதிய மாடி மனை வீடுகள், எஸ்கோன் ரெசிடன்ஸ், கனியவள பெற்றோலிய அமைச்சு, உயரமான கட்டிடங்கள், மேம்பாலம் என பல கட்டிடங்கள் தோற்றம் பெற்றன. மஹாவெல ஒழுங்கையில் சுமார் 200 அடி தூரத்தில் அமைந்துள்ள இவ்வாலயத்தின் பரப்பளவு 1300 சதுர அடியாகும்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த சிற்பாசிரியரான விஸ்வஸ்ரீ செ. ச. சந்திரகுமார் தலைமையிலான குழுவினர் திருப்பணி வேலைகளை செய்தனர். இவ்வாலயத்தின் மூல மூர்த்தியாக ஸ்ரீ சித்தி விநாயகர் மூலஸ்தானத்தை அலங்கரித்துக் கொண்டு இருந்த அம்பாள், விஷ்ணு, துர்க்கை, நவக்கிரகம், வைரவர், காளியம்மன் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும் இங்கு திருக்கோயில்கள் அமைக்கப்பட்டன.

**கே. ஈஸ்வரலிங்கம்**






கொழும்பு, ஆட்டுப்பட்டித் தெரு, பாய் தோட்டம் அருள்மிகு முனீஸ்வரர் காளியம்பாள் ஆலயத்தின் 19வது ஆண்டு தேர் திருவிழா ஆலயத்தின் பிரதமர் குரு கண்டி ஐயா தலைமையில் நடைபெற்றது. இவ்வாலயத்தில் நேற்று நடைபெற்ற பாற்குட பவனியில் ஐக்கிய தேசிய கட்சியின் ஜிந்துப்பிட்டி தொகுதி பிரதான அமைப்பாளர் தேசமான்ய, தேசபந்து டிஸ்கோ ராஜா ( எம். எப். நய்ஸர்), கலைஞர் நந்தகுமார் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர். படங்கள் எம்.நசார்

# கிழக்கின் குரல்



# கிண்ணியாவில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு

**தம்பலகாமம் குறூப் நிருபர்**



திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பகுதியில் கடந்த ஐந்து தினங்களுக்கு மேலாக குடி நீர் இன்றி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊடான நீர் வெட்டு மூன்று நாட்கள் அமுலில் இருந்த நிலையில் குடி நீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இதனை நிவர்த்திக்கும் வகையில் நேற்று முன்தினம் (09) கிண்ணியா நகர சபை ஊடாக 6000 லீற்றர் கொள்ளளவு கொண்ட பவுசர் மூலமாக குடி நீர் விநியோகிக்கப்பட்டது. பொது மக்களின் முறைப்பாட்டுக்கமைய கிண்ணியா நகர சபை செயலாளர் எம்.கே.அனீஸ் அவர்களின் அதிரடி நடவடிக்கையால் பெரியாற்று முனை,பெரிய கிண்ணியா உட்பட பல பகுதிகளில் உள்ள மக்களுக்கு நீர் விநியோகிக்கப்பட்டன. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மூலம் தம்பலகாமம் பகுதியில் திருத்த வேலை காரணமாக நீர் துண்டிக்கப்பட்டாலும் கூட உரிய நேரத்துக்கு நீர் வழங்க முடியாமல் போனதால் குடி நீருக்கான தட்டுப்பாடு நிலவியுள்ளதுடன் இதனால் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர் உட்பட சரியான நேர காலத்துக்கு பாடசாலை அலுவலகம் செல்ல முடியாது தவிக்கின்றனர். கிண்ணியாவில் தொடர்ந்தும் இந்த நிலை அடிக்கடி ஏற்படுவதுடன் சீரான குடி நீர் விநியோக முறை இன்மையாலும் மக்கள் அவதியுறுவதாக தெரிவிக்கின்றனர்.

பல வருட காலமாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊடான நீர் விநியோகம் சீராக இயங்குவதில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளை பகிரங்கப்படுத்த கோரி மட்டக்களப்பில் பேரணி



**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் விசாரணைகளை பகிரங்கப்படுத்த கோரி 'குண்டுத்தாக்குதலை திசைதிருப்பாதே உண்மையை உலகறியச்செய்' எனும் தொனிப்பொருளில் கண்டன பேரணி ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலை திசை திருப்பாதே, உண்மையை உலகறியச்செய், எனும் தொனிப்பொருளில் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை பகிரங்கப்படுத்த கோரி, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக்கண்டன பேரணியானது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமை காரியாலயத்திலிருந்து கல்லடி பாலம் வரை முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு நகரில் நடைபெற்ற இக்கண்டனப் பேரணியின் போது சனல்4 காணொளிக்கு எதிராகவும், குரல் எழுப்பியிருந்தனர். இந்த கண்டன பேரணியின்போது முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளருமான பூ.பிரசாந்தன் தலைமையில் இடம்பெற்றிருந்தது. இந்த கண்டன பேரணி ஆர்ப்பாட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தனர்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; இப்பொழுது நீதிக்கான வழிகள் திறக்கின்றன

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**




உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மூலம் இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தின் உயிரோட்டத்தைப் பறித்தார்கள். இயலாத நிலையில் இறைவனிடமே கையேந்தினோம் இப்பொழுது நீதிக்கான வழிகள் திறக்கின்றன என்று கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டிருப்பதையொட்டி சுமார் 220 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வில் அவர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அஸிஷா பௌண்டேஷனின் ஏற்பாட்டில் ஏறாவூர் முஹைதீன் ஜும்மாப் பள்ளிவாசலில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் பொருளாதார நெருக்கடியினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பள்ளிவாசல்களில் சன்மார்க்க கடமை புரியும் இமாம்கள், முஅத்தின்கள், ஆலிம்கள் ஆகியோருக்கு உலருணவுப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன.

தொடர்ந்து உரையாற்றிய சுபைர், இந்த நாட்டில் இனங்களுக்கிடையே பாரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக முஸ்லிம் சமூகம் இன்று பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது. தலை நிமிர்ந்து வாழ்ந்த சமூகம், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குப் பின்னர் தலைக்குனிவுடன் வாழ்ந்து வருகின்றது. சொல்லொணாக் கவலைகள், கஸ்டங்கள், பொருளாதார அழிவுகள், அவமானங்கள் தாங்கிக் கொள்ள முடியாதவை. நெருங்கியிருந்தவர்களும் ஓரமாகி தூரமாகிச் சென்றார்கள்.

வடகிழக்கில் முஸ்லிம்கள் விரட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டது தொடக்கம் பேரினவாத இனவெறுப்பு, ஈஸ்டர் தாக்குதல், சடலங்கள் எரிப்பு என எல்லாவற்றிற்கும் சர்வதேச விசாரணை வேண்டும். அதற்காக இந்த சமூகம் அரசியலில் ஓரணியாகத் திரள வேண்டும் என்றார்.

# தற்கொலை எதிர்ப்பு தின விழிப்புணர்வு கருத்தரங்கு



**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

மண்முனைப்பற்று புதுக்குடியிருப்பு அம்மன் அறநெறிப் பாடசாலையில் தற்கொலை எதிர்ப்பு விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் மற்றும் கருத்தரங்கு அம்மன் அறநெறிப் பாடசாலை அதிபர் தி.நாகநாதன் தலைமையில் நடைபெற்றது.

கிழக்கிலங்கை சொற்பொழிவாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் இந்துப் பிரசாரகர் அகரம் செ.துஜியந்தன் கலந்து கொண்டார். இங்கு தற்கொலைக்கு எதிராக சபதம் ஏற்போம்! சாதனை படைத்து தரணியை வெல்வோம் எனும் தொனிப்பொருளில் மாணவர்களுக்கான விழிப்புணர்வு பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் 10 ஆம் திகதி தற்கொலை எதிர்ப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இங்கு விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் சாதிக்கப் பிறந்தவர்கள் நாம், கோழை போல் சாவதற்கு அல்ல தற்கொலை செய்வதற்கு ஒரு நொடி போதும் வாழ்வதற்கு ஒவ்வொரு நொடியும் தைரியம் வேண்டும். இறைவன் தந்த உயிரை இயற்கை கொண்டு செல்லும் முன் வேண்டாம் இந்த விபரித முடிவு போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறையில் நத்தைகளால் பயிர்களுக்கு பெரும் சேதம்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துவரும் நத்தைகளினால் மேட்டு நிலப்பயிரினங்கள் மற்றும் வீட்டுத்தோட்ட பயிரினங்கள் அதிகளவில் அழிவிற்கு உட்பட்டு வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தமன, இறக்காமம், குடுவில், செங்காமம், நாமல் ஓயா, மகா ஓயா, பதியத்தலாவ போன்ற இடங்களில் அதிகரித்துவரும் நத்தைகளின் தொல்லையால் பயிர்களின் இளம் தண்டுகளும், இலைகளும் நத்தைகளால் உணவாக உட்கொள்ளப்படுவதால் பயிர்கள் வாடி வதங்குவதுடன் நாளடைவில் இறந்தும் விடுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகளினால் வீட்டு தோட்ட முயற்சியாளர்கள் தமது பயிர்ச் செய்கையை கைவிட வேண்டிய மிகவும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

# அம்பாறையில் புதிய டென்னிஸ் விளையாட்டு கூடம் திறப்பு



அம்பாறை நகர சபை மைதானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட டென்னிஸ் விளையாட்டு கூடம் (tennis court ) நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் திலக் ராஜபக்ச, அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் (DIG) எச்.ஏ.என்.கே. தமயந்த விஜய சிறி, இலங்கை டென்னிஸ் சங்கத்தின் தவிசாளர் இக்பால் பின் இஸ்ஹாக் , இலங்கை இராணுவத்தின் 24 ஆவது காலாட்படை பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி, உள்ளிட்ட அதிதிகள் இணைந்து புதிதாக நிர்மாணிக்கப்பட்ட டெனிஸ் திடல் பெயர் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தனர். அத்துடன் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் (DIG ) எச்.ஏ.என்.கே. தமயந்த விஜய சிறி உள்ளிட்ட அதிதிகள் டென்னிஸ் விளையாட்டு கூடத்தை பார்வையிட்டதுடன் டென்னிஸ் விளையாட்டிலும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை மொறவெவயில் பிள்ளையார் சிலை வைப்பு

**ரொட்டவெவ குறூப் நிருபர்**



திருகோணமலை மொறவெவ பகுதியில் இன நல்லுறவினை கெடுக்கும் நோக்குடன் இனம் தெரியாதோரால் பன்குளம் 4ஆம் கண்டம் பிரதான வீதியின் அருகில் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டுள்ளது.

நேற்று (10) காலை அப்பகுதி மக்கள் இது பற்றி மொரவெவ பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசி மூலம் முறைப்பாடு செய்ததையடுத்து மொறவெவ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் குறித்த இடத்தில் மரத்திற்கு கீழ் புத்தர் சிலை மற்றும் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டிருந்த நிலையில் கிராம மக்களினால் குறித்த இடத்தில் இரு சிலைகளும் தேவை இல்லை என அகற்றப்பட்டது. இருந்த போதிலும் இன்றைய தினம் அந்த இடத்தில் இனம் தெரியாதோரினால் பிள்ளையார் சிலை மாத்திரம் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் இன முறுகலை ஏற்படுத்துவதற்காக செய்யப்பட்ட வேலையென அப்பகுதியில் உள்ள மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

உடனடியாக குறித்த இடத்தில் வைக்கப்பட்டுள்ள பிள்ளையார் சிலையை அகற்றுமாறும் அப்பகுதியில் உள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை குறித்த பகுதியில் தமிழ், சிங்கள இனத்தவர்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் இக்கால கட்டத்தில் இவ்வாறான செயற்பாட்டின் மூலம் இன நல்லுறவை சீர்குலைக்கும் விதத்தில் அமையப்பெற்றுள்ளதாகவும் குறித்த இடத்தில் புத்தர் சிலையோ, பிள்ளையார் சிலையோ தேவை இல்லை எனவும் அப்பகுதியில் உள்ள மக்கள் குறிப்பிடுகின்றனர். இது தொடர்பில், விசாரணைகளை மொரவெவபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காலநிலை மாற்றங்களினால் பாதிக்கப்படும் கிரான் பிரதேசத்தை மேம்படுத்த திட்டம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**




காலநிலை மாற்றங்களினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரிதும் பாதிக்கப்படும் கிரான் பிரதேச செயலகப்பிரிவிலுள்ள கிராமங்களை சைல்ட்பண் நிறுவனத்தின் நிதிஉதவியுடன் மேம்படுத்த புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்புதிய திட்டம் ஆரம்பிக்கப்படுவது தொடர்பாக துறைசார் நிபுணர்களுடன் கலந்தாலோசிக்கும் கூட்டம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந்த தலைமையில் (08) மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது காலநிலை மாற்றத்திற்கேற்ப மழை வெள்ளத்தினாலும், வரட்சியினாலும் பெரிதும் பாதிக்கப்படும் கிரான் பிரதேச செயலகப் பிரவிலுள்ள குடும்பிமலை, கோறாவெளி, முறுத்தானை, பேரில்லாவெளி, ஊத்துச்சேனை ஆகிய ஐந்து கிரமங்கள் இத்திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இக் கலந்துரையாடலில் சைல்ட்பண்ட் நியூசிலாந்து நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் எம். பௌலர், எக்சன் யுனிடி லங்கா நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே. கஜேந்திரன், மாவட்ட செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆர். ஜதீஸ்குமார், அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம். சியாத், அரச சார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட இணைப்பாளர் யூ.எஸ்.எம். றிஸ்வி உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

# நாவல் பழம் பறிக்கச் சென்ற சிறுவன் படுகாயம்

**ரொட்டவெவ குறூப் நிருபர்**

நாவல் பழம் பறிக்கச் சென்ற சிறுவன் மரத்தில் இருந்து தவறி விழுந்து படுகாயங்களுக்குள்ளான சம்பவம் நேற்று மூதூரில் இடம்பெற்றுள்ளது. குறித்த சம்பவத்தில் மூதூர் நடுத்தீவு பகுதியைச் சேர்ந்த 14 வயதான சிறுவனே படுகாயமடைந்துள்ளார்.

மூதூர் நடுத்தீவு பகுதியைச் சேர்ந்த எஸ்.சகான் (வயது 14) தனது நண்பர்களுடன் நாவல் மரத்தில் ஏறி நாவல் பழம் பறித்துக் கொண்டிருக்கும்போது தவறி விழுந்துள்ளார். குறித்த சம்பவம் (09) மாலை இடம்பெற்றுள்ளது. காயங்களுக்குள்ளான குறித்த சிறுவன் சிகிச்சைக்காக மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சிறுவனின் இடுப்பு எலும்பு முறிவுக்குள்ளாகியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சுகாதார சேவை திணைக்களம்
# போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய
## ஆய்வுகூட உபகரணங்களின் வழங்கலுக்கான கேள்விமனு அறிவித்தல்

01. கீழ் குறிப்பிடப்பட்ட ஆய்வுகூட உபகரணங்களின் வழங்கலுக்கான முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனுக்கள் காலி, கராப்பிட்டிய, போதனா வைத்தியசாலை கேள்விமனு குழு, தலைவரினால் ஏற்கப்படும்.

| | உருப்படியின் பெயர் | அளவு | வழங்கப்படும் திகதி மற்றும் நேரம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | Fully Automated Coagulation analyzer | 01 | 2023.09.11 மு.ப. 9.00 - பி.ப. 03.00 | 2023.10.02 மு.ப. 10.00 |
| 2 | Laboratory Refrigerator | 01 | | |
| 3 | Dual Head Microscope | 01 | | |
| 4 | Laboratory Autoclave | 02 | | |
| 5 | 20 C Freezer | 01 | | |
| 6 | Tissue Embedding System | 01 | | |
| 7 | Fully Automated Tissue Processor | 01 | | |
| 8 | Fully Automated Microtome | 01 | | |

02. இலங்கை சந்தைக்காக வழங்கப்பட்ட உபகரணத்தின் உற்பத்தியாளர்களின் பரிந்துரை செய்யப்பட்ட ஏக பிரதிநிதி/ அங்கீகாரம் பெற்ற முகவர்கள் மாத்திரமே இந்த கேள்விமனுவில் பங்கேற்க தகுதி பெறுவர்.

03. எந்த ஒரு ஆர்வமுடைய தகுதிபெற்ற வழங்குநர், முகவர் பிரதிநிதி அல்லது வழங்குநர் சார்பில் வாங்கப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியுடன் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு

**கேள்விமனு ஆவணத்தை வாங்கும் சந்தர்ப்பத்தில்**

a) காலி கராப்பிட்டிய, போதனா வைத்தியசாலை, பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம்

b) ஒவ்வொரு கேள்விமனுவுக்காகவும் காலி கராப்பிட்டிய, போதனா வைத்தியசாலை, கணக்காளருக்கு ரொக்கப்பணத்தில் 2500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தல் வேண்டும்.

c) உறுதி செய்யப்பட்ட பிரதி ஒன்றுடன் வர்த்தக பதிவின் சான்றிதழ்

d) உள்ளூர் முகவர் ஒருவராக நியமிக்கப்பட்டதன் முதன்மையாளர் மூலம் வழங்கப்பட்ட சான்றிதழ்/ கடிதம்/ அற்றோனி தத்துவம்

**கேள்விமனு சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில்**

a) கொழும்பு, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, "சீக்ரம் மதுர", பொது ஒப்பந்த பதிவாளர் மூலம் வழங்கப்பட்ட செல்லுபடியான பதிவுச் சான்றிதழின் அசல் பிரதியை சமர்ப்பித்தல்.

b) 2% விலைமனு பிணையை நிரூபிப்பதற்கான ஆவண அத்தாட்சி (விலைமனு பிணைக்கான காசோலைகள் ஏற்கப்படமாட்டாது)

c) கேள்விமனு ஆவணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 - பி.ப. 3.00க்கு இடையே காலி, கராப்பிட்டிய போ.வை., பணிப்பாளரிடம் இருந்து பெற முடியும்.

d) CDDA பதிவுச் சான்றிதழ் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விமனுக்கள் ஏற்பது நிறைவடைந்த பின் பணிப்பாளரின் அலுவலகத்தில் அவை உடன் திறக்கப்படும். மேலதிக விபரங்களை காலி, கராப்பிட்டிய, போதனா வைத்தியசாலை, பணிப்பாளர்/ கணக்காளரிடம் இருந்து பெற முடியும்.

தொலைபேசி இல.: 0912232159
தொலைநகல் இல.: 0912227638

**தலைவர், கேள்விமனு குழு,**
**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய, காலி.**

---

நிதி, பொருளாதார உறுதிப்பாட்டு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

# இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்
## பெறுகை விளம்பரம்

## பேலியகொட இடப்பரப்பில் உள்ள உடைந்த / பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை விற்பனை செய்தல்

### கேள்வி இல. SDSQ/2023/S-2/V/P/M/01

1. இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபன பெறுகைக்குழுவின் தலைவரினால் பேலியகொட இடப்பரப்பில் உள்ள உடைந்த / பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை விற்பனை செய்வதற்காகத் தகைமையுள்ள உள்நாட்டு விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. சகல விலைமனுதாரர்களும் உருப்படியின் முழுமையான பெறுமதியின் 10% பெறுமதியான 2023-11-25ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் பிணை முறியொன்றை (நிபந்தனையற்ற வங்கிப் பிணை முறி / விலைக்கோரல் வைப்பு) சமர்ப்பித்தல் வேண்டும்.

3. மீளளிக்கப்படாத கட்டணமான 1000.00 ரூபாவை செலுத்திய பின்னர் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தின் 7ஆம் மாடியிலுள்ள நிதிப் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் கேள்விப் படிவங்களை 5ஆம் மாடியில் அமைந்துள்ள வழங்கல் பிரிவிலிருந்து வேலை நாட்களில் மு. ப. 9.00 மணிக்கும் பி.ப. 4.00 மணிக்குமிடையில் பெற்றுக்கொள்ளலாம்.

4. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இரு கடித உறைகளில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையில் இட்டு தலைவர், பெறுகைக் குழு, அரச பொறியியல் கூட்டுத்தாபனம், இல. 130, டபிள்யூ.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு-02 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் 2023-09-25ஆம் திகதி பிப. 2.00 மணிக்கு முன்னர் பிரதான அலுவலக தரை மாடியிலமைந்துள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

5. விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் உடைந்த / பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் பேலியகொட இடப்பரப்பில் வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரையில்) மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் 011 2931450. 076-9937005 எனும் தொலைபேசி இலக்கங்களில் நேரத்தை ஒதுக்கிக்கொண்டு பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. மேலதிக விபரங்களுக்கு இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனப் பிரதான பெறுகை அதிகாரியைத் தொடர்புகொள்ளவும். தொ.பே. இல. 0112434485.

7. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்,**
**இல. 130, W.A.D. ராமநாயக்க மாவத்தை,**
**கொழும்பு -02.**
**2023-09-11.**

---

# Airtel Fastest போட்டியில் தெரிவான தேனுரதனுக்கு LPL அங்கீகாரம்



**இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் தமிழ் பேசும் வீரர்கள் தேசிய அணிக்கோ அல்லது கழகங்களிலோ விளையாடினாலும் அவர்கள் தேசிய மட்டத்திற்கு முன்னேறிச் செல்வது என்பது மிகவும் கடினமென்றே கூறலாம். அந்த வகையில் இலங்கையின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளீதரன் ஒரு விதிவிலக்கானவர். இருந்தாலும் கிரிக்கெட் விளையாடும் வீரர்களுக்கு எவ்வளவு தான் திறமை இருந்தாலும் அவர்கள் அந்த இடத்திற்கு முன்னேறிச் செல்வதற்கு அவர்களுக்கு ஒரு களம் அவசியம்.**

**அவ்வாறு ஒரு களத்தை ஏற்படுத்திக் கொள்ள தனி ஒரு வீரருக்கு விளையாட்டில் திறமை மாத்திரம் இருந்தால் போதாது. அவருக்கு ஒரு பின்புலம் அவசியம் தேவைப்படுகிறது. அந்த வகையில் மட்டக்களப்பைச் சேர்ந்த ரட்னராஜா தேனுரதனுக்கும் அவரது திமைகளை வெளிப்படுத்த ஒரு களம் கிடைத்தது.**

**அந்தத் களம் தான் Airtel Fastest போட்டி, இந்த போட்டியில் தெரிவாகி தனது திறமைகளை வெளிப்படுத்தியதால் நடந்து முடிந்த LPL போட்டியில் லைக்கா கிங்ஸ் ஜஃப்னா அணிக்காக தேனுரதன் தெரிவாகியமையும் குறிப்பிடத்தக்கது. அது தொடர்பில் அவரிடம் நடத்திய கலந்துரையாடலில்...**

**கே: உங்களின் சுய விபரம்?**

ப:எனது பெயர் ரட்னராஜா தேனூரதன்.மட்டக்கஎப்பு இருதயபுரத்தில் வசிக்கிறேன். எனது குடும்பம் அப்பா, அம்மா, அண்ணா, தம்பி ஆகியோர் ஆவர்.

**கே: நீங்கள் ஒரு முழுநேரமாக கிரிக்கெட் வீரராக வேண்டுமென்ற தீர்மானத்தை எப்போது எடுத்தீர்கள்?**

ப: இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான எஞ்சலோ மெத்யூஸ் போல ஒரு சிறந்த வீரராக வர வேண்டுமென்பது எனது கனவு. 2016ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண கிரிக்கெட் அணியின் தலைவராக இருக்கும் போது சக அணியின் தலைவர்கள் அனைவரும் அதவாது அவிஸ்க பெர்னாண்டோ, பெத்தும் நிச்சங்க, தமித் டி சில்வா, நவிந்து டீர்மால் அனைவரும் தேசிய அணியில் விளையாடுபவர்கள். அவர்களைப் பார்த்த போது நானும் சிறந்த கிரிக்கெட் வீரராக வேண்டுமென்ற எனது கனவை நனவாக்க ஆசைப்பட்டேன்.

**கே: LPL லைக்கா ஜஃப்னா கிங்ஸில் உங்களது பங்கு என்ன?**

ப: 2020இல் நெட் போலராகவே இணைந்து கொண்டேன். அதில் எனது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்தியதால் நான் 2021ஆம் ஆண்டில் நடைபெற்ற LPL போட்டித் தொடரில் லைக்கா ஜஃப்னா கிங்ஸின் பிரதான கிரிக்கெட் அணியின் குழாமில் சேர்த்துக் கொள்ளப்பட்டேன். 2021ஆம் ஆண்டில் அணியின் சகலதுறை ஆட்டக்காரராகவும் தெரிவு செய்யப்பட்டேன். 2023ஆம் ஆண்டு அதாவது இந்த வருடம் நடைபெற்ற எல்.பி.எல். கிரிக்கெட் போட்டித் தொடரில் மிதவேக பந்துவீச்சாளராக விளையாடினேன்.

**கே: நீங்கள் LPLக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள் என்று எப்போது அறிந்து கொண்டீர்கள்?**

ப: LPLஇக்கான வீரர்கள் தேர்வு நடைபெற்றது. அவர்கள் மெய்நிகர் தொழில்நுட்பம் வாயிலாக தெரிவு செய்யப்பட்டனர். அதன் முதல் சுற்றில் என்னுடைய பெயர் தெரிவாகவில்லை. அது எனக்கு கொஞ்சம் வருத்தமாக இருந்தது. இரண்டாவது சுற்றுவட்டத்தில் ஏலத்திற்கு வந்த போது லைக்கா ஜஃப்னா கிங்ஸ் எனது பெயரை தெரிவு செய்தது. இதனை இணையத்தளம் ஊடாக நான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

**கே: நீங்கள் LPLக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள் என்று தெரிந்து கொண்டவுடன் உங்கள் உணர்வுகள் எப்படி இருந்தது மற்றும் உங்களது குடும்பத்தினர் அது தொடர்பாக எவ்வாறான பிரதிபலிப்பை வெளிப்படுத்தினர்?**

ப: எனக்கு சொல்ல வார்த்தைகளே இல்லை. காரணம் நான் இதை கொஞ்சம் கூட எதிர்பார்த்திருக்கவில்லை. முதலில் என்னுடைய குடும்ப அங்கத்தினர்களுக்கு தொலைபேசி மூலம் இந்த செய்தியை அறிவித்தேன். அப்போது என்னுடைய குடும்ப அங்கத்தினர்கள் மிகவும் சந்தோஷமடைந்தார்கள். அதன்பின்னர் என்னுடைய சக ஊழியர்களுக்கு கூறினேன். அனைவரும் என்னை வாழ்த்தியதுடன், எதிர்கால வளர்ச்சிக்காக பிரார்த்திப்பதாகவும் கூறினார்கள்.

**கே: LPLக்காக பெற்றுக் கொண்ட பயிற்சி நடவடிக்கைகள்/ விளையாடும் போது உங்களுக்கு கிடைத்த அனுபவங்கள் என்ன?**

ப: குறிப்பாக கூறினால் பயிற்றுவிப்பாளர்கள் சில நுட்பங்களை சொல்லித்தந்தார்கள். உதாரணமாக பந்தை எவ்வாறு வேகமாகவும் நுட்பமாகவும் வீசுவது என்பதை சொல்லித் தந்தார்கள். மேலும் ஒவ்வொரு விதமாக துடுப்பாட்ட வீரர்களுக்கு அமைய பந்தை எவ்வாறு வீசுவது என்பதை மிகச் சிறப்பாக சொல்லித் தந்தார்கள். பொதுவாக நான் வேகமாக பந்துவீச மாட்டேன். எனக்கு கிடைத்த பயிற்சி மற்றும் நுட்பங்களால் எனக்கு சிறப்பாக பந்து வீச முடிந்தது.

**கே: Airtel Fastest போட்டி குறித்த உங்கள் அனுபவம் மற்றும் அந்த நினைவுகள் குறித்து சில குறிப்புகள்?**

ப: இளம் கிரிக்கெட் வீரர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவருவதற்காக ஒரு சிறந்த தளத்தை உருவாக்கும் ஒரு நடவடிக்கையை Airtel முன்னெடுத்தது. பல மாவட்டங்களில் தேர்வுகள் நடைபெற்றன. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற Airtel Fastest போட்டியில் மாவட்ட ரீதியில் மணிக்கு 124 என்ற வேகத்தில் பந்துவீசி இரண்டாவதாக தெரிவு செய்யப்பட்டேன். அதுவொரு சந்தோஷமான தருணமாக இருந்தது. என்னுடைய திறமைகளை வெளிகொண்டுவந்த ஒரு பிரமாண்டமான ஒரு போட்டி நிகழ்ச்சி என்றே கூறுவேன். நான் இந்த நிலைமைக்கு வருவதற்கு Airtel Fastestஉம் ஒரு முக்கிய காரணமாகும்.

**கே: லசித் மாலிங்க, சமிந்த வாஸ் போன்றவர்களை சந்தித்த போது உங்கள் உணர்வு எப்படி இருந்தது?**

ப: Airtel Fastest இன் அடுத்த சுற்றுத் தெரிவுக்காக கொழும்பிற்கு வந்த போது இங்கு சந்தித்த இலங்கை அணிக்காக விளையாடிய சமிந்த வாஸ், லசித் மலிங்க, தில்ஹார பெர்னாண்டோ, அநுர சமரநாயக்க, ஹஷான் திலக்கரத்ன மற்றும் உபுல் சந்தன ஆகியோரை நேரடியாக சந்தித்தது மட்டுமல்ல அவர்கள் நேரடியாக தந்த பயிற்சியும் இன்னும் எனக்கு நினைவில் இருக்கிறது. அவர்களை போல ஒருநாள் நானும் சிறந்த கிரிக்கெட் வீரராக வரவேண்டுமென்ற ஆர்வம் எனக்குள் மேலும் மேலும் அதிகமாகியது.

**கே: Airtel Fastest போட்டித்தொடர் முழுவதும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஏதாவதொரு அனுபவம் LPL போட்டித் தொடருக்கு உதவியதா? அது என்ன என்று சொல்ல முடியுமா? அந்த படிப்பினை குறித்து இன்னும் நம்பிக்கை வைத்துள்ளீர்களா?**

ப: Airtel Fastest தெரிவுப் போட்டியில் நான் பந்து வீசும் போது என்னை பல்வேறு கோணங்களில் வீடியோ பதிவு செய்தார்கள். அதில் நான் எவ்வாறு பந்து வீச வேண்டும், எந்த முறையில் பந்த வீச வேண்டும் என்பது தொடர்பாக இலங்கை அணியின் நட்சத்திர பந்து வீச்சாளரான சமிந்தவாஸ் எனக்கு கற்றுக்கொடுத்தார். அந்த முறை எல்.பி.எல். கிரிக்கெட் தொடரில் விளையாட எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தால் அந்த பயிற்சியை சிறப்பாக பயன்படுத்துவேன்.

**கே: தேசிய அல்லது சர்வதேச மட்டத்திலான கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகளில் விளையாட விரும்பும் சிறுவர்களுக்கு நீங்கள் கூறும் ஆலோசனை ?**

ப: எந்தத் துறையிலும் சிறந்து விளங்குவது கஷ்டம். ஆனால் முயற்சி செய்தால் அதை கண்டிப்பாக அடைய முடியும். அதுபோல் கிரிக்கெட் விளையாட்டிலும் விளையாட ஆசை இருந்தால் மாத்திரம் போதாது, அதற்கு கடினமான முயற்சியும் தேவை. அத்தோடு கிரிக்கெட் விளையாட்டுக்கான பயிற்சியும் மிகவும் முக்கியமானது. சில நேரங்களில் நாம் பெற்றுக் கொள்ளும் பயிற்சி மற்றும் முயற்சி வீண் என்று நினைக்கலாம், ஆனால் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டே இருந்தால் அது ஒருபோதும் வீண் போகாது என்பது என்னுடைய வாழ்க்கை அனுபவம்.

---

## மீட்கப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை

30.06.2022ம் திகதி வரை வன்னிப் பிராந்தியத்தில் உள்ள மக்கள் வங்கியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 10.10.2023 திகதி வரை மீட்கப்படாத நகைகள் கீழே கொடுக்கப்பட்ட திகதி மற்றும் இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஒவ்வொரு நாளும் முற்பகல் 9.00 மணிமுதல் ஏல விற்பனை நடைபெறும்.

| | |
|---|---|
| ஏலவிற்பனை திகதி | 11.10.2023 மற்றும் 12.10.2023 |
| ஏலவிற்பனை இடம் | பிராந்திய காரியாலயம், வன்னி, வவுனியா |
| அடகு வைக்கப்பட்ட கிளை | முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், முருங்கன், செட்டிக்குளம் |
| அடகு வைக்கப்பட்ட சேவை நிலையம் | புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், வவுனியா நகரம். நெடுங்கேணி, பேசாலை, கிளிநொச்சி நகரம், பளை, மல்லாவி, கனகராயன்குளம். நானாட்டான், சிலாவத்துறை |

மேற்படி ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி ரத்துச் செய்யவோ, ஒன்று சேர்க்கவோ அல்லது பிற்போடவோ வங்கிக்கு சகல அதிகாரமும் உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமைச் செயலகம், வன்னி**
**தொலைபேசி இல. 024-2225054/ 024-2222972**

PEOPLE'S BANK
Pride of the Nation

---

## மக்கள் வங்கி
## மீட்கப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

மக்கள் வங்கியின் நுவரெலியா பிராந்தியத்தின் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 2022.06.30 திகதி வரை அடகு வைக்கப்பட்டு 13.10.2023 திகதி வரை மீட்கப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் கீழ் குறிப்பிடப்படும் தினங்களில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

| ஏலமிடும் திகதி | 2023.10.14 | 2023.10.14 | 2023.10.14 |
|---|---|---|---|
| ஏலமிடும் இடம் | ஹங்குராங்கெத்த | இராகலை | ஹட்டன் |
| | ஹங்குராங்கெத்த, நில்தண்டாகின்ன, ரிகில்லஸ்கட | இராகலை, நுவரெலியா, உடபுசல்லாவ | தலவாக்கலை, பூண்டுலோயா, மஸ்கெலியா, ஹட்டன், கினிகத்தேன, பொகவந்தலாவ |
| சேவை நிலையங்கள் | பதியபலல்ல, ஹேவாஹட்ட, அதிகாரிகம, வலப்பனை | இராகலை, கந்தபொல, நானுஓயா | ஆக்கரபத்தன, ஹபுகஸ்தலாவ, தவலந்தென், அப்கொட், டிக்கோயா, கொட்டகலை, வட்டவலை |

ஏல விற்பனையில் மாற்றம் செய்தல், பிற்போடுதல், இரத்து செய்தல் மற்றும் இடத்தை மாற்றல் போன்றவைகளுக்கு வங்கி சட்டபூர்வ அதிகாரத்தை கொண்டுள்ளது.

**பிரதேச முகாமையாளர்,**
**பிரதேச பிரதான காரியாலயம்,**
**நுவரெலியா.**
**052-2222555**

PEOPLE'S BANK
Pride of the Nation



ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 16ஆவது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு கடந்த 7 ஆம் 8 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இம்மாநாட்டின் அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரட்நாயக்காவுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்படுவதையும் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன உரையாற்றுவதையும் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி உட்பட வெளிநாட்டு தூதுவர்களும் அதிதிகளும் கலந்து கொண்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

# மனிதப் புதைகுழியில் புலிகளின் த.வி.பு. இ-1333 தகட்டிலக்கம் மீட்பு

**ஓமந்தை விஷேட நிருபர்**

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் நேற்று முன்தினம் நான்காம் நாள் அகழ்வாய்வில் விடுதலைப்புலிகளின் தகட்டிலக்கம் ஒன்று மீட்கப்பட்டதாக உத்தியோக பூர்வமற்ற தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்நிலையில் நான்காம் நாள் அகழ்வாய்வுகளின் முடிவுகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணம் சட்டவைத்திய அதிகாரி செ.பிரணவனிடம் வினவியபோது, அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்க மறுப்பு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் புதனன்று (06) உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இந் நிலையில் நான்காம்நாள் அகழ்வாய்வுகள் நேற்று முன்தினம் (09) முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்றிருந்தது.









CBL சமபோஷ 2023 மாகாண பாடசாலை விளையாட்டுப் போட்டியின் ஆரம்பத்தைக் குறிக்கும் முகமாக வடமேல் விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஓகஸ்ட் 15ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை வென்னப்புவ அல்பேர்ட் பீரிஸ் விளையாட்டரங்கில் நடைபெற்றன. இதில், வடமேல் மாகாண விளையாட்டுப் போட்டியில் வென்னப்புவ ஜோசப் வாஸ் சம்பியன்ஸ் பட்டத்தை வென்றது. குளியாப்பிட்டிய மத்திய கல்லூரி இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்டது.


## சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

110

மாருதி கார்கள் விற்பனைக்கு

KF-2369 Maruti Swift, 2006, Car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 07145 42958 057144

117

வேன்கள் விற்பனைக்கு

584250 Mazda bongo, 1991, Van கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 07145 42958 057135


## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

## கேள்விகளுக்கான அழைப்பு

### ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவிற்கு புதிய உடற்கூறியல் கட்டிடத்தின் (வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்) மூன்றாம் மாடியின் முடிவுறுத்தல் வேலைகள்

**IFB No. CW/RE/FMS/07/2023**

1. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வகையில் வெட் வரியின்றி 50 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவிற்கு புதிய உடற்கூறியல் கட்டிடத்தின் (வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்) மூன்றாம் மாடியின் முடிவுறுத்தல் வேலைகளைச் செய்வதற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

   இந்த வேலைகளில் உள்ளடங்கும் திட்ட வடிவமைப்பு, விரிவான வடிவமைப்பு, விவரக்குறிப்புகள் தயாரித்தல், நிர்மாணம் மற்றும் அனைத்து சேவைகளுடன் கட்டிடத்தின் குறைபாடுகள் பொறுப்பு காலத்தில் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல், கொன்கிறீட் வேலைகள், மேசன் வேலைகள், பூச்சுகள், அலங்காரங்கள் மற்றும் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொருத்தமான தளபாடங்கள் வழங்குதல் என்பன வேலை கொள்வோரின் தேவைகளாகும். மொத்த நிர்மாணக் காலம் 60 நாட்கள். (2023 நவம்பர் 30ம் திகதியில் பூர்த்தி செய்தல் வேண்டும்)
2. கேள்வி கோரல் தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் செயற்பாட்டிற்கமைய மேற்கொள்ளப்படும்.
3. SP1 அல்லது C2 CIDA பதிவுத் தரத்தைக் கொண்ட தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்கான தகுதியைப் பெற்றுக்கொள்வதற்காக வெற்றிகரமான கேள்விதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதி தகைமைத் தேவைப்பாடுகள்:
   i. கடந்த ஐந்து வருடங்களில் 40 மில்லியன் ரூபா பெறுமதியைக் கொண்ட இதனையொத்த ஆகக் குறைந்தது 1 ஒப்பந்தத்தில் அனுபவம்
   ii. குறைந்தபட்சம் 75,000,000.00 ரூபா பெறுமதியைக் கொண்ட நிர்மாண வேலையை கடந்த ஐந்து வருடங்களுக்குள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   iii. ஏனைய நிர்மாணக் கடப்பாடுகள் மற்றும் பிரத்தியேகமாக எந்தவொரு முன்பணம் தவிர்ந்ததாக ஆகக் குறைந்த திரவ சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதி தொகையானது 10,000,000.00 ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை நுகேகொட, கங்கொடவில, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், மூலதனம் மற்றும் திட்டமிடல் பிரிவு செயற்றிட்ட முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2801911, தொலைநகல்: 011-2758000 மற்றும் பின்வரும் முகவரியில் வேலை நேரங்களில் கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 2023-09-11ஆம் திகதி முதல் 2023-09-21ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தில் மீளளிக்கப்படாத பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா (12,500.00 ரூபா) கட்டணத்தை நுகேகொட, கங்கொடவில, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துவதன் பேரில் ஆங்கில மொழியிலிலான முழுமையான கேள்வி கோரல் படிவத் தொகுதியொன்றை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.
7. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான கேள்விகளை 2023-09-21ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு, மே/பா சிரேஷ்ட உதவிப் பதிவாளர், மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவு, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொட எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவுற்ற உடனடுத்து சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
8. கேள்விகள் 2023-11-24ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. ஒவ்வொரு கேள்விகளுடனும் 500,000.00 பெறுமதியான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனையற்ற கோரிக்கை வங்கி உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்தப் பிணை முறி 2023-12-08ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். பிணை முறியானது நிலையான படிவங்கள் V பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள படிவத்தை பயன்படுத்தி துணை வேந்தருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
10. 2023-09-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நுகேகொட, கங்கொடவில, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**கங்கொடவில, நுகேகொட**

2023-09-09.

## பெறுகை அறிவித்தல்

### ஆதார வைத்தியசாலை (போதனா) - கம்பளை

கம்பளை ஆதார வைத்தியசாலையில் கீழ்க்காணும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக CIDA (ICTAD) இல் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. 2023.09.11 மு.ப. 9.00 முதல் 2023.10.03 பி.ப. 2.30 வரை மீளளிக்கப்படாத ரூ. 2500.00 தொகையைச் செலுத்திய பின்பு பெறுகை ஆவணங்களை வைத்தியசாலையின் தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இரு பிரதிகளுடன் (02) முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு உறைகளில் இட்டு அவ் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் ‘குறித்த வேலையை’ குறிப்பிட்டு, பொறியிடப்பட்ட விலைமனுக்கள் 2023.10.04 மு.ப. 10.30 இற்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், பிரதேச பெறுகைக்குழு, ஆதார வைத்தியசாலை, கம்பளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புங்கள் இல்லையெனில் கையோடு கொண்டு வந்து கணக்காளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

கீழ்க் காணும் ஒவ்வொரு வேலைக்கும் விலைமனுக்களை வேறுவேறாக சமர்ப்பியுங்கள். அன்றே முற்பகல் 10.30 இற்கு கேள்வி ஆவணங்கள் திறக்கப்படுதல் ஒப்பந்தக்காரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அதற்காக சமுகமளிக்கலாம்.

| தொடர் இல | வேலை | செலவு மதிப்பீடு ரூ. மில்லியன் | தரம் | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை ரூபா | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | வார்ட் இலக்கம் 09 பழுதுபார்த்தல் விடயங்கள் | 3.10 | C7, C8, C9 | 31,000.00 | 2,500.00 |
| 02 | வார்ட் இலக்கம் 04 பழுதுபார்த்தல் விடயங்கள் | 2.65 | C7, C8, C9 | 27,000.00 | 2,500.00 |
| 03 | வார்ட் இலக்கம் 10 பழுதுபார்த்தல் விடயங்கள் | 3.4 | C7, C8, C9 | 34,000.00 | 2,500.00 |

கேள்வி ஆவணங்களை அலுவலக நேரங்களில் கட்டணம் இன்றியே பரீட்சிக்க முடிவதுடன் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளும் போது தகைமைகளை உறுதி செய்வதற்காக CIDA (ICTAD) பதிவுப் புத்தகத்தின் மூலப் பிரதியை சமர்ப்பியுங்கள்.

கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**ஆதார வைத்தியசாலை (போதனா)**

## சுற்றாடல் அமைச்சு

### காலநிலை மாற்றம் தொடர்பான தேசியக் கொள்கை (2023) பற்றிய பொது மக்களின் கருத்துகளைக் கோருதல்

2012 இல் வெளியிடப்பட்ட இலங்கையின் தேசிய காலநிலை மாற்றக் கொள்கையை (NCCP) இற்றைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை புதிதாக உருவாகும் காலநிலை பாதிப்புக்கள், மாறிவரும் தேசிய முன்னுரிமைகள், புதிய, வளர்ந்து வரும் உலகளாவிய அபிவிருத்திகள், காலநிலை தொடர்பான திட்டங்கள், பொறிமுறைகள், நிதியுதவி ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் நன்மைகள் ஆகியவற்றில் கவனஞ் செலுத்த வேண்டியதன் அவசியமானது பல தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய, 2012 இல் தேசிய காலநிலை மாற்றக் கொள்கை உருவாக்கப்பட்டதிலிருந்து மேற்குறிப்பிட்ட புதிதாக உருவாகி வரும் தேவைகளை உள்ளடக்குவதன் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு சுற்றாடல் அமைச்சு, கொள்கையை இற்றைப்படுத்தியுள்ளது.

தேசிய மட்டத்திலான காலநிலைத் தாக்கங்களிற்கும், ஏனைய தேசிய கொள்கைகளிற்கு ஒத்திசைவாகவும் தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள் (NDCs), தேசிய தகவமைப்புத் திட்டம் (NAP) ஆகியவற்றைத் திட்டமிடல், அமுல்செய்தல், கண்காணித்தல் ஆகியவற்றிற்கு இடையூறாக காணப்படும் தணித்தல், தகவமைத்தல், இழப்புகளும், சேதங்களும், காலநிலை நிதியுதவி என்பனவற்றில் நிலவும் இடைவெளிகளை நிவர்த்தி செய்வதாக இற்றைப்படுத்தப்பட்ட காலநிலை மாற்றம் தொடர்பான தேசியக் கொள்கை (NPCC) அமைகின்றது. செயன்முறைகள், நடைமுறைகள், கட்டமைப்புகள் என்பனவற்றில் ஏற்படும் மாற்றங்களினாலும், சூழலியல், சமூக, பொருளாதார அமைப்புகளில் ஏற்படும் சீரமைப்புகளினாலும் இற்றைப்படுத்தப்பட்ட கொள்கை வழிநடத்தப்படுகின்றது. இது காலநிலை அபாயங்கள் மற்றும் சமூக - பொருளாதார காரணிகளுக்கிற்குமிடையிலான சிக்கலான தொடர்புகள்மீதும் கவனம் செலுத்துகின்றது, அதேவேளை இலங்கையின் பல்வேறு துறைகள், சமூகங்கள் ஆகியவற்றின் காலநிலைக்கான மீளுந்தன்மையை மேம்படுத்துகிறது.

காலநிலை மாற்றம் தொடர்பான தேசியக் கொள்கையின் வரைவு (2023) தற்போது பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளதோடு, www.env.gov.lk இலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. சுற்றாடல் அமைச்சு 2023.10.11 அல்லது அதற்கு முன் உங்களது கருத்துகளையும், பரிந்துரைகளையும் பின்வரும் முகவரிகள் ஊடாக பெற்றுக்கொள்ள விரும்புகின்றது.

தபால் முகவரி : பணிப்பாளர்
காலநிலை மாற்ற செயலகம்
சுற்றாடல் அமைச்சு
6வது தளம், “சோபாதம் பியாச”
இல. 416/C1, ரொபர்ட் குணவர்தன மாவத்தை
பத்தரமுல்ல.

மின்னஞ்சல் : climatesec@gmail.com

விசாரணைகள் : காலநிலை மாற்ற செயலகம்: 011- 203 4198

வைத்தியர். அனில் ஜாசிங்க
செயலாளர்
சுற்றாடல் அமைச்சு

2023.09.11

# தேசிய நூலகம் மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபையின் பதவி வெற்றிடங்கள்

(கல்வி அமைச்சு)

N L S L

தேசிய நூலகம் மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபையின் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **சேவை வகுதி** : முகாமையாளர் சேவை வகுதி **(MM 1-1)**

**சம்பள அளவு** : MM 1-1 2016: ரூபா 53,175 – 10x1375 – 15x1910 – 95,575/- (மாதாந்தம்)

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

01.1 பதவி : **உதவிப் பணிப்பாளர் (மூலோபாய திட்டமிடல்) (01 வெற்றிடம்)**
**Assistant Director (Strategic Planning)**

**தகைமைகள் :**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளைச் ஆட்சேர்ப்பதற்கு (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விசேட பட்டத்தை (முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / அரச நிர்வாகம் / வர்த்தகம் / பொருளியல் பாடங்களில்) பெற்றிருத்தல்.

   மற்றும்

   பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் இயைபுடைய விடயத்துறையில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஷேட பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும் இயைபுடைய விடயத்துறையில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்றை நெறியொன்றைக் கற்று சித்தியடைந்திருத்தல்.

   மற்றும்

   மேற்படி தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் இயைபுடைய விடயத்துறையில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்பதற்கு (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. கனிஷ்ட முகாமைத்துவ (JM) சேவை வகுதியின் இயைபுடைய துறைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட காலம் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு:** மேற்படி 01.1 பதவிக்கு கணனி பயன்பாடுகள் தொடர்பான அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆட்சேர்ப்பு முறை: திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம்

02. **சேவை வகுதி** : **கனிஷ்ட முகாமையாளர் சேவை வகுதி (JM 1-1)**

**சம்பள அளவு** : JM 1-1 2016: ரூபா 42,600 – 10x755 – 18x1135 – 70,580/- (மாதாந்தம்)

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

02.1 **நூலக மற்றும் ஆவண அதிகாரி தரம் ii (02 வெற்றிடங்கள்)**
**Library & Documentation Officer Grade ii**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தைப் பெற்றிருத்தல். (நூலகம் மற்றும் அறிவிப்பியல் பாடங்களைக் கற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) (MA 2-1) சேவை வகுதியில் iiஆந் தரப் பதவியொன்றில் இயைபுடைய துறையில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட காலம் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.
3. சார்பு உத்தியோகத்தர் (MA 3) சேவை வகுதியில் நூலக அபிவிருத்தி உதவியாளர் iiiஆந் தரப் பதவியொன்றில் இயைபுடைய துறையில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட காலம் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

02.2 **முறைமை பகுப்பாய்வாளர் தரம் ii (01 வெற்றிடம்)**
**System Analyst Grade ii**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் (தகவல் தொழில்நுட்பம் / கணனி விஞ்ஞானம் பாடங்கள் சகிதம்) பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் / தொழில்நுட்பம் அல்லாத) (MA 2-1 - MA 1-1) சேவை வகுதியில் தகவல் தொழில்நுட்ப உதவியாளர் / முகாமைத்துவ உதவியாளர் iiஆந் தரப் பதவியொன்றில் இயைபுடைய துறையில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட காலம் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.
3. சார்பு உத்தியோகத்தர் (MA 3) சேவை வகுதியில் நூலக அபிவிருத்தி உதவியாளர் iiiஆந் தரப் பதவியொன்றில் இயைபுடைய துறையில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட காலம் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

02.3 **பேணல் உத்தியோகத்தர் தரம் ii (01 வெற்றிடம்)**
**Conservation Officer Grade ii**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் (இரசாயனவியல் பாடம் சகிதம்) பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) (MA 2-1) சேவை வகுதியில் ஆவணம் பேணுநர் / தகவல் தொழில்நுட்பம் iiஆந் தரப் பதவியொன்றில் இயைபுடைய துறையில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட காலம் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

02.4 **நிர்வாக செயலாளர் தரம் ii (01 வெற்றிடம்)**
**Administrative Secretary Grade ii**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) (MA 1-1) சேவை வகுதியில் முகாமைத்துவ உதவியாளர் iiஆந் தரப் பதவியொன்றில் இயைபுடைய துறையில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட காலம் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

02.5 **கணக்கியல் அதிகாரி தரம் ii (01 வெற்றிடம்)**
**Account Officer Grade ii**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்: (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் (வர்த்தகம் / கணக்கியல் / கணக்கீடுகள் பாடம் சகிதம்) பெற்றிருத்தல்.
2. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CA Sri Lanka) அல்லது பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (CIMA) அல்லது பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர் சங்கத்தின் (ACCA) இடைநிலையத் தகைமை

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) (MA 1-1) சேவை வகுதியில் முகாமைத்துவ உதவியாளர் iiஆந் தரப் பதவியொன்றில் இயைபுடைய துறையில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட காலம் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

02.6 **பிரசுர அதிகாரி தரம் ii (01 வெற்றிடம்)**
**Publication Officer Grade ii**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் / தொலைத்தொடர்பாடல்) பட்டம் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் / தொழில்நுட்பம் அல்லாத) (MA 2-1 - MA 1-1) சேவை வகுதியில் தகவல் தொழில்நுட்ப உதவியாளர் / முகாமைத்துவ உதவியாளர் iiஆந் தரப் பதவியொன்றில் இயைபுடைய துறையில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட காலம் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.
3. சார்பு உத்தியோகத்தர் (MA 3) சேவை வகுதியில் நூலக அபிவிருத்தி உதவியாளர் iiiஆந் தரப் பதவியொன்றில் இயைபுடைய துறையில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட காலம் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

குறிப்பு: மேற்படி 02.1 முதல் 02.6 வரையான சகல பதவிகளுக்கு கணனி பயன்பாடு தொடர்பான அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்க்கும் முறை:**

திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம்

03. **சேவை வகுதி** : **முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) சேவை வகுதி (MA 2-1)**

**சம்பளம்** : MA 2-1 2016: ரூபா 30,310 – 10x300 – 7x350 – 4x495 – 20x660 – 50,940/- (மாதாந்தம்)

**வயது** : 18 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

03.1 : **தகவல் தொழில்நுட்ப உதவியாளர் தரம் iii (01 வெற்றிடம்)**
**Information Technology Assistant Grade iii**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**கல்வி :**

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்
   - i. சிங்களம் / தமிழ் மொழி
   - ii. கணிதம்
   - iii. ஆங்கில மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்) தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று (03) பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்

(இ) கணனி நிகழ்ச்சிநிரல் வழங்குதல் / தகவல் தொழில்நுட்பம் பயன்பாடுகள் தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

03.2 **தகவல் உதவியாளர் தரம் iii (05 வெற்றிடங்கள்)**
**Information Assistant Grade iii**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**கல்வி:**

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்
   - i. சிங்களம் / தமிழ் மொழி
   - ii. கணிதம்
   - iii. ஆங்கில மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்) தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று (03) பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்

(இ) கணனி பயன்பாடுகள் தொடர்பில் மூன்று (03) மாதங்களுக்குக் குறையாத கற்கை நெறியொன்றைக் கற்று சித்தியடைந்திருத்தல் மற்றும் சபையினால் நடாத்தப்படும் தொழில்சார் பரீட்சையில் (Trade Test) சித்தியடைதல்.

**தொழில்நுட்பத் திறன் / தேர்ச்சி**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / இலங்கை நூலகர் சங்கத்தின் நூலகம் மற்றும் விஞ்ஞாபனவியல் தொடர்பாக மூன்று (03) வருட டிப்ளோமா கற்கை நெறியில் முதலாம் கட்டத்தில் சித்தியடைந்திருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. (அ) ஆரம்ப தரத்தில் - தேர்ச்சியற்ற (PL 1), அரைத் தேர்ச்சி (PL 2) மற்றும் தேர்ச்சிபெற்ற (PL 3) சேவை வகுதியில் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

   (ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்
   - i. சிங்களம் / தமிழ் மொழி
   - ii. கணிதம் போன்ற பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

   (இ) கணனி பயன்பாடுகள் தொடர்பில் மூன்று (03) மாதங்களுக்குக் குறையாத கற்கை நெறியொன்றைக் கற்று சித்தியடைந்திருத்தல் மற்றும் சபையினால் நடாத்தப்படும் தொழில்சார் பரீட்சையில் (Trade Test) சித்தியடைதல்.

   (ஈ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / இலங்கை நூலகர் சங்கத்தின் நூலகம் மற்றும் விஞ்ஞாபனவியல் தொடர்பாக மூன்று (03) வருட டிப்ளோமா கற்கை நெறியில் முதலாம் கட்டத்தில் சித்தியடைந்திருத்தல்.

03.3 **ஆவணம் பேணுநர் தரம் iii (01 வெற்றிடம்)**
**Document Conservator Grade iii**

**தகைமைகள் :**
**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்
   - i. சிங்களம் / தமிழ் மொழி
   - ii. கணிதம்
   - iii. ஆங்கில மொழி பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்) தரப் பரீட்சையில் பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் சகிதம் மூன்று (03) பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்

குறிப்பு : எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் அபேட்சகர் ஆவணம் பேணல் நடவடிக்கைகள் தொடர்பில் இரண்டு (02) வருட பயிற்சிக் காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. (அ) தேசிய நூலகம் மற்றும் ஆவணமாக்கல் சேவை சபையில் ஆரம்ப அரைத் தேர்ச்சி (PL 2) சேவை வகுதியில் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

   (ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்
   - i. சிங்களம் / தமிழ் மொழி
   - ii. கணிதம் போன்ற பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

   குறிப்பு: உள்வாரி விண்ணப்பதாரிகள் மேற்படி 1 அல்லது 2 தகைமையின் கீழ் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படும் அபேட்சகர் ஆவணம் பேணல் நடவடிக்கைகள் தொடர்பில் இரண்டு (02) வருட பயிற்சிக் காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.
3. தேசிய நூலகம் மற்றும் ஆவணமாக்கல் சேவை சபையில் ஆரம்ப அரைத் தேர்ச்சி (PL 2) புத்தகம் கட்டுபவராக ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

   மற்றும்

   மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனத்தில் இயைபுடைய பதவியின் கடமைப் பொறுப்புக்கு அமைவாக வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தொழில்சார் பரீட்சையில் (Trade Test) சித்தியடைதல்.

**ஆட்சேர்ப்பு முறை:**

எழுத்து மூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம்

வெற்றிட எண்ணிக்கையின் 70% வெளிவாரி விண்ணப்பதாரிகளிலும் மற்றும் 30% உள்வாரி விண்ணப்பதாரிகள் எனும் விகிதாசாரத்தில் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

**ஏனையவை**

**சகல விண்ணப்பதாரர்களும்**

- i. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை சிறந்த முறையில் நிவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- iii. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகள்:**

1. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் 03 வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.
2. ஊழியர் சேமலாப நிதிக்கு ஊழியர்களினால் 8% செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் தொழில் கொள்வோரினால் 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% செலுத்தப்படும்.

**மேற்படி பதவிகளுக்கான கடமை இடம் - கொழும்பு**

முழுமையான சுய தரவுகள், தமது கல்வி / தொழில்சார் தகைமைகள் மற்றும் சேவை அனுபவங்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் தம்மைப் பற்றிய தகவல்களை விசாரிக்கக் கூடிய உறவினரல்லாத சிபாரிசு செய்யக்கூடிய இருவரின் பெயர் மற்றும் முகவரிகளை உள்ளடக்கிய விண்ணப்பப் படிவங்களை குறித்த சான்றிதழ்களின் பிரதிகளுடன் ''தலைவர், தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபை, இல. 14, சுதந்திர மாவத்தை, கொழும்பு-07'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2023-09-19ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

அரச / அரசு சார்ந்த / நியாயாதிக்க நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்களத்தின் / நிறுவனத்தின் தலைவரின் சிபாரிசுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட சகல தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபை,**
**இல. 14, சுதந்திர மாவத்தை,**
**கொழும்பு-07.**

website: www.natlib.lk

Looking for Your Life Partner..,
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Pay online and save your precious time
BANK OF CEYLON BOC Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
Gayani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | 011 2 429 342/ 343

# கேள்வி அறிவித்தல்
## தங்கல்ல பிரதேச சபை

தங்கல்ல பிரதேச சபைக்கச் சொந்தமான கீழே அட்டவணையில் காணப்படும் சொத்துக்களை 2024ம் ஆண்டிற்கு குத்தகைக்கு விடுவதற்காக என்னால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அட்டவணை**

| இலக்கம் | வரியின் தன்மை/ சொத்துக்கள் | குறைந்தபட்ச கேள்வி (ரு) | கேள்விப்படிவக் கட்டணம் (ரு) | கேள்விப் பிணை (ரு) |
|---|---|---|---|---|
| 01 | ரன்ன வாரசந்தை வரி சேகரித்தல் | 3,550,010.00 | 2,500.00 | 200,000.00 |
| 02 | ரன்ன மீன் சந்தை வரி சேகரித்தல் | 342,010.00 | 1,500.00 | 15,000.00 |
| 03 | வாடிகலசந்தை வரி சேகரித்தல் | 96,900.00 | 200.00 | 5,000.00 |
| 04 | தேனகம வார சந்தை வரி சேகரித்தல் | 2,785,450.00 | 2,500.00 | 50,000.00 |
| 05 | நெடொல்பிட்டிய வார சந்தை வரி சேகரித்தல் | 7,724.00 | 200.00 | 600.00 |
| 06 | குடாவெல்ல வார சந்தை வரி சேகரித்தல் | 588,115.00 | 1,500.00 | 10,000.00 |
| 07 | சஹஜ்ஜாவ தென்னை விளைச்சல் | 2,050.00 | 100.00 | 200.00 |
| 08 | ரன்ன சைக்கிள் நிறுத்துமிடம் | 46,000.00 | 500.00 | 500.00 |
| 09 | ரன்ன சந்தை வளாகத்தில் பொது மலசலகூட வரிசேகரித்தல் | 18,000.00 | 500.00 | 200.00 |
| 10 | யாயவத்த சந்தை | 16,150.00 | 200.00 | 1,000.00 |
| 11 | வலகும்புர விளையாடும் மைதானம் மற்றும் சனசமூக மண்டபத்துடன் காணியின் தென்னை விளைச்சல் | 3,809.50 | 100.00 | 200.00 |
| 12 | பொலொம்மாருவ களுவரகஹ மன்டிய இல. 07, 08 துண்டுகளில் தென்னை விளைச்சல் | 2,700.00 | 100.00 | 200.00 |
| 13 | கதுறுபொக்குன மெதகொட இல. 02 மயான பூமியுடனான காணி தென்னை விளைச்சல் | 2,100.00 | 100.00 | 200.00 |
| 14 | வல்கம்எலிய குருவலயாய எனப்படும் திகன பஸ்நாஹிரயாய காணியின் பொது விடயங்களுக்காக வேறாக்கப்பட்ட பகுதியில் தென்னை விளைச்சல் | 2,165.00 | 100.00 | 200.00 |

**கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கும் இறுதித் திகதி** : 2023.09.11 முதல் 2023.10.02ம் திகதி பி.ப. 3.00 வரை தேசிய அடையாள அட்டை/ சாரதி அனுமதிப்பத்திரம்/ செல்லுபடியாகும் கடவுச் சீட்டு மற்றும் கிராம அதிகாரி சான்றிதழை சமர்ப்பித்து தங்கல்ல பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளல் : 2023.10.03 பி.ப. 1.00 வரை

கேள்விப் பத்திரங்கள் திறத்தல் : 2023.10.03 பி.ப. 1.30 இற்கு

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் தொ.பே. இலக்கம் (செயலாளர்): 047-2240475

**2023.09.06**

**தங்கல்ல பிரதேச சபை அலுவலகத்தில்**

**சீ.எஸ்.டபிள்யூ அபேகுணவர்தன,**
**செயலாளர்**
**தங்கல்ல பிரதேச சபை**
**நெடொல்பிட்டிய.**

# பெறுகை அறிவித்தல்
## மாவட்ட பொது வைத்தியசாலை - நாவலப்பிட்டி
### SUPPLY, DELIVERY & INSTLATION OF NETWORK & HARDWARE EQUIPMENT & COMPUTER DEVICES

நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பின்வரும் "SUPPLY, DELIVERY & INSTLATION OF NETWORK & HARDWARE EQUIPMENT & COMPUTER DEVICES" கொள்வனவு செய்வதற்காக தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலைமனுக்கள் 2023-10-03ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு திறக்கப்படவுள்ளதால் அன்றைய தினம் மு.ப. 11.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் விலைமனுக்களை அனுப்புமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விலைமனுக்களை தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, ''மாவட்ட பொது வைத்தியசாலை - நாவலப்பிட்டி'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் என்பதுடன் நேரில் கொண்டுவந்து ஒப்படைப்பதானால் பிரதான அலுவலகத்தில் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் உள்ளிடலாம். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"SUPPLY, DELIVERY & INSTLATION OF NETWORK & HARDWARE EQUIPMENT & COMPUTER DEVICES"** எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

| Package No | Item No. | Brief description of the type of Good | Quantity | Bid Bond LKR Valid up to 31.12.2023 | Delivery period |
|---|---|---|---|---|---|
| 01 | 1 | Rack Server | 01 | | Days from the date of Agreement signed |
| | 2 | Laptop computer | 25 | | |
| | 3 | Omnidirectional Barcode Reader1D | 25 | Rs 80000.00 | |
| | 4 | POS Printer | 01 | | |
| | 5 | Sticker Printer | 04 | | |
| 02 | 1 | **Network Racks** | 06 | | |
| | 2 | **Active Switch Network System** | 06 | | |
| | 3 | **WI-FI Access point** | 36 | | |
| | 4 | **UPS (1.2 KV)** | 06 | Rs 70000.00 | |
| | 5 | **Copper structured cabling system** | Lot | | |
| | 6 | **Fiber structured cabling system** | Lot | | |
| | 7 | **Installation and Related Civil Works** | Lot | | |

01. விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக அந்தந்தப் பொதிகளுக்கு வெவ்வேறாக 2000.00 ரூபா மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணத்தை நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையின் சிறாப்பருக்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியுடன் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும். 2023-09-11ஆம் திகதி முதல் 2023-10-02ஆம் திகதி வரையான பொதுவான கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தினுள் நாவலப்பிட்டி பொது வைத்தியசாலையின் கணக்கிடல் பிரிவில் விலைக்கோரல் மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பிரதிநிதியொருவர் வரும்போது விண்ணப்பதாரரால் அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் மற்றும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்கிடல் பிரிவில் விலைக்கோரல் மாதிரிப் படிவங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

03. இது தொடர்பான கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று நாவலப்பிட்டி பொது வைத்தியசாலை பணிப்பாளரின் அலுவலகத்தில் 2023-09-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

04. விலைக்கோரல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கோரல் பிணை முறியை அந்தந்தப் பொதிகளுக்கு வெவ்வேறாக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளரின் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 100 நாட்களுக்குச் செல்லுபடியாகும் வகையில் விலைக்கோரல் பிணை முறியை விலைமனுக்களின் மூலப் பிரதியுடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

05. கேள்வி மாதிரிப் படிவங்களில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்பு அறிவுறுத்தல்களுக்கு அமைவாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. 2023-10-03ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு முன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்பட்ட உடனடுத்து குறித்த விலைமனுக்கள் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விண்ணப்பதாரர்கள் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். பிரதிநிதியொருவர் வரும்போது விண்ணப்பதாரரால் அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் மற்றும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. திறந்த போட்டி ரீதியிலான (NCB) முறை மூலம் விலைமனுக்கள் கோரப்படும்.

07. நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும் என்பதை விலைமனுதாரர்கள் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**நாவலப்பிட்டி.**

## பணிப்பாளர் பதவி
### தொழில்நுட்ப நிறுவனம், மொறட்டுவை பல்கலைக்கழகம்
### தியகம, ஹோமாகம

2024 பெப்ரவரி மாதம் தொடக்கம் வெற்றிடமாகவிருக்கும், மொறட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் பதவிக்காக, இலங்கை பிரசைகளிடம் இருந்து 2023.10.09 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களுக்கு, கீழ் குறிப்பிடப்பட்ட இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.
https://itum.mrt.ac.lk/vacancies_itum

**கருத்தில் கொள்ளவும்**
முழுமைபெறாத மற்றும் தெளிவற்ற விண்ணப்பங்கள் அறிவுறுத்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

**பிரதி பதிவாளர்,**
**தொழில்நுட்ப நிறுவனம், மொறட்டுவை பல்கலைக்கழகம்.**
**தியகம, ஹோமாகம.**
**2023.09.11**

# கேள்விக்கான அழைப்பு
## தேங்காய் கிறீம் பெக்கற் கொள்வனவு செய்தல்
### இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு - 10
### (சுகாதார அமைச்சு)

01. இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதான மற்றும் ஊழியர் சமையலறைக்குத் தேவையான தேங்காய் கிறீம் பெக்கற்களை கொள்வனவு செய்வதற்காக 2023.09.27 மு.ப. 10.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

02. இலங்கைச் சந்தைக்கு தேங்காய் கிறீம் பெக்கற் உற்பத்தி செய்து வழங்கும் அல்லது உற்பத்தியாளர்களால் பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் மட்டும் இக் கேள்வி அழைப்புக்காக சமுகமளிப்பதற்கு தகைமை பெறுவர்.

03. 2023.09.12 முதல் 2023.09.26 வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பிப. 2.00 வரை ரூ. 4000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை இலங்கை தேசிய வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்குச் செலுத்திய பின்னர் இலங்கை தேசிய வைத்தியசாலையின் உணவுப் பிரிவில் குறித்த கேள்வி நிபந்தனைகளுடான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
(தொ.பே. இலக்கம் - 0112691111, நீடிப்பு -2315)

04. பொறியிடப்பட்ட கேள்விகள் 2023.09.27 மு.ப. 10.00 இற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைப்பதாயின் பிரதம கணக்காளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்வி ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை**
**கொழும்பு-10**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 செப்டெம்பர் 13ஆம் திகதி ஏல விற்பனையினூடாக ரூ. 160,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123L154 | LKA18224C158 | LKA36424I134 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 80,000 | 40,000 | 40,000 | 160,000 |

ஏல விற்பனைத் திகதி : 2023 செப்டெம்பர் 13
தீர்ப்பனவுத் திகதி : 2023 செப்டெம்பர் 15
வழங்கப்படும் திகதி : 2023 செப்டெம்பர் 15
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2023 செப்டெம்பர் 13, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்.எஸ்.பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

✳ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA)
## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

| உருப்படி இலக்கம் | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 01 | ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் தேசிய வீதி வலையமைப்புடன் சேர்ந்த Right of Way (ROW) இற்குள் வீதி ஓரம் மற்றும் வீதி முன் பதிவில் தரிப்பிட கட்டண சேகரிப்பை நிறைவேற்றல் |

தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறையின் கீழ் மேலுள்ள பணிக்கான விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 2023.09.13 ஆம் திகதி தொடக்கம் 2023.10.02 ஆம் திகதி வரை www.rda.gov.lk என்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபை RDA இணைய பக்கத்தை பார்ப்பதற்கு கோரப்படுகின்றனர்.

**மாகாண பணிப்பாளர் (ஊவா)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**


afc
## தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

2023.06.30 வரையிலான காலகட்டத்தில் எலாயன்ஸ் ஃபினான்ஸ் கோ.பி.எல் சி யின் கீழ் குறிப்பிடப்பட்ட தங்க கடன் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள், 2023.06.30 வரை மீட்டெடுக்கப்படவில்லை கீழே குறிப்பிடப்பட்ட இடங்களில் காலை 9.30 மணிக்கு பொது ஏலத்தில் விற்கப்படும்.

**தங்கக் கடன் சேவை நிலையங்கள்**

| தேதி | கிளை | இடம் |
|---|---|---|
| 18-09-2023 | கிரிந்திவெல<br>மாத்தளை<br>நாவலப்பிட்டி | 30, வெயங்கொட வீதி, கிரிந்திவெல.<br>587, மந்தங்காவெல சந்தி, திருகோணமலை வீதி, மாத்தளை.<br>87, கொத்மலை வீதி, நாவலப்பிட்டி. |
| 19-09-2023 | பலாங்கொடை<br>பொரளை சூப்பர் கிளை<br>ஹொரணை<br>கடுவெல | 304, இரத்தினபுரி வீதி, பலாங்கொடை.<br>722, கோட்டே வீதி, ராஜகிரிய.<br>53, பாணந்துறை வீதி, ஹொரண.<br>497/A/1, அவிசாவளை வீதி, கடுவெல. |
| 20-09-2023 | சங்கானை<br>சாவகச்சேரி<br>சுன்னாகம்<br>யாழ்<br>யாழ்ப்பாணம் நகரக் கிளை<br>மன்னார்<br>பருத்தித்துறை<br>திருநெல்வேலி | 94, KKS சாலை, யாழ்ப்பாணம். |
| 21-09-2023 | அக்குரஸ்ஸ, அளுத்கம, அம்பலாங்கொட<br>அம்பலாந்தோட்டை, அம்பாறை, அனுராதபுரம்<br>அதுருகிரிய, அவிசாவளை, பதுளை<br>மட்டக்களப்பு, சிலாபம், தம்புள்ளை<br>தெஹியத்தகண்டிய, தெனியாய, எம்பிலிபிட்டிய<br>கலேவெல, கல்கமுவ, காலி, கம்பஹா<br>கம்பளை, கணேமுல்ல, ஹட்டன்<br>ஹிங்குராக்கொட, ஹோமாகம, ஜா-எல<br>கடவத்தை, கதுருவெல, கல்பிட்டிய<br>களுத்துறை, களுவாஞ்சிக்குடி, கேகாலை<br>களனி, கிளிநொச்சி, கிரிபத்கொட<br>கொஹுவல, குளியாப்பிட்டிய<br>குருமன்காடு, குருநாகல், மஹரகம<br>மஹியங்கனை, மாலபே, மாத்தறை<br>மதவாச்சி, மொனராகலை, முழங்காவில்<br>நீர்கொழும்பு, நிக்கவெரட்டிய, நிட்டம்புவ<br>நுவரெலியா, பாணந்துறை, பராக்கிரமபுர<br>பசறை, பிலியந்தலை, பூகொட<br>புதுக்குடியிருப்பு, புத்தளம், ராகலை<br>இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட<br>தலவாக்கலை, திருகோணமலை, திருகோணமலை-2<br>உடப்புவ, வவுனியா, வார்டு இடம்<br>வெலிமடை, வெல்லவாய, வென்னப்புவ | 722, கோட்டே வீதி, ராஜகிரிய. |

ஏலத்தில் பங்கேற்கும் அனைவரும் தங்களின் தேசிய அடையாள அட்டையை கொண்டு வர வேண்டும் மற்றும் நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் எலாயன்ஸ் ஃபினான்ஸ் கோ.பி.எல் சி க்கு எந்த வித அறிவிப்பும் இல்லாமல் ஏலங்களை ரத்து செய்ய, ஒத்திவைக்க அல்லது ஒன்றினைக்க உரிமை உள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ்
கம்பனி பி.எல்.சி
செயாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600





Daily News Classifieds, the Housewives' companion

# விலைமனுகோரல்

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

**கேள்விப்பத்திர இலக்கம் : 026/T/2023**

## மத்தளை சர்வதேச விமானநிலையத்தின் கட்டிடங்களில் பொதுவான பூச்சிக் கொல்லி / கறையான் / எலிகள் வராது தடுப்பதற்கான சேவைகளை வழங்குதல்

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி சார்பாக இலக்கம் 02 கேள்விப்பத்திர சபையின் செயலாளரால் மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் கட்டிடங்களில் பொதுவான பூச்சிக் கொல்லி / கறையான் / எலிகள் வராது தடுப்பதற்கான சேவைகளை வழங்குவதற்காக முத்திரை குறியிடப்பட்ட விலைக்கேள்விகள், தகைமைப்பெற்ற விலைக்கேள்வியாளர்களிடமிருந்து இத்துடன் அழைக்கப்படுகின்றன. ஆரம்பத்தில் ஒப்பந்தம் ஒரு வருட காலத்துக்காக வழங்குவதுடன் திருப்திகரமான செயலாற்றுகையினை கவனத்திற் கொள்ளப்பட்டு அது மேலுமொரு வருடத்தால் நீடிக்கப்படும்.

இவ் ஒப்பந்தம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைக்கேள்வியாளர்களுக்கே வழங்கப்படுவதுடன், இதற்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட பெயர் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர் / தாபனமாக இருத்தல் வேண்டும்

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவுக்கு, கேள்விப்பத்திரக் கட்டணமாக திருப்பிச் செலுத்தப்படாத ரூபா மூவாயிரத்து ஐந்நூறு (ரூபா 3,500.00 மாத்திரமாகும்.) காசாக செலுத்துவதன் மூலம் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட அக்குறித்த விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்பினை கொள்வனவு செய்து கொள்ள முடியும்.

விலைக்கேள்வி, 2023.09.12 முதல் 2023.10.02 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாளொன்றில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 03.00 மணிக்கும் இடையேயான காலப்பகுதிக்குள் வெளியிடப்படும், அக்குறித்த விலைக்கேள்வி ஆவணங்களில் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கட்டணங்களின்றி பார்வையிட முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதம் குறித்து அக்குறித்த விலைக்கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தாபனமொன்றினால் வெளியிடப்பட்ட ரூபா இரண்டு இலட்சம் (ரூபா. 200,000/- மாத்திரம்) பெறுமதி வாயந்த பிணைமுறி, கேள்விப்பத்திரத்துடன் சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

2023.09.21 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின், சிவில் பொறியியலாளர் பிரிவில் கேட்போர் கூடத்தில் நடைப்பெறும் ஆரம்ப விலைக்கேள்வி தொடர்பான கூட்டத்தில் பங்கேற்குமாறு, அனைத்து விலைக்கேள்வியாளர்களுக்கு அல்லது அவர்களால் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு இத்துடன் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

செயலாளர், கேள்விப்பத்திர சபை இலக்கம் 02, வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற விலாசத்திற்கு அம்முத்திரைக் குறியிடப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் சமர்பிக்கப்பட வேண்டியதுடன், 2023.10.03 ஆந் திகதி பி.ப 02.00 மணிக்கு அக்கால எல்லை முடிவடையும். அத்திகதியில் குறிப்பிட்ட நேரத்திற்குரிய கேள்விப்பத்திரங்கள் திறந்துவைக்கப்படும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவின், கிளைத் தலைவர் மூலம் 011-2264103 / 011-2264117 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் ஊடாக அறிந்து கொள்ள முடியும். மின்னஞ்சல்: head.scm@airport.lk அல்லது எமது இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம்: www.airport.lk.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை)**
**கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க**

---

**சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு**

## விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை – சீதுவ

## 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு உற்பத்தியாளர்கள், ஏகமுகவர்கள், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அரசாங்க நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள், நபர்களிடமிருந்து இந்த வைத்தியசாலையில் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**பொருள் வழங்கல்கள்**

1. மருத்துவ உபகரணங்கள்
2. கண் சத்திரசிகிச்சை உபகரணங்கள்
3. ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல்
4. கண் சத்திரசிகிச்சை துணைப்பாகங்கள் மற்றும் அது சார்ந்த மருந்துகள்
5. பொதுவான சத்திரசிகிச்சை துணைப்பாகங்கள் மற்றும் அது சார்ந்த மருந்துகள்
6. ஆய்வுகூட இரசாயனங்கள் மற்றும் ஆய்வுகூட பாவனைப்பொருட்கள்
7. கதிரியக்க துணைப்பாகங்கள்
8. பல் சத்திரசிகிச்சை உபகரணங்கள் மற்றும் பாவனைப்பொருட்கள்
9. மருந்து வகைகள் மற்றும் சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள்
10. எக்ஸ்-ரே பிலிம்கள் மற்றும் ECG துணைப்பாகங்கள்
11. சத்திரசிகிச்சை உபகரண திருத்தவேலைகள் (அனைத்து வகையானவையும்)
12. காகிதாதிகள்
13. நிறுவன அடையாள அட்டைகளைத் தயாரித்தல்
14. மருந்து உறைகள் மற்றும் எக்ஸ்-ரே உறைகள்
15. குப்பை உறைகள்
16. பாவனைப் பொருட்கள் - அ (உலர் மின்கலன்கள், சவர அலகுகள், வடிகட்டிய நீர், Toilet Paper, Cotton bud packet)
17. பாவனைப் பொருட்கள் - ஆ (சவர்க்காரம், கைகழுவும் திரவம், லைசோல், விம் தூள் மற்றும் திரவம், டீபோல், மோர்டின் மற்றும் Detergent items போன்றவை)
18. கட்டிட பராமரிப்புப் பொருட்கள் (Hardware Item)
19. வைத்தியசாலை லினன் துணிகள் மற்றும் திரைச்சீலைகள் வழங்குதல்
20. மின் உபகரணங்களை வழங்குதல்
21. தளபாடங்கள் வழங்குதல் மற்றும் திருத்தவேலைகள் (மரம், இரும்பு மற்றும் உருக்கு)
22. வளிச்சீராக்க இயந்திரங்களை வழங்குதல்
23. கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல்
24. மருத்துவ வாயுகள் ($MO_2$, $N_2O$, $CO_2$, Com.Air, $C_3F_8$)
25. மை, டோனர், கார்ட்ரிச், ரிப்பன் வழங்குதல்
26. வாகன பெட்டறிகள், டயர்கள் மற்றும் ஏனைய வாகன உதிரிப்பாகங்கள் வழங்குதல்
27. பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் ஸ்டென்சில் உருக்குப் பொருட்கள்

**சேவை வழங்கல்கள்**

28. கணனிகள் மற்றும் கணனி சார்ந்த உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்கள்
29. வாகன வளிச்சீராக்க திருத்தவேகைள்
30. வாகன மின்சார வேலைகள் - இயந்திர திருத்தவேலைகள், தகர வேலைகள் மற்றும் நிறப்பூச்சு வேலைகள்
31. மின்சாரப் உபகரணங்களின் திருத்தவேலைகள்
32. வளிச்சீராக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்
33. மருந்துப் போக்குவரத்திற்குப் பொருத்தமான வாடகை வாகனங்களை வழங்கும் சேவைகள் (லொறி, கார் மற்றும் வேன்)
34. சாக்கடை கழிவுகளை அப்புறப்படுத்தும் கலி பவுசர்களை வழங்குதல்
35. சிகிச்சை மற்றும் துப்புரவேற்பாட்டு கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தும் சேவைகளை வழங்குதல்
36. அப்புறப்படுத்தப்படும் பிளாஸ்டிக், கண்ணாடி போத்தல்களை விற்பனை செய்தல்

2023-09-11ஆம் திகதி முதல் 2023-10-11ஆம் திகதி வரை (அரசாங்க விடுமுறை நாட்கள் மற்றும் வார இறுதி நாட்கள் தவிர்ந்த) மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்து மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பொருளுக்காகவும் 500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை வைத்தியசாலைக்குச் செலுத்துவதன் பேரில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. சீதுவ விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழு தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள்
2. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் புகைப்படப் பிரதியொன்று

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட குறித்த விண்ணப்பப் படிவங்களை 2023-11-10ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024 (பொருள் இலக்கம் .........)’’ எனக் குறிப்பிடுங்கள்.

இது தொடர்பில் ஏதாவது தெளிவுபடுத்தல்கள் இருப்பின் தயவுசெய்து 011-2258862 – 64 எனும் தொலைபேசி இலக்கத்தில் நிர்வாக உத்தியோகத்தரை தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை,**
**சீதுவ.**

www.adz.lk
it's what you want

---

**காணி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு**

## தேசிய தாவரவியற் பூங்காத் திணைக்களம்

## கேள்வி கோரல்

தேசிய தாவரவியற் பூங்காத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்காக வருடாந்த நீண்டகால குத்தகை முறையின் கீழ் சாரதி இன்றிய கார் வாடகை/ குத்தகைக்குப் பெறல்

| | |
|---|---|
| தொடர் இல | DNBGF. 15/PRO/2023-41 |
| கேள்விகள் மூடப்படல் மற்றும் திறக்கும் நேரம் | திகதி: 2023.10.04<br>நேரம்: மு.ப. 11.00 |

02. கேள்வி மாதிரி நிபந்தனைகள் மற்றும் ஏனைய விபரங்களை https://www.botanical gardens.gov.lk/bid Invitation இணைய தளத்தில் இலவசமாக அல்லது பேராதனை சிரிமாவொ பண்டார நாயக்க மாவத்த இல. 1094 இல் அமைந்துள்ள தேசிய தாவரவியற் பூங்கா திணைக்கள தலைமையகத்தில் 2023.09.11 முதல் 2023.10.03 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மீளளிக்கப்படாத ரூ. 2000.00 தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

03. கேள்விப் பத்திரங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் முழுமையான உரிமை திணைக்கள பெறுகைக் குழவிற்கு உரித்தாவதுடன் இவ் அறிவித்தலில் அல்லது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்படும் அல்லது குறிப்பிடப்படாத இப் பெறுகை வேலைகளுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயங்கள் பற்றி தீர்மானம் எடுக்கும் உரிமை தேசிய தாவரவியற் பூங்காத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தானது இது பற்றிய மேலதிக விபரங்களை தொ. பே.இலக்கம். 081-2388654 மூலம் பிரதம கணக்காளரை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பாரிய அளவிலான பெறுகைக் குழு**
**தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களம்,**
**போராதனை.**
**2023.09.11**

---

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

## கேள்வி கோரல்

## 2023.08.31ம் திகதி பிரசுரமான கேள்வி கோரல் பத்திரிகை அறிவித்தலைத் திருத்துதல்

மேற்படி கேள்வி கோரல் அறிவித்தலின் முதலாம் பிரிவின் ஐந்தாம் இலக்கம் கீழ்க்காணுமாறு திருத்தப்படல் வேண்டும்.

| Project | Non Refundable Tender Fee Rs. | CIDA Grade | Estimated Cost Rs. (Ex. VAT) | Contract Period | Bid Security |
|---|---|---|---|---|---|
| • Extension of Existing Boundary Wall along the University Premises up to Student Hostel, Faculty of Technology, Pitipana, Homagama<br>CW/RE/FOT/01/2023 | 8,000.00 | C-4, C-5 or C-6 | 29.5 Million | 180 Days | 300,000.00 |

**தலைவர் - பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்**
**கங்கொடவில**
**நுகேகொடை.**

---

# விலைக்கோரல் அறிவித்தல்

## வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்

**விலைக்கோரல் இல. 079/T/2022**

## பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் – கட்டுநாயக்க, கொழும்பு சர்வதேச விமான நிலையம் – இரத்மலானை மற்றும் மத்தல ராஜபக்ஷ விமான நிலையம் – மத்தல எனும் விமான நிலையங்களுக்கு வளிச்சீராக்கி இயந்திரங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் சேவை முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா எனப் பரீட்சித்துப் பார்த்தல்

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரினால் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் - கட்டுநாயக்க, கொழும்பு சர்வதேச விமான நிலையம் - இரத்மலானை மற்றும் மத்தல ராஜபக்ஷ விமான நிலையம் - மத்தல எனும் விமான நிலையங்களுக்கு வளிச்சீராக்கி இயந்திரங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் சேவை முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா எனப் பரீட்சித்துப் பார்த்தல் எனும் பணிக்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படாத ஆறாயிரத்து ஐந்நூறு ரூபா (6,500.00) தொகையை விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் ஆவணங்களிலேயே விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் இதன்பொருட்டு விலைமனுதாராரால் வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவப் பிரிவிலிருந்து 2023-09-12ஆம் திகதி முதல் 2023-10-02ஆம் திகதி வரையில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் 3.00 மணி வரை விலைக்கோரல் ஆவணத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம். அதேபோல் மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை வழங்கல் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தில் அமைந்துள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். மேலும் விலைமனுதாரரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.

விலைக்கோரல்கள் 2023 ஒக்டோபர் 03ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் குறித்த விலைமனுக்கள் வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவப் பிரிவில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கோரல் பிணை முறியாக, இலங்கையில் செயற்படும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் மூன்று இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து முன்னூற்றி நாற்பது ரூபாவிற்கான (328,340.00 ரூபா) பெறுமதியான வங்கிப் பிணை முறியை வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவருக்குச் செலுத்தும் வகையில் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவையானால் வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கல் முகாமைத்துவப் பிரிவின் 011-2264103 / 011-2264128 எனும் தொலைபேசி இலக்கங்களில், head.scm@airport.lk எனும் மின்னஞ்சல் முகவரியில் அல்லது www.airport.lk எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க.**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

### கம்பஹா ஆதார வைத்தியசாலையின் OPD பிரிவிற்காக மற்றும் On Call கட்டிடத்திற்காக வளிச் சீராக்கல் இயந்திரத்தை வழங்கி பொருத்துதல்.

**கேள்வி இலக்கம். PRDA/WP/PRO/2023/70**

இவ் அதிகாரசபையின் கீழேயுள்ள கொள்வனவு செய்தலை மேற்கொள்வதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| S/N0. | Machine type | Quantity | Bid Bond | |
|---|---|---|---|---|
| | | | Cash (Rs) | Bank / Insurance Bond |
| 1 | Supply and Fixing 12000 BTU Invertor Air Conditioner with Dual Cool in "Singer", "Abans" Brand or Approved Equivalent with as per the Engineer instructions. | 33 | 80,000.00 | 160,000.00 |
| 2 | Supply and Fixing 18000 BTU Invertor Air Conditioner with Dual Cool in "Singer","Abans" Brand or Approved Equivalent with as per the Engineer instructions. | 02 | | |
| 3 | Supply and Fixing 24000 BTU Invertor Air Conditioner with Dual Cool in "Singer", "Abans" Brand or Approved Equivalent with as per the Engineer instructions. | 03 | | |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2023.09.11 முதல் 2023.09.25 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணைமுறி காசாக பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விப் படிவக் கட்டணம் ரூ. 1150.00 (அதிகார சபையின் பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) உற்பட்டு, கேள்வி ஆவணத் தொகுதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

04. கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் மற்றும் திறத்தல் 2023.09.26 பி.ப. 2.30 இற்கு இவ் அலுவலகத்தில் இடம்பெறுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதி நிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இல. 59, சென் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ.பே.இல: 011-4849825, 011-4849845**

# கேள்வி அறிவித்தல்

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## நகர அபிவிருத்தி அதிகார சபை

### கடவத்தை பலநோக்கு போக்குவரத்து நிலையத்தின் தரை தளத்தில் அமைந்துள்ள 09 (ஒன்பது) கடை அறைகளை 10 வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்குதல்

1.0 நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கடவத்தை நகர மத்தியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பலநோக்கு போக்குவரத்து நிலையக் கட்டிடத்தொகுதியின் தரை தளத்தில் அமைந்துள்ள 09 (ஒன்பது) கடை அறைகளை 10 வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கும் பொருட்டு கேள்விப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பின்வரும் அட்வணையில் காட்டப்பட்டுள்ள கடை அறைகளுக்கு உரித்தான அடிப்படை விலையை விட அதிகமாக விலைகளைச் சமர்ப்பிக்கும் விலைகளின் பிரகாரம் விற்பனைக் கூடங்களுக்கான கொள்வனவாளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

| கடை அறை இலக்கம் | பரப்பளவு (சதுர அடிகள்) | மாதாந்த வாடகை ரூபா | அடிப்படை விலை (கீ மணி) ரூபா | விலைக் கோரல் பிணை முறி (BID BOND) ரூபா |
|---|---|---|---|---|
| 2 | 196 | 13,250.00 | 1,168,500.00 | 55,000.00 |
| 4,5,6,13,14,15 | 195 | 12,700.00 | 1,120,000.00 | 53,000.00 |
| 12 | 117 | 7,900.00 | 696,000.00 | 33,000.00 |
| 16 | 117 | 8,100.00 | 714,000.00 | 34,000.00 |

2.0. கேள்விப்படிவத் தொகுதியொன்றுக்கு 2000.00 ரூபா வீதம், அதற்கு இயைபுடைய அரசாங்க வரித்தொகையுடன் செலுத்தி, பத்தரமுல்ல, செத்சிரிபாய, கட்டம் 1, அலுவலக இடப்பரப்பின் 6ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை 7ஆம் மாடியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவிற்கு அல்லது கம்பஹா, மேரி பிசோ மாவத்தை, 06ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கம்பஹா மாவட்டச் செயலகத்திற்குச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

3.0 ஒரு கேள்விப்படிவம் ஒரு கடை அறைக்கு விண்ணப்பிப்பதற்கு மாத்திரமே செல்லுபடியாகும். விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட கடை அறைகளுக்கு விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்ப்பதானால் அதற்காக வெவ்வேறாக கேள்விப்படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப்படிவங்கள் வழங்கப்படும் காலப்பகுதியில் பிரதான அலுவலகத்தின் பெறுகைப் பிரிவில் அல்லது கம்பஹா மாவட்டச் செயலகத்தில் இலவசமாக கேள்விப் படிவங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

4.0 கேள்விப் படிவங்கள் 2023-09-11ஆம் திகதி முதல் 2023-09-25ஆம் திகதி வரையில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும்.

5.0 பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் 2023-09-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை குறித்த நேரத்திற்கு முன் தலைவர், வருமான கேள்விச் சபை (சிறிய) நகர அபிவிருத்தி அதிகார சபை, நிதிப் பிரிவு, 6ஆம் மாடி, ''செத்சிரிபாய'', பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது பத்தரமுல்ல, செத்சிரிபாய, கட்டம் 1, அலுவலக இடப்பரப்பின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உள்ளிடல் வேண்டும் (கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கடவத்தை கடை அறைகளுக்காக விலைமனுக்களை சமர்ப்பித்தல்'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.) கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வதற்கான குறித்த நேரம் முடிவடைந்ததன் பின் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் சகல கேள்விப்படிவங்களும் திறக்கப்படும்.

6.0 கேள்வி தொடர்பான மேலதிக தகவல்கள், தெளிவுபடுத்தல் மற்றும் கட்டிட திட்டங்கள் தொடர்பில் பரீட்சிப்பதற்கு தேவையான விண்ணப்பதாரர்கள் இயைபுடைய விபரங்களை பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'', 7ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் அல்லது கம்பஹா மாவட்ட அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(தொலைபேசி இலக்கம்: 0112875916-20, நீடிப்பு 2681 அல்லது 0113560673 / கம்பஹா மாவட்ட அலுவலகம்: 0332234757)

**தலைவர்**
**வருமான கேள்விச்சபை (சிறிய)**
**நகர அபிவிருத்தி அதிகார சபை**
**6ஆம் மாடி, "செத்சிரிபாய",**
**பத்தரமுல்லை**

The Housewives' companion
Classifieds on
Daily News

# பெறுகை அறிவித்தல்

## உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் - 2023

### ஊவா மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்

01. ஊவா மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்திற்கு கீழ்க்காணும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன

| பெக்கேஜ் இலக்கம் | விபரம் | கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள அளவு | மீளளிக்கப் படாத கேள்வி மாதிரிப் பத்திர கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணை காசாக (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | Desktop Computers | 01 | 2,000.00 | 15,000.00 |
| | Photo Copy Machine | 01 | | |
| | A/C Machine (24000 BTU) | 05 | | |

02. மேற்படி அட்டவணையில் குறிப்பிடுமாறு கேள்வி மாதிரிப் பத்திரங்களை நிதியமைச்சின் www.promise.lk இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்வதற்கு முடியுமாறு, கேள்வி மாதிரிப் பத்திரங்களை 2023.09.11 முதல் 2023.10.02 வரை விநியோகிக்கப்படுவதுடன், அன்றே பி.ப. 2.00 இற்கு ஊவா மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் கூட்ட மண்டபத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல. 055-2231981ஐ தொடர்பு கொள்ளலாம்.

**தலைவர்,**
**ஊவா மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்,**
**3ம் மாடி**
**இல. 301, ஆர்.எச். குணவர்தன மாவத்த,**
**பதுளை.**

## மக்கள் வங்கி - கம்பஹா பிராந்திய தலைமைக் காரியாலயம்

# மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை - 2023

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் /சேவை மையங்களில் 30.06.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஒவ்வொரு கிளையின் முன்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை மீட்டுக்கொள்ளப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க் காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் **காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ஏல விற்பனை நிகழும் திகதி** | 14.10.2023 & 15.10.2023 | | | | |
| **இந்த திகதி வரை மீட்கப்படாத/ புதுப்பிக்கப்படாத நகைகள்** | 13.10.2023 | | | | |
| **ஏல விற்பனை கிளைகளின் பெயர்** | நீர்கொழும்பு | ஜா-எல | கம்பஹா | தெல்கொட | கிரிபத்கொட |
| **அடகு வைக்கப்பட்ட கிளைகள் பெயர்** | நீர்கொழும்பு<br>மரந்தகஹமுல<br>கொச்சிக்கடை<br>சீதுவ<br>கட்டுநாயக்க | ஜா-எல<br>கணேமுல்ல<br>வத்தளை<br>கந்தானை<br>பமுனுகம | கம்பஹா<br>மினுவங்கொட<br>மீரிகம<br>வேயங்கொடை<br>நிட்டம்புவ | தெல்கொட<br>கிரிந்திவெல<br>பூகொட<br>மல்வான<br>யக்கல | கிரிபத்கொட<br>றாகம<br>கடவத்தை<br>மஹர<br>களனி |
